ஏப்ரல் 05-11, 2004 24 பக்கங்கள் 16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## கூட்டமைப்புகளின் வெற்றி

## தமிழர் தாயகத்துக்கு மக்கள் அளித்த அங்கீகாரம்

# தேர்தலும் வன்செயல்களும்

தேர்தல் நடைபெறப்போகின்றது என்ற அறிவிப்பு வெளிவந்தவுடனேயே நாட்டில் பதற்றமும் பரபரப்பும் தொடங்கிவிடுவது



முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்.

வழமையான ஒரு விடயம்.

கட்சிரீதியான மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து படுகொலைகள் வரை செல்வது கடந்த கால கறைபடிந்த வரலாறு.

கடந்த தேர்தல்களைவிட இந்தத் தேர்தலில் வன்முறைகள் குறைந்துள்ளன என ஆய்வுக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

அப்படி இருந்தும் இனந் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் மட்டக்களப்பில் இரண்டு தமிழ் வேட்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மூன்று வேட்பாளர்கள் படுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர். மட்டக்களப்பு அரச அதிபர் சூட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



மட்டக்களப்பு தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி சுடப்பட்ட இடம்.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பலர் குண்டு வீச்சுத்தாக்குதலிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களிலும் காயம் அடைந்துள்ளனர். எங்கு வன்முறை இடம் பெறாது என கணிக்கப்பட்டதோ அங்கேயே கொலைச் சம்பவங்களும் கொலை முயற்சிகளும் கூடுதலாக இடம் பெற்றுள்ளன

இன்றைய நிலவரப்படி மட்டக்களபபு மாவட்டமே பதற்றத்துக்குள்ளான பகுதியாக தேர்தல் கண்காணிப்புக் குழுவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகள் தென்னிலங்கையிலேயே அதி உச்ச நிலையை அடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் சிறு மோதல் சம்பவங்களும் அத்துமீறல்களுமே அங்கு இடம்பெற்றுள்ளன என இறுதியாக கிடைத்த கணிப்புகள் தெரிவிக்கின்றன.


மொத்த வன்முறைச் சம்பவங்களுடன் நோக்கும் போது கிழக்கில் இடம் பெற்ற சம்பவங்கள் பாரதூரமானவை என்பதே உண்மை ஆகும்.

மட்டக்களப்பில் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து தமிழ் வேட்பாளர்கள் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதில் அச்சம் நிலவியது. தற்போது ராஜன் சத்தியமூர்த்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார். அதைத் தொடர்ந்து தமிழ்க் கூட்டமைப்பின் வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு பலமுறை கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. அவர் பிரசாரங்களை கைவிட்டு விட்டு வீட்டிலேயே முடங்கிவிட்டார்.

கொழும்பில் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இனந்தெரியாத துப்பாக்கி தாரிகளால் சுடப்பட்டார். அவர் மயிரிழையில் உயிர்தப்பினார். ஈ.பி.டி.பி உறுப்பினர் சங்கரன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலும் அவர் உயிர் தப்பினார். மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டு வந்த அரச அதிபர் மோனகுருசாமி மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி போன்றவை யாரால் மேற்கொள்ளப்பட்டன? என்பது மூடு மந்திரமாகவே இருந்து வருகிறது.

தமிழ்ப் பிரதிநிதிகள் மீது தாக்குதலை தொடுப்பதன் மூலம் தமிழர்கள் மத்தியில் ஒரு பதற்ற நிலையை ஏற்படுத்த சதியா? அல்லது தமிழர்களின் வாக்கு வங்கியை சிதறடித்து அவர்களின் ஒற்றுமையை குலைக்க திட்டமிடப் பட்ட சதியா? என்று தமிழர் தரப்பினர் தடுமாற்றம் அடைந்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தோன்றியுள்ளது.

தேர்தலகால வன்முறைச் சம்பவங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளில் விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வெறும் ஒரு சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய தேசிய முன்னணி மீது உச்சக்கட்டமாக 52 வீதமான குற்றச்சாட்டுக்கள் பொலிஸ் நிலையங்களில் பதியப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிராக 29 வீதமான குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டுள்ளன. தனி நபர்கள் மீது 14 வீதமான குற்றச்சாட்டுக்களும், பொலிஸார் மீது 2 வீதமான குற்றச்சாட்டுக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.



மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி காயப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் காட்சி

விடுதலைப்புலிகள் அமைப்பினர் மீது சேறு பூசும் விதத்தில் தென்பகுதியில் இனவாத சக்திகள் பிரசார நடவடிக்கைகளை முடக்கிவிட்டிருந்த போதிலும், அந்தப்பிரசாரங்களை முறியடிப்பதில் அவர்கள் மிகவும் கண்ணியத்துடன் நடந்துள்ளனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமைப்புக்குள் சிக்கல்கள் தோன்றியுள்ள போதிலும் அது மக்களை பாதிக்காத வகையில் அவர்கள் கவனமாக கையாள்கின்றனர் என்பது நிதர்சனமாகும்.

மட்டக்களப்பில் கொல்லப்பட்ட ராஜன் சத்தியமூர்த்தி கொலையை பகிரங்கமாக புலிகள் கண்டித்துள்ளனர். எனவே தமிழர் தரப்பின் மீது இந்தத் தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் யார்? கொழும்பிலே மகேஸ்வரன், மட்டக்களப்பிலே மோனகுருசாமி, சங்கரன் போன்றோர் மீது குறிவைக்கப்பட்ட அடுத்த டுத்த தினங்களில் ராஜன் சத்தியமூர்த்தி மீது குறிவைக்கப்பட்டது.

இருபது வருடகால யுத்தம் ஓய்ந்த ஒரு நிலையில் ஜனநாயக நீரோட்டத்தில் தமது ஒருமித்த அரசியல் சக்தியை ஓங்கி ஒலிக்கச் செய்ய தமிழர்களுக்கு கிடைத்த சரியான சந்தர்ப்பத்தை சிதறடிக்க தீய சக்திகள் கங்கணம் கட்டியுள்ளன.

யாழ். மாவட்டத்தில் தமிழர் கூட்டமைப்பைத் தவிர ஏனைய கட்சிகள் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு ஏதோ ஒரு சக்தி, அதாவது தம்மை இனங்காட்டாதவர்கள் மறைமுக அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றனர் என அங்கு போட்டியிடும் ஈ.பி.டி.பியினரும், சுயேச்சைக் குழுவும் குற்றம் சுமத்தியுள்ளனர் என தேர்தல் கண்காணிப்பு குழுவினர் தெரிவிக்கின்றனர். நேரடியான மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் பற்றி ஒரு சில குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன.

அவற்றை தேர்தல் வன்முறைகளுடன் சேர்க்கக் கூடிய பாரிய சம்பவமாக கருதமுடியாது. கட்சிசார்பற்ற தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களாகவே கருத முடியும்.

நாட்டில் என்றுமே இல்லாத வகையில் தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாடு, உள்நாடு அடங்கலாக 4604 கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டனர். அவர்களின் அறிக்கை தேர்தல் முடிவுற்று ஒரு சில தினங்களில் வெளியாகும். அதில் பல உண்மை விடயங்கள் வெளிவரும் என நம்பலாம்.

ஆ.வரதன்
எஸ்.எஸ்.ஆர்.

## வாசகர் இதயம் பேசுகிறது

*பா.பகீரதன் – மல்லாவி*

என்றென்றும் காதலுடன்
எல்லோர் நெஞ்சினிலே
சொர்க்க தங்கமாய்
கம்பீர நடை போட்டு
திங்கள் தோறும்
வட்டமிட்டு பறக்கும் பருந்து போல்
எம் உள்ளத்தில் இடம் பிடித்து
பல் சுவை செய்திகளை
சிந்தாமல் சிதறாமல் தந்து
கண்களால் கைது செய்யும்
வண்ண வண்ண படங் களையும்
வட புல, சினிமா செய்திகளையும்
தித்திப்புடன் தந்து வரும்
சுடர் ஒளியே உன் சேவை
துள்ளுவதே இளமை.

*தி.தீபதர்ஷன் – காலி*

என்றும் சுடர்விடும் அணையா தீபமாகிய சுடர் ஒளியே!

உனது பக்கங்களில் வரும் அனைத்து ஆக்கங்களும் மிகவும் நன்றாக உள்ளன. முக்கியமாக கவிதைப் புனலில் வரும் அனைத்து கவிதைகளும் மிக சிறப்பானவையாக உள்ளன. இதேபோல் என்றும் உன் ஆக்கங்கள் சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.




*முல்லையூர் – விஸ்மிதன்*

வாசகனின் வந்தனங்கள் உரித்தாகட்டும். உன் இதழைப் படித்தேன். ந.கோபிகிருஷ்ணனின் ''எதிர்பார்க்காத ஏமாற்றம்'' சிறுகதை பிடித்துவிட்டது. அத்துடன் ''உலகம் போற போக்கு'' எனும் சுருளியின் கட்டுரை படித்தேன் பண்புமிக்க இதழே! உன் படைப்புக்கள் இன்னும் மலர என் நல்லாசிகளை கூறி விடைபெறுகின்றேன்.


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

# அரசியல் அம்பலம்



## அரசனை நம்பிய நான் புருஷனை கைவிட்டேனே

''வயிற்றுப்பிள்ளையை நம்பி மடிப் பிள்ளையைக் கொன்ற கதையாகிவிட்டதே'' என்று அசந்துபோய் அமர்ந்து விட்டார் அந்த கோகுலத்தின் கிருஷ்ணன். அவருடைய கைகளில் தேசிய தமிழ்ப் பத்திரிகைகள். திரும்பத் திரும்ப அந்தப் பத்திரிகைகளில் வந்திருந்த தேர்தல் விளம்பரங்களையே பார்த்துக்கொண்டிருந்தார்.

''என்ன ஐயா இப்படி விளம்பரங்களைப் பார்க்கின்றீர்கள்? உங்களுடைய படத்தைத் தான் அதில் காணோமே'' என்றார் நண்பர்.

''வாங்க சார் இந்த நேரம் பார்த்து நீங்களும் வந்திட்டீங்க. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாகிப் போய்விட்டதே!'' என்று அலுத்துக்கொண்டார் அந்த கோகுலத்தின் கிருஷ்ணன்.

''அப்படி என்னா சார் மோசம் போய்விட்டீர்களா?'' என்று ஒன்றும் தெரியாதது போல் சீண்டிவிட்டார்நண்பர்.

''என்ன சார் உங்களுக்குத் தெரியாதா என்ன? எனக்கு அப்பவேதெரியும், இந்தப் பசங்க இப்படி காலைவாரி விடுவாங்கள் என்று. என்ன செய்வது எல்லாம் எனது கால கஷ்டம் தான்'' என்று லேசாக தலையைத் தட்டிக்கொண்டார் அந்த கிருஷ்ணன்.

''என்ன ஐயா இது? சின்ன வீடா பெரிய வீடா? சீச்சி சின்னப்பிரச்சினையா பெரிய பிரச்சினையா? எதுவானாலும் கவலைப் படாமல் ரொம்ப சிம்பிலாக எடுத்துக் கொண்டு சமாளிப்பீர்கள். இப்ப அப்படி என்ன தலை போற பிரச்சினை வந்து விட்டது?'' என்று ஏற்றிவிட்டார் நண்பர்.

''இங்க பாருங்க சார்! உங்களுக்குத் தெரியாதா என்ன? எவ்வளவு அருமையாகத் திட்டம் போட்டு இருந்தேன். அந்த மலைச்சந்திரனும் சகல மரியாதைகளுடன் உரிய இடம் தரப்படும் என்று உறுதி அளித்திருந்தார். என்னுடைய புத்தியை எதனால் அடித்துக் கொள்வது என்று தெரியவில்லை.

என்ன இருந்தாலும் மலைச்சந்திரன் உலகம் தெரிந்தவர். அரசியல் புரிந்தவர். எதிரியையும் மதிக்கத் தெரிந்தவர். ஏற்கனவே திட்டமிட்டபடி நான் அவருடன் சேர்ந்து இருந்தால் மலைச்சந்திரனுக்கு அடுத்த இடம் எனக்குக் கிடைத்திருக்கும்'' என்றார் அந்தக் கிருஷ்ணன்.

''இப்ப மட்டும் என்ன ஐயா தாராளமாகப் போகலாமோ!'' என்றார் நண்பரும்.

''இப்ப எப்படி சார் அந்த மனிதர் முகத்தில் விழிப்பது? வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வரை என்னை அங்கே இங்கே என்று இழுத்து அடித்தானுங்க. அண்டை நாட்டுத் தூதுவரைக் கூட எனக்குத் தூது அனுப்பிச் சமாதானம் பேசினாங்க. போனஸ் சீட், தேசியப்பட்டியல்அது, இது என்று ஆசை ஆசையா அள்ளி இறைச்சாங்க. இவங்களைப்பத்தி எல்லாம்தெரிந்த நானே ஏமாந்து போனேனே என்பது தான் எரிச்சலாக இருகிறதே'' என்றார் அந்த கோகுலத்தின் கிருஷ்ணன்.

''என்ன ஐயா என்னையும் போட்டுக் குழப்பி அடிக்கிறீர்களே. என்ன தான் நடந்தது? ''என்று மீண்டும் சீண்டிவிட்டார் நண்பர்.

''இன்னும் என்ன தான் நடக்கனும்? இந்தப் பேப்பரை நீங்களே பாருங்க. யார் யார் பேரை எல்லாம் போட்டு இருக்காங்க.நேற்று வந்தவன் பேர் கூட தேசியப்பட்டியலில் இருக்கு. ஆனால் என் பேரைக் காயோம். இதைவிட என்ன சார் வேணும். மாகாண சபைத் தேர்தல் வரத்தானே போகுது. அப்ப பார்ப்போம்.'' என்று மீசையை முறுக்கிவிட்டார் கிருஷ்ணபிரான்.

## கூட இருந்து குழி பறிக்கும் கும்பலாகிவிட்டதே

இரத்தினக்கல் விளையும் பூமியில் இம்முறை சத்தியமானகுமாரனுக்கு நல்ல வரவேற்பு இருந்தும் அதை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டாராம்.

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்பது போல் அந்த ஆளு ஆறுமுக சாமியோட உளறலால் இந்த குமரனின் காட்டில் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டதாம்.

ஆனால் மழைநீரை ஒன்றாகத் தேக்கி வைக்க அந்தக்குமரன் தேடிய பானைகள் எல்லாம் ஓட்டையாம்.

காட்டில் மழை பெய்தபோதும் பானை ஓட்டை என்பதால் அங்கே ஒழுகல்களும் அதிகரித்துவிட்டனவாம். இல்லாவிட்டால் இன்னும் கூடுதலாகப் பெற்றிருக்க முடியும் என்று ஆதங்கப்பட்டார் அந்தக்குமரனின் தீவிர ஆதரவாளரான ஒரு பெரியவர்.

''என்ன ஐயா அப்படி நடந்துவிட்டது? இப்படி ஆதங்கப்படுகிறீர்கள்'' என்றார் நண்பர்.

''வேற என்ன சார் முந்தி எப்படி எப்படி எல்லாமோ வாய் கிழிய திட்டித் தீர்த்தவர்கள் இப்ப செல்வாக்கு கூடவும் தானாக வந்து ஒட்டிக்கிட்டாங்க.'' என்றார் ஆதரவாளர்.

''என்ன ஐயா இப்படிக் கூறுகின்றீர்கள். ஒரு தேர்தல் என்றால் எல்லாரும் ஒன்னா சேர்ந்து வேலை செய்ய வேண்டும்'' என்றார் நண்பர்.

''நீங்க ஒன்னு சார்? நாங்க யாரையும் சேர வேணாம்னு சொல்லவில்லையே. ஆனால்இப்படி ஆதரவாக வேலை செய்ய வருபவர்கள் அல்லவா ஒருவரை ஒருவர் வெட்டிவிடுகிறார்கள். இது தான் கவலை'' என்றார் அந்த ஆதரவாளர்.

''ஐயாநீங்கசொல்லுவது ஒன்றும்புரியவில்லையே. கொஞ்சம் தெளிவாகக் கூறுங்களே'' என்றுசீண்டினார்நண்பர்.

''சார் ஒரு உதாரணம் சொல்லுறன். மஞ்சள் தோட்டம் என்பதை சிங்களத்தில் கூறினால் வரும் நகரத்துக்கு குமரன் வருவதாக இருந்ததாம். அதனால் மலைச்சந்திரனின் உண்மையான அதிகாரியும் ஆதரவாளர்களும் கூடிநின்றனராம்.

ஆனால் மலைச்சந்திரனின் கூடாரத்தில் இருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முன்னாள் நபர் ஒருவர் குமரனின் வண்டியில் ஏறிக் கொண்டு திசைமாறி அழைத்துச்சென்று விட்டாராம்.

இதனால் இப்பகுதியில் சிறிது சலசலப்பு ஏற்பட்டதாம்.'' என்றார் அந்த ஆதரவாளர்.

''அடடே இப்படி எல்லாம் நடந்து இருக்கா?''

''அது மட்டும் இல்லிங்க சார்! இறக்கை கட்டி வானைத் தொடும்அந்நகரிலும் இப்படிப் பல சம்பவங்கள் இடம்பெற்றனவாம்.

இரத்தினக்கல் விளையும் பூமியில் ராஜாதிராஜாவாக இருந்தவர், நம்பிவந்தவரை எல்லாம் நடுரோட்டில் விட்டு விட்டு ஆறுமுக சாமியின் கோயிலில்தஞ்சம் அடைந்துவிட்டார்.

இதனால் நடுரோட்டில் விடப்பட்டவர்களும், பொது மக்களின் செல்வாக்கை இழந்தவர்களும் கூட இந்த சத்தியமான குமரனுக்கு சில பாதிப்புக்களை ஏற்படுத்திவிட்டனராம்.

இரண்டு ஜனாதிபதிகளினதும் சமாதான நாயகனினதும் ஆசியையும் ஆதரவையும் பெற்றுள்ள இந்தக்குமரன் பிரசார நடவடிக்கையின்போது கொஞ்சம் கவனமாக இருந்திருந்தால் இதைவிட கூடுதலான ஆதரவுடன் வந்திருக்க முடியும்'' என்றார் அந்த உண்மையான ஆதரவாளர்.

இந்த ஆதரவாளர் கூறுவதிலும் உண்மை இருக்கத் தான் செய்கிறது.

## நீல வானம் செவ்வானமாக மாறலாமா?

மழைவிட்டாலும் தூறல் விடவில்லை என்ற கதையாகிவிட்டதாம் நீல மேகத்தில். இது எப்படித்தான் தீருமோ என்று கவலைப் பட்டார் பௌமியமானவர்.

''என்ன ஐயா நீங்கள் தான் வந்துவிடுவீர்கள் என்று அப்போதே கூறினார்களே! '' என்றார் நண்பர்.

''உண்மை தான் மாப்பிளே! ஆனால் இன்னும் உள்வீட்டுச்சண்டை ஓயவில்லையே! முந்திபாருங்க. எங்க பார்த்தாலும் ஒரே நீல மயம்.ஆனால் இப்ப பாருங்க, நீலத்தில் எல்லாம் சிவப்புச்சாயம் பூசிப்புட்டாங்க.

''என்ன ஐயா இயற்கையாகவே பச்சை நிறமான வெற்றிலைக்கே வெள்ளைச்சாயம் அடித்து சாதனை படைத்த பலே கைக்காரர்கள் இல்லையா நீங்கள்'' என்று சீண்டிவிட்டார் நண்பர்.

''என்ன மாப்புளே நீங்க எங்கேயோ போய்விட்டீர்கள். நான் சொல்லவந்தது என்னவென்றால் இந்த அனுராகத்தாரும், மங்கள மேகத்தாரும் மீண்டும் மரத்தில் ஏறிக் கொண்டார்கள்.

இந்த விமலவனோ, நானே ராஜா என்கிறான்.இவன் போறபோக்கைப் பார்த்தால் இந்த நீல மேகம் எல்லாம் செவ்வானமாகி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது'' என்றார் பௌமியமானவர்

அவருடைய அச்சமும் நியாயமானது தானே?

## ஒரே கோவிலா? வேண்டாம்; என்வழி தனி வழி!

''தேர்தல் காலத்தில் எத்தனையோ வித[மான] ருசிகரமான சம்பவங்கள் இடம் பெற்றன. [illegible], கொழும்பில் ஏற்பட்ட திருப்பம்தான் கொழும்பு வாக்காளர்கள் மத்தியில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டதாம். அதுதான் இப்போ கொழும்பில் பரபரப்பான கதை'' என்றார் அந்த யோகமானவர்.

''அப்படி என்ன ஐயா நடந்து விட்டது?'' என்று கேட்டார் நண்பர்.

''என்னசார்! நீங்களும் கொழும்பில் தானே இருக்கிறீர்கள். உங்களுக்கு அந்த அனுபவம் ஏற்படவில்லையா?'' என திருப்பிக் கேட்டார் யோகமானவர்.

''எத்தனையோ ருசிகரமான விடயங்கள் நடைபெற்றன. அதில் எதை எதை எல்லாம் நினைவில் வைத்துக் கொள்வது?'' என திருப்பிக் கேட்டார் நண்பர்.

''சார்! இந்த மகேஸ்வரப் பெருமான் தலைநகரில் தடம் பதித்த போது, மனோகரமான கணேசப் பெருமானுடன் சேர்ந்து கோயிலைக் கட்டினால் பக்தர் கூட்டம் நிறையவே வரும் என நண்பர்கள் ஆலோசனை கூறினார்களாம்.

மகேஸ்வரப் பெருமானுக்கும் கணேசப் பெருமானுக்கும் மிகவும் வேண்டிய சில நண்பர்கள் கணேசப் பெருமானிடம் போய் இணைந்து கோயில் கட்டும் விடயம் தொடர்பாகப் பேசினார்களாம்.''

''அடடா! இது ரொம்ப இன்ட்ரஸ்ட்டிங்கா இருக்கே'' என்று தூண்டி விட்டார் நண்பர்.

''மேலே கேளுங்கள் சார். இந்த கணேசப் பெருமான் என்ன சொன்னார் தெரியுமா?''

''சொன்னாத்தானே தெரியும்.''

''சொல்றேன் சார். 'நான் ஏற்கனவே தளம் வெட்டி அத்திவாரம் போட்டு, கோயிலையும் கட்டி எழுப்பி, எனக்கென மூலஸ்தானத்தையும் அமைத்துள்ளேன். இந்த நேரத்தில் வந்து என் தோளில் ஏறி சவாரி விடப் பார்க்கிறார்கள். அது சரிவராது. என் வழி' தனிவழி என்று முகத்தில் அடித்த மாதிரி கூறி விட்டாராம்.''

''அது சரி. இப்ப என்ன நடந்து விட்டதாம்?''

''சார், தேர்தல் தினத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன் இந்த கணேசப் பெருமானும், அவரது ஆதரவாளர்களும் தங்களுடைய போஸ்டர்களுடன் மகேஸ்வரப் பெருமானின் போஸ்டர்களையும் சேர்த்து வீடு வீடாகக் கொடுத்துக் கொண்டு சென்றார்களாம்.

இது என்னடா என்று பொது சனங்கள் ஆச்சரியப்பட்டனராம்.''

''பின்ன என்ன, தனிவழி சென்றவர் இப்போ மகேஸ்வரப் பெருமானின் படத்துக்குப் பூஜை போடுகின்றார் என்றால் அது மகேஸ்வரப் பெருமானுக்குக் கிடைத்த வரவேற்புத்தான் தனிவழியையும் மாற்றிவிட்டது போலும்'' என அனுபவஸ்தர் ஒருவர் கிண்டலாகக் கூறிவிட்டுப் போனாராம்.


இப்பொழுது வெள்ளவத்தையில்

சுடர் ஒளி உதயன் விளம்பர கருமபீடம்

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை எமது வெள்ளவத்தை 4C,6-1/1, (Fussells Lane) பசல்ஸ் லேன் இல் (பொலிஸ் ஸ்ரேசனுக்கு எதிராக) அமைந்திருக்கும் எமது விளம்பரக் கருமபீடத்திலும் கையளிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.
011 4 734401 – 3 , 011 2 399666 – 70

வெள்ளவத்தையில்
தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம்.
071 4801391



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஏப்ரல் 23 - 28 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஏப்ரல் 06, 07, ஆம்
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஏப்ரல் 10, 11, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஏப்ரல் 15 - 20வரை
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி

ஏப்ரல் 05 – 11, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401–6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## பொதுத் தேர்தலும் வாக்களிப்பும்

கடந்த சில வாரங்களாக பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டு வந்த இலங்கையின் 13 ஆவது பொதுத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது.

வழமையாக இலங்கையில் தேர்தல் என்றாலே வாக்களிப்பின் போதும் வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் போதும் வன்முறைகள் வெடிக்கும். கட்சி ஆதரவாளர்களிடையே மோதல்கள் ஏற்படும். அரசாங்கம் ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பிக்கும்.

அதனால்தான் இம்முறையும் பெரும் அளவில் வன்முறைகள் எதிர்பார்க்கப்பட்டன. என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று மக்கள் அச்சத்துடன் இருந்தனர். ஊரடங்கை எதிர்பார்த்து பெருமளவு உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தோரும் பலர். நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளை லாபமடித்த வர்த்தகர்களும் இல்லாமல் இல்லை.

ஆனால், முற்றிலும் எதிர்பாராத விதமாக பொதுத் தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றுள்ளது. ஊரடங்குச் சட்டம் கூட அமுல் செய்யப்படவில்லை.

தேர்தல் அமைதியாக நடைபெற்றதால் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்கிறார் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் மற்றொரு விசேட அம்சம், கூடுதலான மக்கள் வாக்களித்ததே. 75 சதவீதத்துக்கு மேலானவர்கள் வாக்களித்தனர். சில மாவட்டங்களில் 80, 85 சதவீதமானோரும் வாக்களித்துள்ளனர்.

அதாவது சமீப காலத் தேர்தல்களில் இல்லாதவாறு கூடுதலான மக்கள் வாக்களித்திருக்கின்றனர். அதே சமயம் வன்செயல்கள், வாக்கு மோசடிகள் என்று பெரும் அளவில் இடம்பெறவில்லை. இலங்கையில் ஜனநாயகம் வளர்ச்சி அடைந்து வருவதற்கு இது ஒரு நல்ல அறிகுறி.

கடந்த 27 வருடகாலத்தில் முதல் தடவையாக தேர்தல் அமைதியாக நடைபெற்றிருக்கிறது. இது நாட்டுக்குப் பெருமை தருகிறது.

குறிப்பிட்டுச் சொல்ல முடியாத சிறு, சிறு சம்பவங்களே இடம் பெற்றிருக்கின்றன. ஐந்து மாவட்டங்களில் இருந்தே தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் யாழ்ப்பாண மாவட்டமும் ஒன்று.

யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யும்படி ஈ.பி.டி.பியினர் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து இது வந்திருப்பதால் இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

சுயேச்சைக் குழுவின் தலைமை வேட்பாளர் ஆனந்த சங்கரியும் இதே குற்றச்சாட்டைச் சுமத்தி இருக்கிறார். அவரது குழு தேர்தலில் படு தோல்வி அடைந்திருக்கிறது.

வன்னிப்பகுதி மக்கள் இம்முறை பெரும் எண்ணிக்கையில் ஆர்வத்துடன் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். இதுவும் ஒரு சிறப்பு அம்சம்தான்.

யுத்தம் இல்லாத சூழ்நிலையில் வந்து வாக்களித்தது அவர்களுக்கு முதலாவது அனுபவம்.

வடக்கில் ஓமந்தையிலும் முகமாலையிலும் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் காலையில் இருந்தே பெரும் எண்ணிக்கையானோர் திரண்டு வந்து வாக்களித்தனர். அதேபோன்று திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் கட்டைபறிச்சான், மஹிந்தபுர இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் பெரும் அளவில் வாக்களித்துள்ளனர்.

மட்டக்களப்பில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களும் பட்டிருப்பு, பாலமுனை, மண்டூர், மருதங்கேணி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களித்தனர்.

மொத்தத்தில் இம்முறை தேர்தலின் போது மக்கள் நடந்து கொண்ட விதம் பாராட்டுக்குரியது. ஜனநாயக வளர்ச்சிக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இனிவரும் தேர்தல்களிலும் இது தொடர வேண்டும்.

ஜனநாயக பாரம்பரியங்களை சிறப்பாகக் கடைப்பிடித்துவரும் நாடுகளுக்கு இலங்கை ஒரு முன்மாதிரியாக திகழ வேண்டும்.

# வடக்கிலும் தெற்கிலும் கூட்டமைப்புகள் வெற்றி

## முஸ்லிம் மக்களின் வாக்குகள் சிதறல்

கடந்த ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி, பாதுகாப்பு அமைச்சு, ஊடகத்துறை, உள்துறை அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் ஜனாதிபதி திடீர் என அபகரித்துக் கொண்டதை அடுத்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஆரம்பித்த அதிகாரப் போராட்டம் தற்பொழுது முக்கிய கட்டத்தில் வந்து நிற்கிறது. அனைவரும் கடந்த சில வாரங்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த, இந்த அதிகாரப் போராட்டத்தின் உச்சக் கட்டமான பொதுத் தேர்தல் முடிவடைந்து விட்டது. தற்பொழுது ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரம் அடைந்து வருகின்றன.

ஜனாதிபதி தலைமையில் 9 கட்சிகள் அடங்கிய சுதந்திரக் கூட்டமைப்பு இந்த தேர்தலில் கூடுதல் ஆசனங்களைப் பெற்றிருப்பது எதிர்பாராத ஒன்றாகும். இந்த தேர்தலில் மற்றும் ஒரு முக்கிய அம்சம் தமிழ் கூட்டமைப்பு அமோக வெற்றி ஈட்டியதும் – முதல் தடவையாக தேர்தலில் போட்டியிட்ட ஜாதிக ஹெல உறுமய கட்சி கணிசமான ஆதரவைப் பெற்றதும் தான்.

கடந்த தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அடுத்ததாக தென் இலங்கையில் மூன்றாவது பெரிய கட்சியாக இருந்தது ஜே.வி.பி. சுதந்திரக்கூட்டமைப்புடன் இணைந்து கொண்டதை அடுத்து ஜாதிக ஹெல உறுமய தென் இலங்கையில் மூன்றாவது அரசியல் கட்சியாக உருவெடுத்து இருக்கிறது. தென் இலங்கை மக்களின் சிந்தனை எதிர்காலத்தில் எப்படி இருக்கப் போகிறது என்பதற்கு இது ஓர் அபாய சமிக்ஞை என்றே கூறவேண்டும். ஆகவே பெரும்பான்மைச் சிங்களவர்களின் தென்னிலங்கையிலும் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கிலும் எதிரும் புதிருமாக ஒன்றுக்கு ஒன்று முரணான தீர்ப்புகளை மக்கள் வழங்கி இருக்கின்றார்கள்.

### தமிழ் மக்களின் அங்கீகாரம்

தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழீழத்தின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வலியுறுத்தியும் ஈழத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளே என்பதை வெளிப்படுத்தியும் தேர்தலில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு மிகப் பெரிய வெற்றியை அளித்தது மூலம் தமிழர் தரப்பு தனது எதிர்பார்ப்பையும் ஒரு தலைமையின் கீழான தனது ஐக்கியத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறது. அத்துடன் தமிழ் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு அமோக ஆதரவு வழங்கியது மூலம் கடந்த இரண்டு வருட காலமாக ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய சமாதானப் பேச்சுக்களுக்கும் தமிழ் மக்கள் அங்கீகாரம் வழங்கி உள்ளனர்.

### அரசின் முக்கிய பொறுப்பு

2002 பெப்ரவரி 24 ஆம் திகதி ரணில் அரசும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் செய்து கொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்னும் அமுலில் இருந்து வருகிறது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறாத போதிலும் யுத்த நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இனி பதவி ஏற்கும் அரசின் முக்கிய பொறுப்பு யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து அமுலில் வைத்திருப்பதும் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதும்தான்.

தேர்தல் பிரசாரங்களின் போது ரணில், சந்திரிகா ஆகிய இரு தென்னிலங்கைத் தலைவர்களும் சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவு தெரிவித்தே உரையாற்றி வந்தனர். ஆனால், தென் இலங்கை மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வழங்கிய ஆதரவு மூலம் ரணில் நடத்திய சமாதான முயற்சிகளை நிராகரித்து விட்டனர் என்பதில் சந்தேகம் இல்லை.

புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம், வடக்கு – கிழக்கில் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக புலிகள் தயாரித்து அரசிடம் வழங்கிய திட்ட வரைபு எல்லாம் சிங்கள மக்களினால் நிராகரிக்கப்பட்டு விட்டன.

ஜே.வி.பியும் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கூட்டமைப்புக்கு மட்டும் அன்றி பிக்குகளின் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் தென் இலங்கையில் கிடைத்த ஆதரவு தென் இலங்கை மக்கள் பேரினவாதப் போக்கில் அதிக நாட்டம் கொண்டுள்ள கட்சிகளுக்கே ஆதரவு அளித்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஜனாதிபதி புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்று கூறினாலும் தென் இலங்கையில் பேரினவாதச் சக்திகளுக்கு கிடைத்த ஆதரவு தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையும், எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக அவநம்பிக்கையையுமே தோற்றுவித்துள்ளது.

### ஐ.தே.முன்னணியின் தோல்விக்கு காரணம் என்ன?

இம் முறை தேர்தலில் இடம்பெற்றுள்ள மற்றொரு முக்கிய அம்சம் தபால் மூல வாக்களிப்பில் ஐக்கிய தேசிய முன்னணி எந்த ஒரு தொகுதியிலாவது வெற்றி பெறாதது ஆகும். வழமையாக வெற்றி பெறும் மஹியங்கனைத் தொகுதியில் கூட ஐக்கிய தேசிய முன்னணி தோல்வி அடைந்து விட்டது. மூன்று மாதங்களுக்குள் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, இளைஞர்கள் யுவதிகள் அனைவருக்கும் தொழில் வாய்ப்பு என்ற சுதந்திரக் கூட்டமைப்பின் கோஷம் அரச ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் மத்தியில் எடுபட்டு விட்டது போன்றே தெரிகிறது.

இந்த தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு போதிய ஆசனங்களைப் பெறத் தவறியதுக்கு வேறு பல காரணங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

கடந்த இரண்டு வருட காலமாக நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும், பொருளாதாரத் துறையை முன்னேற்றுவதிலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்ட முயற்சிகள் சரியான வழியில் பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லப்படவில்லை. தேர்தல் பிரசாரங்களின் போது நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள் எதனையும் ரணில் நாட்டு மக்களுக்கு அளிக்கவில்லை. நாட்டின் உண்மை நிலையைத் தெரிவித்தே அவர் வாக்குக் கேட்டார்.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி தனது பிரசாரங்களுக்காக அரச ஊடகங்களைப் பயன்படுத்தத் தவறியதும் அது இழைத்த தவறுகளில் ஒன்று என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அரசுமீது அரச ஊடகங்கள் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு அரச ஊடகங்கள் மூலமே பதில் அளித்திருக்க வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணி அரசு தனது பிரசாரங்களைத் தனியார் ஊடகங்கள் ஊடாகவே நடத்தியது. ஜனாதிபதி கடந்த நவம்பர் மாதம் அரச ஊடகங்களையும் பொறுப்பேற்றது தேர்தல் ஒன்றை மனதில் கொண்டுதான் என்று நம்பப்படுகிறது.

நகரப்புறங்களிலும் சிறுபான்மையினர் வாழும் மாவட்டங்களிலுமே ஐக்கிய தேசிய முன்னணி இம்முறை தேர்தலில் ஆதரவைப் பெறமுடிந்தது. அரச எதிர்ப்புப் பிரசாரங்கள் கிராமப்புறங்களை இலகுவாகச் சென்றடைந்து விட்டன. ஆனால், அரசின் மறுப்பும் விளக்கமும் உரிய முறையில் அவர்களுக்கு எடுத்துக் கூறப்படவில்லை.

### சிதறடிக்கப்பட்ட முஸ்லிம் வாக்குகள்

இம்முறை தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகள் ஓரளவு சிதறடிக்கப்பட்டு, பிரதிநிதித்துவங்கள் சில இழக்கப்பட்டிருக்கின்றன.

முன்னைய நாடாளுமன்றத்தில் மொத்தம் 26 முஸ்லிம் எம்.பிக்கள் இடம் பெற்றிருந்தனர். இவர்களில் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் 17 முஸ்லிம்கள் எம்.பிக்களாகப் பதவி வகித்தனர். முஸ்லிம் காங்கிரஸ் 12, நுஆ 3, ஐ.தே.க.2 என்ற அடிப்படையில் அந்த ஆசனங்கள் அமைந்திருந்தன.

இம்முறை தேர்தலில் வடக்கு – கிழக்கில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே முஸ்லிம் எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். திகாமடுல்ல மாவட்டத்தில் பேரியல் அஷ்ரப், அதாவுல்லா, ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், அஸீஸ் போன்றோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு சுமார் 35 ஆயிரம் வாக்குகளைச் சேர்த்துக் கொடுத்து, அங்கு சிங்களப் பிரதிநிதித்துவங்களை அதிகரிக்கத் துணைபோய் இருக்கின்றனர்.

இதனால் திகாமடுல்ல மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் மூலம் இரண்டு பிரதிநிதிகளே தெரிவு செய்யப்பட்டனர். மட்டக்களப்பில் ஒரு முஸ்லிம் பிரதிநிதித்துவம் முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக கிடைத்திருக்கிறது. அதேவேளை சுதந்திரக் கூட்டணியில் போட்டியிட்ட எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தோல்வியடைந்தார்.

திருமலையில் முன்னர் கிடைக்கப்பெற்ற 2 முஸ்லிம் ஆசனங்களும் இம்முறை ஒன்றால் குறைந்தது. அதேபோன்று வன்னியிலும் ஒரு முஸ்லிம் பிரதிநிதித்துவமே கிடைக்கப் பெற்றிருக்கிறது.

வடக்கு – கிழக்கில் முஸ்லிம் ஆசனங்கள் இழக்கப்பட்டமை கவலைக்குரிய விடயமாகும் என்கின்றனர் முஸ்லிம் சமய பெரியார்கள். முஸ்லிம் அரசியல் தலைமைகளின் அதிகாரப் போட்டி காரணமாக பிரிந்து நின்று தேசியக் கட்சிகளில் சிலர் போட்டியிட்டமையே இதற்குக் காரணம் ஆகும்.

### தமிழ் கூட்டமைப்பின் அமோக வெற்றி

இதனை எழுதும் போது தமிழ்க் கூட்டமைப்புக்கு 20 க்கும் மேற்பட்ட ஆசனங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிடைத்த பெரிய வெற்றி இது ஆகும். 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 18 ஆசனங்கள் கிடைத்தன. அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவர் ஆனார். இப்படியான ஒரு நிலைமை இனியும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற தந்திரத்துடனேயே எந்த ஒரு தமிழ்க் கட்சியும் எதிர்க்கட்சியின் தலைமைப் பதவியைப் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா விகிதாசாரத் தேர்தல் முறையைக் கொண்டு வந்தார். இதன் மூலம் தமிழ்க் கட்சி ஒன்றின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நினைத்தும் பார்க்க முடியாது. ஆனால், விகிதாசார தேர்தல் முறை மற்றும் ஒரு வாய்ப்பை தமிழர் தரப்புக்கு அளித்திருந்தது. சிறுபான்மைக் கட்சி ஒன்றின் ஆதரவுடனேயே பெரும்பான்மைக் கட்சி ஒன்று ஆட்சி அமைக்க வேண்டிய நிலைமையை இந்த விகிதாசாரத் தேர்தல் முறை ஏற்படுத்திவிட்டது.

இந்த தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தை ஏகமனதாக அங்கீகரித்து விட்டனர். வடக்கு, கிழக்கு என்ற பிரதேச வாதத்துக்கே இடம் இல்லை என்பதை இத் தேர்தல் மூலம் மக்கள் நிரூபித்து விட்டனர் என்று தெரிவிக்கிறார் வன்னி மாவட்டத்தில் தெரிவான தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

### தேர்தல் முறை கேடுகள்

இம்முறை கண்டி, திகாமடுல்லை மாவட்டங்களில் தேர்தல் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவிக்கிறார். திகாமடுலை மாவட்டத்தில் சில வாக்களிப்பு நிலையங்களில்வாக்குப் பெட்டிகளில் வாக்குகள் எண்ணும் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது. சாய்ந்த மருது, மத்திய முகாம், சம்மாந்துறை, மஜீத்புரம், ஒலுவில் ஆகிய வாக்களிப்பு நிலையங்களிலேயே முறைகேடுகள் இடம்பெற்றன என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### நம்பிக்கை இழப்பு

ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தப் போவதாக ஐக்கிய தேசிய முன்னணியும் சுதந்திரக் கூட்டமைப்பும் தெரிவித்த போதிலும் தமிழ் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் நம்பிக்கை இழந்தே உள்ளனர். ஆனால், எக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அக்கட்சியுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தத்தயார் என்று புலிகள் தெரிவித்துள்ளனர். சமாதானப் பேச்சுக்களில் தலைவிதி தென் இலங்கையிடமே இருந்து வருகிறது.

ஜே.வி.பியினதும் மற்றும் வகுப்பு வாதச் சக்திகளினதும் ஆதரவைப் பெற்றுள்ள சுதந்திரக் கூட்டமைப்பு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லுமானால் பெரும் சவால்களையே அது எதிர்நோக்க வேண்டிவரும்.

-சஞ்சாரன்-




# அழகியான ஆண்!



மானிடப்பிறப்பில் ஆண் பிறப்பு சிறந்ததா பெண் பிறப்பு சிறந்ததா என்று வேலையில்லாமல் சண்டை பிடித்துக்கொண்டிருக்கின்ற உலகத்தில் தான், நான் ஆண் பிறப்பா, பெண் பிறப்பா? எனக்கு எதனுள் அங்கீகாரம் என்று தெரியாமல் தவிக்கின்ற சில ஜென்மங்களும் உள்ளனர். இத்தகையவர்களை எமது சமூகமும் தீண்டத்தகாதவராகக் கருதி ஒதுக்கி வைப்பதுண்டு.

ஆனால் அண்மைய காலங்களில் அவர்கள் நவீன மருத்துவ முறை மூலம் தமது உறுப்புகளை சீர்செய்து ஆணாகவோ, பெண்ணாகவோ மாறக்கூடிய வசதி ஏற்பட்டு இருக்கிறது. சீனாவில் மட்டும் 500 பேர் ஆணாக இருந்து பெண்ணாக மாறியுள்ளனர்.

அருகிலுள்ள பெண்ணும் முன்பு சென் என்ற பெயருடன் ஆணாக இருந்தவள் தான்.

பருவ வயதை எட்ட எட்ட சென்னிடம் ஆண் தன்மை குறைந்து, பெண் தன்மை அதிகரித்தது. இதனால் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பெண்ணாக மாறினாள். சென் லில்லி என்று பெயரையும் மாற்றிக்கொண்டாள்.

அண்மையில் சீனாவில் நடந்த அழகிப் போட்டியில் கலந்து கொள்ள சென் தன் பெயரை பதிவு செய்தாள். 18 முதல் 27 வயது வரையிலான மணமாகாத கன்னிப் பெண்கள் போட்டியில் பங்கு பற்றலாம் என்பது தான் அழகிப்போட்டி விதியாக இருந்தது.

சென்னுக்கு 24 வயது தான். எனவே தான் அவள் தனது பெயரைப் பதிவு செய்திருந்தாள்.

ஆனால் போட்டியில் அவள் கலந்துகொள்ள முடியாது எனப் போட்டியாளர்கள் மறுத்து விட்டனர். பிறப்பால் அவள் பெண் அல்லர் என்றும் சொல்லப்போனால் அவள் ஒரு வகையில் செயற்கைப் பெண் என்றும் ஒரேயடியாக கூறிவிட்டனர்.

அழகு ராணிக்கனவுகளுடன் மேடையேறிய சென்னுக்கு இது ஒரு பெரிய ஏமாற்றமாகத்தான் அமைந்து விட்டது.

''நான் பெண் என்று சான்று பெற்றுள்ளேன். அதன் பிறகு போட்டியிலிருந்து என்னை நீக்கியது அநீதி'' என்று குமுறினாள். ஆயினும் பயனேதுமில்லை.



# புதிய அரசாங்கமும் புதிய சவால்களும்

புதிய அரசாங்கம் அமையப்போகிறது. இப்புதிய அரசாங்கம் சிக்கலான சவால்களோடு காலத்தை ஓட்ட வேண்டியுள்ளது. தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இன மக்களின் அரசியல் அபிலாஷைகளை சமாதானப் பேச்சுக்களில் எடுத்தாள வேண்டிய உடனடியான சவால் முன்னுக்குள்ளது. நாட்டின் நிர்வாகம், அத்தியாவசிய சேவைத் துறைகளை எடுத்துக் கொண்டால் போக்குவரத்துத்துறை, மருத்துவத்துறை சார்ந்த பணியாள் தொகுதியினர் தத்தமது தீர்க்கப்படாத பிரச்சினைகளோடு காத்திருக்கின்றனர். அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா என்ற தீவிர ஆதங்கம் அவர்களிடம் குடிகொண்டுள்ளது.

அத்துடன் ஏனைய அரசாங்கத்துறைகள் சார்ந்த பணியாளர்களும், வெவ்வேறு பிரச்சினைகளு டன் காத்திருக்கின்றனர். தமக்கு கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைக்கக் காத்திருக்கின்றனர். எரிபொருள், மின்சக்திபோன்றசக்தித்துறைகள்தேவைக்கு ஏற்ப நுகரக்கூடியளவில் உள்ளன. கட்டுப்பாடு இல்லை. விவசாயக் கொள்கைகள் கல்விக் கொள்கைகள் தொடர்பான சிக்கல்களும் உள்ளன.

## பொருளாதார அபிவிருத்தி

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உறுதியளிக்கப்பட்ட வெளிநாடுகளின் நிதியுதவி கிடைப்பது விடுதலைப் புலிகளின் தீர்மானங்களிலேயே தங்கியுள்ளது. அமையப்போகும் புதிய அரசாங்கத்துடன் எவ்வகையான புதிய அணுகுமுறைகளை விடுதலைப்புலிகள் மேற்கொள்ளப் போகிறார்கள் என்பது அனைவராலும் எதிர்பார்க்கப்படும் விடயமாகும். 'சமாதானமா? போரா? என்பதை சிங்களவாக்காளர்களே தீர்மானிக்க வேண்டும்' என்று புலிகள் முன்பே அறிவித்திருந்தனர்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான தீர்வு யோசனைகளை புதிய அரசாங்கம் பேச்சு மேசையில் எவ்வகையில் கையாளும் என்பதிலேயே 'போரா? சமாதானமா என்பது தங்கியுள்ளது.

எந்தக் கட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு, புதிய அரசாங்கத்துக்கு தேவையென்ற நிலைமை இருந்து வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகளின் ஏக பிரதிநிதித்துவத்தையும், புலிகளின் இடைக்காலத் தீர்வுக்கான யோசனைகளையும் பேச்சுக்கு அடிப்படைகளாக ஏற்க வேண்டுமென புதிய அரசாங்கத்திடம் பலமாக வலியுறுத்தவே செய்வார்கள் என்பதனாலும் — பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக் வேண்டிய பொருளாதார நிர்ப்பந்தம் உள்ளதனாலும் — விடுதலைப்புலிகளின் அழுத்தங்களின் திசைவழியாக மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய தேவை புதிய அரசாங்கத்துக்கு ஏற்படத் தான் போகிறது?

## முஸ்லிம் தனித்தரப்பு

அதேவேளை தேர்தல் பிரசார காலத்தில் முஸ்லிம் அரசியல் கட்சிகள், பேச்சுவார்த்தையில் தமக்கான தனியான பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியே வந்தனர். பிரதான கட்சிகளோடு தேர்தல் உடன்பாடுகளைச் செய்து கொண்ட வேளைகளிலும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இவ்விடயத்தை முதன்மைப்படுத்தியிருந்தனர்.

ஆகையினால் பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம் தனித்தரப்பு பிரசன்னத்தை புறக்கணிக்க அரசியல் சக்திகளின் ஆதரவு தேவையற்றதாக தொடர்ந்தும் இருக்கும் என்று கூறிவிட முடியாது. ஆகையினால் இவ்விடயம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதில் புதிய அரசாங்கம் சிறு நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி வரும்.

## சமாதானத்தை ஜே.வி.பி எப்படி விற்கும்?

இலங்கை அரசியலில் கணிசமான செல்வாக்கை செலுத்தியுள்ள ஜே.வி.பி, சமாதானப்பேச்சுவார்த்தையை எவ்வகையில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் 'விற்கப்போகிறது' என்ற கேள்வி எழுகிறது. அதிகாரப் பகிர்வுக்கோ, சமஷ்டித் தீர்வுக்கோ தமது ஆதரவு இல்லையென முன்பிருந்தே கூறி வரும் ஜே.வி.பி தலைவர்கள் தமக்குக் கிடைக்கக் கூடிய அரசியல் அந்தஸ்தினூடாக விடுதலைப்புலிகளுடன் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எவ்வகையான விளைவுகளை ஏற்படுத்துவார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஏற்கனவே தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நிலைப்பாடுகளுக்கும் ஜே.வி.பியின் தலைவர்கள் முன்வைத்த நிலைப்பாடுகளுக்கும் இடையில் தெளிவான வேறுபாடுகள் இருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி– ஜே.வி.பி கூட்டு ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் பல விடயங்களில் முரண்பட்டது.

மீண்டும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்கும் அமையப்போகும் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவைக்கும் இடையில் பூரணமான ஒத்துழைப்பு நிலவுவது என்பதும் அல்லது நிலவ முடியாத சூழ்நிலை எழுவது என்பதும், நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பேச்சுவார்த்தைகளில் கடுமையான சாதக பாதகங்களை ஏற்படுத்தப்போகின்றன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இம் முறை பேச்சுவார்த்தைகள் தொடக்கப்படுவதில் முக்கிய முடிவுகளை மேற்கொள்ளுவார் என்று எதிர்பார்க்கலாம்.

## முகாமைத்துவச்சீராக்கம் பெறும் புலிகளின் படைகள்

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் அவர்களது இராணுவக்கூட்டமைப்பு சார்ந்த ஒரு முகாமைத்துவச் சீராக்கத்தை கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ள முனைகிறார்கள். மட்டக்களப்பு– அம்பாறை பிராந்தியத்தின் தளபதியாக விருந்த கருணா, தான் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செல்லப்போவதாக அறிவித்ததிலிருந்து எழுந்த நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை. மட்டக்களப்பு– அம்பாறை மாவட்டங்களின் பொதுத் தேர்தல் நடவடிக்கைகளில் இந்த நெருக்கடி தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

கருணா தொடர்பாக, அமையப்போகும் புதிய அரசாங்கம், எவ்வகையான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும் என்பதை விடுதலைப்புலிகளின் தலைமையகம் வன்னியிலிருந்து அறிவிப்பதற்கு அப்பால் புதிய அரசாங்கம் செயற்பட முடியாத நிலை ஏற்படும் என்றே தெரிகிறது. கருணா தொடர்பாக அரசாங்கம், தனது அரசாங்க இராணுவ நலன்களுக்கு சாதகமான இரகசிய நடவடிக்கைகள் எவற்றையாவது நகர்த்த முனைவதாக விடுதலைப்புலிகளின் தலைமையகம் வன்னியில் உணரும் பட்சத்தில், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அது பாரிய நெருக்கடிகளை விளைவித்து விடும்.

கருணா தமிழினத்துக்கும் அமைப்புக்கும் துரோகம் இழைத்ததனால் அவர் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டார் என்று விடுதலைப் புலிகள் ஏற்கனவே அறிவித்துவிட்டனர். அதனடிப்படையில் தமது கிழக்கு மாகாண இராணுவக்கட்டமைப்பு சார்ந்த முகாமைத்துவச் சீராக்கங்களை செய்வதற்கு ஏதாவது இடையூறுகள், புதிய அரசாங்கத்திடமிருந்து விளைவதை, விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் விரும்பாது என்றே தெரிகிறது. விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் 'கருணா விவகாரம்' என்பது மிகவும் முன்னுரிமை கொடுக்கப்படும் அவர்களது முகாமைத்துவ ஒழுங்குபடுத்துகை விடயமாகும். இவ்விடயத்தை சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்படும் ஒரு விடயமாக மாற்றுவதற்கு புதிய அரசாங்கம் முனையலாம்.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக தமது நிர்வாக அணுகுமுறைகளூடாக கிழக்கு மாகாண நிலைவரங்களைக் கையாள விடுதலைப்புலிகளின் தலைமை விரும்பலாம். இவ்விடயத்தில் அமையப்போகும் புதிய அரசாங்கம் ஒத்துழைப்பது என்பது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்பாக விடுதலைப்புலிகளைச் சமாதானப்படுத்த அவசியமாகிறது.

ஏனெனில், ஏற்கனவே கருணா விவகாரத்தை அணுகுவதில் ஜனாதிபதியும் அவரது நேரடிக்கட்டப்பாட்டின் கீழுள்ள படைத்தளபதிகளும், சில அதிருப்திகரமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியுள்ளதாக புலிகள் தரப்பு ஊடகங்களும் பேச்சாளர்களும் கவலை கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

## உயர்பாதுகாப்பு வலயம்

வடபுலத்தைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரசியல் — இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை 'உயர்பாதுகாப்பு வலயம், என்பதாகும். தென்மராட்சியின் ஒரு பகுதி, வடமராட்சியின் கிழக்கு, வலிகாமம் வடக்கு ஆகிய பகுதிகளில் காணப்படும் உயர்பாதுகாப்பு வலயங்களை புதிய அரசாங்கம் உடனடியாக அகற்றுமா? சரி உடனடியாக முடியாவிட்டாலும் ஆரம்பிக்கப்படும்என எதிர்பார்க்கப்படும் பேச்சுவார்த்தைகளின் ஒரு கட்டத்திலாவது உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்படுமா? அல்லது குறைத்தல் போன்ற விடயங்களை ஜே.வி.பி அரசியல்வாதிகளும் ஏனைய தீவிர சிங்கள அரசியல்வாதிகளும் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் உணர்வு பூர்வமான விடயங்களாக மாற்றப் போகிறார்கள் என்பதில் இது ஓரளவு தங்கியுள்ளது.

மீள்குடியேற்றம், விவசாயம், மீன்பிடி போன்ற தொழிற்துறைகளின் வளர்ச்சி, தமிழ் மக்களின் அபிவிருத்தி என்பன போன்ற மனிதாபிமான எண்ணக்கருக்களின் அடிப்படையில் இவ்விடயத்தை புதியஅரசாங்கம்'அணுகினால் மாத்திரமே தீர்வுகள் கிடைக்கலாம். அவ்வாறில்லாமல் ஒரு அரச இராணுவத்தின் இராணுவ தந்திரோபாய நலன்கள் முதன்மைப் படுத்தப் படுவதாக இருந்தால் சமரசப் பேச்சுக்களின் தொடர்ச்சியிலோ, இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான தீர்வுகளுக்கான உகந்த சூழ்நிலை உருவாக்கத்திலோ உயர்பாதுகாப்பு வலயங்கள் சாவு மணியை அடித்துவிடும் ஏதுக்களே உள்ளன.

## நெருக்கடிகள் தோன்றும்

பாரிய அரசியலில் பொருளாதாரச் சவால்களுக்கு முகம் கொடுக்கப் போகும் புதிய அரசாங்கத்தின் பிரதமர், அமைச்சரவை அங்கத்தவர்கள், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆகியோருக்கிடையில் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்தத்துக்குக் காரணமான புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியவற்றைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதில் எவ்வகையான நெருக்கடிகள் வந்து சேரும்என்பது அடுத்துவரும் சில வாரங்களில் தெளிவாகிவிடும். பொறுத்திருப்போம்.

**யாழ் ஆத்மா**

---

# பௌத்த குருமார்களின் தலையீடும் அமைதிக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்களும்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுப்பதற்கும் தீர்வுகள் பல சந்தர்ப்பங்களில் மழுங்கடிக்கப்பட்டதற்கும் காரண கர்த்தாக்களாக இருந்தவர்களில் பெரும் பங்கு பௌத்த குருமார்களையும் சாருகிறது.

மதகுருமார்கள், மக்களின் பாதுகாவலர்கள், அஹிம்சைவாதிகள், விருப்புவெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள், அரசியல் மற்றும் அற்பசொற்ப ஆசைகளைக் கடந்தவர்கள் என்றெல்லாம் கருதிய ஒரு காலம் இருந்தது. ஆனால், இன்று பலபௌத்த மதகுருமார்கள் அதற்கு அப்பாற்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். அரசியலில் ஈடுபடுவது, ஆட்சிபீடம் ஏறுவது என்று துறவிகளுக்கு பொருத்தமற்ற அத்தனைகளை ்ம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தான் அன்று அமைதிக்கு வேட்டு ்வைத்து இனப்பிரச்சினை தோன்ற க :ரணமாக இருந்தவர்கள். இன்று ஆட்சிபீடம் ஏறத்துடிக்கின்றனர்..

இலங்கையின் அரசியல் வரலாற்றை பொறுத்தவரை பௌத்த குருமார் பல்வேறு மாற்றங்களுக்கு காரணமாக இருந்துள்ளனர். அரசியல் தலைவர்களின் படுெ ாலைகளுக்கும் காரணமாக இருந்திருக்கின்றனர்.

சுதந்திரத்துக்குப் பின்பு 1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தின் பின்பே பௌத்த பிக்குகளின் தலையீ் அரசியலில் அதிகரித்தது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் பிலிப் குணவர்த்தனா அமைச்சராக நியமிக்கப்பட்ட போது பௌத்த குருமார் அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். மகாதேசாதிபதியாக ஒரு பௌத்தர் இருக்க வேண்டும் என்பதிலும் பௌத்த குருமாரின் பின்னணி இல்லாமல் இருந்திருக்் முடியாது நியாயமான தமிழ்மொழி உபயோக மசோதா, மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதா ஆகியவற்றிக்கு முன்னணியில் நின்று எதிர்ப்புத் தெரிவித்தவர்களும் பௌத்த குருமார்தான். 1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்தி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது அ் றகும் பௌத்த குருமாரின் எதிர்ப்பு இருந்தது. இலங்கை – இந்திய ஒப்பந்த ் கிழித்தெறியப்படவேண்டும் என்று நாடாளுமன்றத்துக்கு முன்பாகவும் நகரின் முக்கிய வீதிகளிலும் ஊர்வலங்களை நடத்தினர்.

மேலும் இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியே ற வேண்டும் என்று கோரியவர்களும் பௌத்த பிக்குகள்தான். அப்பொழுது ஜனாதிட தியாக இருந் ஆர்.பிரமேதாச இந்த விடயததில் மிகவும் உறுதியாக இருந்ததுக்கு பக்க துணையாக இருந்தவர்களும் இவர்கள்தான்.

இலங்கையின் அரசியலில் காலத்துக்குக் காலம் இடம்பெற்ற மாற்றங்களுக்கும் திருப்பங்களுக்கும் பௌத்த மதம் முக்கிய காரணியாக இருந்திருக்கிறது. நாட்டை ஆட்சி செய்த எந்தவொரு அரசியல் தலைவரும் பௌத்த மதத்தை அசட்டை செய்து விட்டு ஆட்சி நடத்தியதாக வரலாறு இல்லை.

தற்பொழுது இலங்கை வரலாற்றில் என்றும் இல்லாதவாறு மற்றும் ஒரு சம்பவமும் இடம்பெற்றுள்ளது. 'ஹெல உறுமய' என்ற பெயரில் பௌத்த பிக்குமார் பொதுத் தேர்தலில் போட்டியிட்டதுதான். 'ஹெல உறுமய' பொதுத்தேர்தலில் படுதோல்வியைத் தழுவிக்கொண்ட போதிலும் பௌத்த குருமாாகளின் மனநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றம் நன்கு தெரிகிறது. ஆட்சியாளர்களுக்கு கடந்த காலங்களில் ஆலோசனை கூறியும் அவர்களுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வந்த பௌத்த குருமார்களுக்கு தற்பொழுது நாட்டின் ஆட்சியை நடத்தும் சிந்தனை உருவாகி இருக்கிறது.

**எஸ்.எஸ்.ஆர்**

# கண்ணில் வரும் கட்டி பூனை வால் மருந்தா?

**கேள்வி:— வயது 18. ஆண். எனது கால் விரல் இடுக்குகள் சதா அவிந்துகொண்டே இருக்கின்றன. பாதணிகள் அணிந்தால் கால் துர்நாற்றம் வீசுகிறது. சிகிச்சை சொல்லவும்.**



பதில்:—உங்கள் நோய்ATHLETES FOOT- எனப்படும். ஒரு பூசண (FUNGUS) த்தினால் இது ஏற்படுகிறது. பொதுவான குளியலறை —கழிப்பிடங்களை உபயோகிப்பதனால் தொற்றக்கூடியது. பாதங்கள் அடிக்கடி வியர்க்கும். உடல்வாகுள்ளவர்களுக்கு இலகுவில் ஏற்படக்கூடியது.

பாதங்களை அடிக்கடி கழுவி துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும்-CLOTRI-MAZOLE- கிறீமை பாதிக்கப்பட்ட இடங்களில் பூசி வேண்டும். மூடிய பாதணிகளை உபயோகிக்காமல், காற்றோட்டமுள்ள சான்றில், செருப்புகளை உபயோகித்தல் நல்லது. சாதாரணமாக ஒரு வாரத்தில் குணமானாலும் திரும்பித் திரும்பி வரக்கூடிய வாய்ப்பு உண்டு. சப்பாத்து உபயோகிப்பதானால்—-FUNGAL DUSTING POWDER ஐ உள்ளே தூவி உபயோகிக்கலாம்.

**பெண். வயது.20. எனக்கு அடிக்கடி கண்கட்டி வருகிறது. மருந்து செய்தால் போய் விடும். வந்தால் வேதனை அதிகம். பூனையின் வாலால் கண்களை தடவினால் கண் கட்டி வராது என்கிறார் என் பாட்டி. ஆலோசனை தரவும்.**

பதில்:— கண் இமைகளில் — கண் மயிர் அடியில் ஏற்படும் தொற்றுக்கள் — கட்டிகளாகி வேதனை தந்து ஓரிரு நாட்களில் ஆறிவிடும். உடைந்து உள்ளிருந்து சீழ் போகாவிட்டால் அவை கட்டிகளாக இமையில் அமர்ந்து விடுகின்றன. இதனை மருத்துவ மொழியில் STY என்பார்கள். வெளித் தொற்றுகளால் ஏற்படும் நோய் இது. கண்களை நாம் அடிக்கடி கசக்குவதால் இத் தொற்று உண்டாகிறது. நாம் ஏன் அடிக்கடி கண்களை கசக்கும் நிலை ஏற்படுகிறது? எமக்கு பார்வைக் குறைபாடு ஏற்பட்டால் — தூரத்துப் பார்வை, அல்லது அண்மைப் பார்வை சரியாக தெரியாமல் கண்ணை எம்மை அறியாமலே கசக்குவோம். எனவே உங்களுக்கு ஏதாவது பார்வைக் குறைபாடுகள் உள்ளனவா என்று முதலில் கண் டாக்டர் ஒருவரிடம் காட்டி அறிந்துகொள்ளுங்கள். அப்படி குறைபாடு இருந்தால் அதனை கண்ணாடி அணிவதன் மூலம் நிவர்த்தி செய்து கொண்டால் இந்தக் கண் கட்டிகள் வரவே வராது. மேலும் தலையில் சொடுகு, கண் மயிர்களில் சீலைப் பேன், ஊட்டச்சத்து குறைபாடு என்பனவும் கண்கட்டிகளுக்கு காரணமாகின்றன. கம்பியூட்டர்களில் வேலை செய்பவர்கள் தொடர்ந்து திரையை பார்த்துக்கொண்டிருப்பதால் கண்கள் சோர்வடைந்து கண்களை கசக்குவர். இதற்குக் காரணம் தரமான கம்பியூட்டர்திரை இல்லாதவேளை — அதில் தெரியும் எழுத்துக்கள் ஒளிர்ந்து — அணைந்து தெரிந்து கொண்டிருப்பதால் தான். இப்படியான தொழில்புரிவோர் தரமான கம்பியூட்டர் திரைகளை உபயோகிப்பதால் கண் கட்டிகளிலிருந்தும் வேறு தொல்லைகளிலிருந்தும் தம்மைக் காப்பாற்றலாம். மற்றும் பாட்டியின் பூனை வைத்தியத்தில் எவ்வளவு உண்மையிருக்கிறதோ இல்லையோ, ஆனால் இதுவரை எதுவித விஞ்ஞான அடிப்படையோ விளக்கமோ காணப்படவில்லை.

**கேள்வி:— ஆண். வயது22. எனது பாதங்களில் சிறுகட்டிகள் இருக்கின்றன. நடந்தால் அவை வலிக்கின்றன. வைத்தியர்கள் இவற்றை 'ஆணி' என்கிறார்கள். சிலவேளைகளில் நான் சவர அலகினால் இவற்றை வெட்டுவதுண்டு. சிலவாரங்களுக்கு வலி இல்லாமல் இருக்கும். பின்னர் அவை வளர்ந்து வலியைத் தரும். இவை குணமடைய வழி உண்டா?**

பதில்:— இந்தக் கால் ஆணிகள்PLANNER WARTS என்று மருத்துவர்களால் அழைக்கப்படுகின்றன. இவை ஒருவித வைரஸ் கிருமிகளால் உருவாகின்றன. பொதுவான குளியலறை, சமையலறைகள் உபயோகிப்பவர்கள் இந்தத் தொற்றுக்களுக்கு ஆளாகின்றனர். இவற்றை அறுவைச்சிகிச்சை முறையில் விறைக்க வைத்து அந்த இடத்தை அகழ்ந்து எடுத்து விடுவார்கள். அறுவைச்சிகிச்சைக்கு

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> **இலவச மருத்துவ ஆலோசனை**
> 'சுடர் ஒளி'
> 85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு - 14

பயந்தவர்கள் —SALCYLIC ACID பிளாஸ்ரர்களை ஆணியில் ஒட்டி மெல்ல மெல்ல அவை கழன்று விழவைப்பார்கள். ஆணிகள் சிறிதாக இருந்தால் பிளாஸ்ரர் சிகிச்சை பயனளிக்கக் கூடியது. ஆனால் இவற்றை நாம் சவர அலகினால் வெட்டி வைத்தியம் பார்ப்பது அபாயகரமானது. முக்கியமாக நீரிழிவு நோயுள்ளவர்கள் கால் ஆணிகளுக்கு தாங்களே வைத்தியம் பார்த்து, சவர அலகினால் சீவி, தொற்றுண்டாகி — தமது காலையே இழந்த சரித்திரங்கள் நிறையவே உண்டு. எனவே நீரிழிவு நோய்க்காரர்கள் — கால் ஆணிகளை நிச்சயம் தகுதி வாய்ந்த வைத்தியர்களிடம் காட்டி அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும். அவர்களுக்கு பிளாஸ்ரர் சிகிச்சை உகந்தததல்ல.

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்'**
**05—04—2004 முதல் 11—04—2004 வரை**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் செவ்வாய் ஆட்சி பெற்ற சுக்கிரனுடன் இரண்டாம் வீட்டில் இருப்பது விசேஷம். மேலும் சந்திரனின் நட்சத்திர சாரத்தில் செயல்படுவது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிகள் நல்ல முறையில் அமையும். சென்ற இடமெல்லாம் மதிப்பு இருக்கும். (2,7) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. இருப்பினும் 7இல் கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல நாலாம் வீடு தீய கிரகங்களால் தாக்கப்படாமல் இருப்பது நல்லது. வீடு வாகனம் லாபம் தரும். தொழில் கிரகம் சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். ராசியை குருபார்ப்பதால் சகல பிரச்சினைகளும் தீரும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிக்குரிய சந்திரன் ராசியில் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் சந்திரனின் நட்சத்திர சாரத்தில் செயல்படுவது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 12 இல் ராகுவுடன் கூடி இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7க்குரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். தொழிலுக்குரிய சனி இரண்டாம் வீட்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். தொழில் ஸ்தானத்தைக் குரு பார்ப்பது நல்லது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 10இல் இருப்பது நல்லது. ஆனால், நீசம் அடைவது நல்லதல்ல. ஆனால், தனது சொந்த நட்சத்திரத்தில் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்லமுறையில் அமையும். வீடு, வாகனம் கைமாறப் பலன் உண்டு. இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் உண்டு. (7, 10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் சனி இருப்பது மன அமைதி பாதிக்கலாம். புதனை சனி பார்ப்பது நல்லதல்ல. (5,12) உரிய சுக்கிரன் 12இல் ஆட்சியாக இருப்பது சயன காலம் உண்டு. குழந்தைகள் கல்வியில் முன்னேறுவர்.

**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் 7முதல் 9வரை மகரம் முதல் மீனம் வரை சஞ்சரிக்கும். எட்டாம் வீட்டைக் கடக்கும் காலம் அதாவது வாரத்தின் மத்திய பகுதியில் நன்மை தராது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இரண்டுக் குரிய சூரியன் 10இல் ராகுவோடு இருப்பது நல்லதல்ல இருப்பினும் குரு இரண்டில் இருப்பதால் கையில் காசு இருக்கும். நாலுக்குரிய சுக்கிரன் 11இல் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய சனி 12இல் இருப்பதால் திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. இரண்டில் குரு இருப்பதால் பலனில் மாறுதல் ஏற்படலாம். 10இல் சூரியன் உச்சமாக இருப்பதும் 10க்குரியசெவ்வாய் 11இல்இருப்பதும் தொழில் துறை முன்னேறும்.

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் ராகு | சுக்கிரன் செவ்வாய் | சனி |
| | செவ்வாய் ரோகிணி சந்திரன்<br>சுக்கிரன் ரோகிணி சந்திரன்<br>புதன் ரேவதி புதன்<br>சூரியன் அச்சுவினி கேது<br>குரு பூரம் சுக்கிரன்<br>சனி திருவாதிரை ராகு | | |
| | | | குரு |
| | | கேது | |

பங்குனி 30முதல் சித்திரை வரை

சந்திரன் மகரம் முதல் மீனம் வரை

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 9இல் உச்சமாக இருப்பது நல்ல பலனைச் செய்யும். அங்கு ராகு இருப்பது நல்ல பலனைக் குறைக்கலாம். மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம், தடைப்படலாம். (2,11)உரியபுதன் 8இல் நீசமாக இருப்பதால் கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு நல்லதல்ல. நண்பர்களுக்கு கூடாது. (4,9) உரிய செவ்வாய் ஆட்சி பெற்ற சுக்கிரனுடன் 10இல் இருப்பதால் வீடு, வாகனம் வாங்க விற்க ஏற்ற காலம். பெற்றோருக்கு நல்லகாலம் என்று கூற முடியாது. 10ஆம் வீடு பலமாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். 7க்குரிய சனி 11இல் இருப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும் திருமணவாய்ப்பு உண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 7இல் இருப்பது விசேஷம். ஆனால், பலவீனமாக இருப்பது நல்லதல்ல. இருப்பினும்தன் சொந்த நட்சத்திரமான ரேவதியில் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல காலம். (4,7) உரிய குரு 12இல் மறைவது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய புதன் நீசமடைவதால் தொழில்துறை பாதிக்கலாம். 10இல் சனி இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. புதனை சனி பார்ப்பது கூடாது.

**துலாம்: சித்திரை 3,4. சுவாதி. விசாகம் 1,2,3.**

ராசிநாதன் சுக்கிரன் தன் இன்னுமொரு வீட்டில் ஆட்சியாக இருப்பது சிறப்பானது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. எடுத்த முயற்சி நல்லமுறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,7) உரிய செவ்வாய் 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. ராசியில் கேதும் 7இல் ராகுவும் இருப்பது நல்லதல்ல. மன அமைதியைப் பாதிக்கலாம். 4க்குரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். 11இல் குரு இருப்பதால் நல்லபலனை எதிர்பார்க்கலாம். குரு சுகம் உண்டு.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் ஆட்சி பெற்ற சுக்கிரனுடன் 7இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும் (2,5) உரிய குரு 10 இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 4க்குரிய சனி 8 இல் இருப்பது வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பத்துக்குரிய சூரியன் 6 இல் இருப்பினும் அங்கு ராகு இருப்பினும் 10இல் குரு இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9இல் இருப்பது சிறப்பானது. மேலும் சுக்கிரனின் நட்சத்திரமான பூரத்தில் இருப்பது நல்லபலனைச் செய்யும். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தெய்வபக்தி இருக்கும். இரண்டுக்குரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். 4இல் புதன் நீசமானாலும் 4க்குரிய குரு 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,10) உரிய புதன் பலம் குறைந்தாலும் 4இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். தொழில்துறை முன்னேறும். ஆனால், 7இல் சனி இருந்து குருவையும் ராசியையும் 10ஆம் வீட்டையும் பார்த்து நல்லதல்ல. பலனில் மாறுதல் ஏற்படலாம்.

**மகரம்: உத்தரடாம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,**

ராசிநாதன் சனி 6இல் இருப்பது நல்லது. ஆனால், ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். குரு 8இல் மறைவதும் நல்லதல்ல. ஆனால், இரண்டாம் வீட்டை குரு பார்ப்பதால் கையில் பணம் இருக்கும். (4,11) உரிய செவ்வாய் 5இல் சுக்கிரனுடன் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். சகோதரங்களுக்கு நல்லது. நண்பர்களுக்கும் நல்லபலன் உண்டு. 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். ஆனால், குரு 8இல் இருப்பதால் நிலைமையில் மாறுதல் ஏற்படலாம். 10க்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

ராசிக்குரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. மேலும் ராகுவின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் கூடாது. எடுத்த முயற்சி பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். ஆனால், குரு 7இல் இருந்து ராசியை பார்ப்பது ஆறுதல் உண்டு. (2,11) உரிய குரு 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரர்களுக்கு நல்லது. நண்பர்களுக்கும் நல்லது. (4,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் அமையப் பலன் உண்டு. 7க்குரிய சூரியன் 3இல் ராகுவோடு இருப்பது கூடாது. இருப்பினும் 7இல் குரு இருப்பதால் திருமணபலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும் தொழில் கிரகம் செவ்வாயில் இருப்பதால் புதன் இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. ஆனால், சுக்கிரன் நட்சத்திர சாரத்தில் செயல்படுவது ஒரு அளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் இருக்காது. (2,9) உரிய செவ்வாய் 3இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் கூடாது. (4, 7) உரிய புதன் ராசியில் நீசமாக இருப்பதால் மேலும் சனி பார்ப்பதால் வீடு, வாகனம் லாபம் தராது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குருவையும் 10 இல் வீட்டையும் 10ஆம் அதிபதி புதனையும் சனி பார்ப்பதால் தொழில்துறை பாதிக்கலாம். குரு சுகம் குறைவதால் நல்லபலனை எதிர்பார்க்க முடியாது.

# வடபகுதி தமிழர் வெளியேற்றமும் தொடரும் கருணாவின் அராஜகமும்

இராணுவ நடவடிக்கை காரணமாகத் தான் கடந்த காலங்களில் தமிழர்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர். ஆனால் இப்போது சமாதான காலத்தில்— மக்கள் நிம்மதியாக வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்தில் -- தமிழர்கள் இடப்பெயர்வு ஒன்றுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கையின்போது இயலுமானவரை தமது பணம் மற்றும் பெறுமதி மிக்க பொருட்களை எடுத்துச் சென்றவர்கள் இப்போது 500ரூபா பணத்துடன் விரட்டப்படுகின்றனர். இந்த அவல நிலை மட்டக்களப்பில் ஏற்பட்டிருக்கிறது. வடபகுதித் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காகவே இவர்கள் விரட்டப்படுகின்றனர்.


## வைத்தியசேவை பாதிப்பு

இதுவரை— இது எழுதப்படும் வரை— ஐயாயிரம் பேர் மட்டக்களப்பில் இருந்து வெளியேறிவிட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பில் நீண்ட காலமாக வசித்து வந்தவர்களும் இவர்களில் அடங்குவர். தனி மனிதன் கருணாவுக்கு இவர்கள் இழைத்த ஒரே குற்றம் வடபகுதியைச்சேர்ந்த தமிழர்கள் என்பது தான்.

இதுவரை வெளியேறியவர்களில் டாக்டர்கள், வர்த்தகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள, தொழில்நிமித்தம் மட்டக்களப்பில் வசித்து வந்த அரச அதிகாரிகள் என்று பட்டியல் நீண்டுகொண்டுபோகிறது.

31ஆம்திகதி புதன்கிழமை அதிகாலைக்கு முன்னர் மட்டக்களப்பில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்று கருணா தரப்பினரால் இவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் இருந்து வடபகுதியைச் சேர்ந்த 6 வைத்திய நிபுணர்களும் 5 டாக்டர்களும் வெளியேறிவிட்டதால் மட்டக்களப்பு வைத்தியசாலைச் சேவைகள் பெரும் அளவில்


கருணாவின் பகுதியில் ஒருவர்காவல் கடமையில்

பாதிக்கப்பட்டுள்ளன. பொலீஸ் பாதுகாப்புடன் இவர்கள் வெளியேறியது, அங்கு நிலைமை எவ்வளவு மோசம் என்பதைக் காட்டுகிறது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து வெளியேறியோரில் மருந்தாளர்கள், தொழில்நுட்பவியலாளர் ஆகியோரும் அடங்குவர்.

மட்டக்களப்பில் உள்ள பிரபல வர்த்தகர்கள் பலரது வர்த்தக நிலையங்கள் கருணா குழுவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஏற்பட்ட தகராறு காரணமாக செங்கலடியில் வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. வடபகுதியைச் சேர்ந்த தொழில் அதிபர் ஒருவரின் ஆடைத் தயாரிப்பு நிலையம் மூடப்பட்டதால் 100க்கு மேற்பட்டவர்கள் தொழில் இழந்துள்ளனர்.

மட்டக்களப்பு அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று பிரதேச வாதம் கதைக்கிறார் கருணா. ஆனால் இன்று மட்டக்களப்பில் நடைபெறுவது என்ன? மட்டக்களப்பின் அபிவிருத்திக்கு பெரும் பங்கு வகித்தவர்கள் தான், வடபகுதித் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக விரட்டி அடிக்கப்படுகின்றனர்.

தமிழர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயலாற்ற வேண்டிய நேரத்தில் கருணா செய்திருக்கும் வேலையால் தென்னிலங்கைச் சமூகம் கைகொட்டிச்சிரிக்கிறது.

கடந்த 20 வருட காலமாக சிந்திய இரத்தம் வீணாகிவிடுமோ என்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கான உள்ளங்கள் ஏங்கிக்கொண்டிருக்கின்றன.

## அச்சுறுத்தல்கள்

கருணா குழுவின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி மட்டக்களப்பில் இருந்து வெளியேறியோரில் பலர் வவுனியாவுக்கும், கொழும்புக்கும் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து வவுனியா வந்து சேர்ந்த வர்த்தகர்களில் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், செங்கலடியில் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் தமது வர்த்தக நிறுவனம் இருப்பதாகவும், கருணாவின் குழுவைச் சேர்ந்த ஒருவர் தனது கடையைப் பூட்டித்திறப்புகளை எடுத்துச்சென்றுவிட்டார் என்றும்கூறினார். எந்த ஒரு பொருளையும் எடுத்துச்செல்லக்கூடாது என்று தான் அச்சுறுத்தப்பட்டதாகவும் இவர் கூறினார்.

மட்டக்களப்பில் உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றிய ஒருவர் கூறுகையில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டக்களப்பில் திருமணம் செய்தாலும் அவர்களும் மட்டக்களப்பில் இருப்பதற்கு கருணா குழு அனுமதிக்கவில்லை என்று கூறினார்.

## பொலீஸார் அசமந்தம்

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இப்படியான பல சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் பொலீஸார் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று வவுனியாவுக்கு வந்தவர்கள் முறையிடுகின்றனர்.

மேல் இடத்தில் இருந்து தமக்கு உத்தரவு வரவில்லை என்றே பொலீஸார் தெரிவித்தார்கள் என்றும் இவர்கள் கூறினர்.

பொலீஸார் கருணாவின் பக்கமா, கருணா படையினருடன் சேர்ந்து செயற்படுகின்றாரா என்று மட்டக்களப்பில் இருந்து வெளியேறியோர் கேட்கின்றனர்.

இந்த மக்களை மட்டக்களப்பில் இருந்து வெளியேற வேண்டாம் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையானது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால் கருணா தரப்பு தமது நிலைப்பாட்டில் தீவிரமாக இருப்பது தான் வேதனை.

மகாமுனி

## சொற்சிலம்பம் போட்டி இல.102

சொற்சிலம்பம் 102 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஏப்ரல் 11ஆம் திகதி ஆகும். விடைகள் ஏப்ரல் 18 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 25 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.100க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.102

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| | ■ | 9 | 10 | | | ■ | |
| ■ | 11 | | | | ■ | 12 | ■ |
| 13 | | | ■ | 14 | 15 | | 16 |
| 17 | | ■ | 18 | | | ■ | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | | | | ■ | 22 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.100

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | 2 ச | 3 வ | ழ | 4 மை | ■ | 5 மா | 6 ஓ |
| 7 க | டை | சி | ■ | 8 தா | 9 ரா | ள | ம் |
| ம் | ■ | 10 ய | 11 வ | ன | ம் | ■ | ம |
| ■ | 12 வ | ம் | ச | ம் | ■ | 13 த | ம் |
| 14 நீ | லி | ■ | ந் | ■ | 15 அ | லை | ■ |
| தி | ■ | 16 சோ | த | ர | 19 ன் | ■ | 17 த |
| 18 ப | வ | ள | ம் | ■ | 20 ப | 21 த | வி |
| 22 தி | ட | ம் | ■ | 23 அ | ன் | றி | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல.102

**இடமிருந்து வலம்**

1. ஆம்பல்.
4. காலம் தாழ்த்து.
7. தாரம்.
8. விசாலமான.
9. சார்பானது;பாதகமற்றது.
11. ஜன்னல்.
13. உள்ளீடு அற்றது. சப்பி.
14. அரைச்சந்திரன்.
17. ஒரு தானிய வகை.
18. கல் வைத்து வீசும் கருவி.
19. உடல். சீவனற்றது.
20. கச்சேரி. சபையில் நடப்பது.
21. நிலத்துக்குக் கீழிருந்து கிடைக்கும் பொக்கிஷம்.
22. விடை.

**மேலிருந்து கீழ்**

1. திருமணமாகாத இளம்பெண்.
2. கூரிய எல்லை. முயற்சி செய் என்றும் பொருள்படும்.
3. தலைமை வகிப்பவர்.
4. விடாய்.
5. நிலத்தில் காணப்படுவது. கல்லுக்குப்பின் வந்தது.
6. மண் குன்று/மேடு/களம்.
8. செருக்கு.
10. பெருக்கல் குறி.
11. உச்சப் பெறுபேற்றை எட்டுதல்/ நிலைநாட்டுதல்
12. ஒரேயளவான
13. அச்சிடுகை.
15. வலிமை/பலம்.
16. விஷ்ணுவுக்கு இப்படியும் ஒரு பெயர்.
18. சமுத்திரம்.
19. கழித்தல் குறி
20. மறைவில் தீட்டுவது.

## சொற்சிலம்பம்-99 பரிசு பெறுவோர்.

1. அ.நொயலின் ஜன்சியா,
   சென் பீற்றர்ஸ் ஒழுங்கை,
   நவாலி தெற்கு,மானிப்பாய்.
2. திருமதி. எஸ்.வி.ஜெகநாதன்,
   18—2/5 கொலிங் வூட் பிளேஸ்,
   கொழும்பு—06.
3. த.ஜெகான் ஒஸ்ரின்,
   மே/பா தீபன் மருந்தகம்,
   முல்லைசாலை,புதுக்குடியிருப்பு
   முல்லை.

## பாராட்டுப்பெறுவோர்


1. பி.சுபாயினி,
   தேராவில் தெற்கு,
   உடையார்கட்டு.
2. த.ரஜிதரன்,
   நீதிமன்ற வீதி,
   திருகோணமலை.
3. ந.சுரேந்திரன்,
   வட்டக்கச்சி,
   கிளிநொச்சி.
4. செல்வி. பவானி சின்னப்பன்,
   இல.48/15,
   அட்டன்.
5. செல்வி.ப.மீரா,
   தாமோதரம்பிள்ளை வீதி,
   சாவகச்சேரி.
6. திருமதி. ப.செல்லத்துரை
   புலோலி மேற்கு,
   புலோலி.
7. வி.இராஜவினோதன்,
   துன்னாலை வடக்கு,
   கரவெட்டி.
8. அ.பாலசிங்கம்,
   அலெக்ஸ் வீதி,
   கோண்டாவில் வடக்கு.
9. ச.பாலசூரியன்,
   18/5, குடியிருப்பு,
   வவுனியா.
10. ரி.ராமசாமி,
   100,பிரதான வீதி,
   மட்டக்களப்பு.

# பேச்சு சுதந்திரத்தை பாதுகாக்கத் துடிப்பு!




பேச்சு சுதந்திரம் எத்தகையது என்பதை நமது நாட்டுமக்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். எல்லாம் பொதுத்தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் தந்தபாடம்தான். ஆயினும் மேல் நாட்டவர்கள் பேச்சு சுதந்திரத்தைப் பேணுவதில் துடிப்பு மிக்கவர்களாக இருக்கின்றார்கள். பேச்சு சுதந்திரத்துக்கு எதிராக இயங்குவோரைக் கண்டித்து, ''கிறீன் பீஸ்'' இயக்கத்தினர் அண்மையில் பாரீஸிலுள்ள பஸ்டில்லா சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியகாட்சி.


# உலக அழகியை மறந்து அத்வானி மீது ஆர்வம்



உலக அழகி ஐஸ்வர்யாராயின் அழகிய தோற்றப் பின்னணியில் காட்சிதர இந்த முதியவர் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்துபோயிருப்பது எதற்காக? கன்னியாகுமரியில் நடைபெற்ற ஒரு தேர்தல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படம் இது. நடைபாதையில் சுவர்மீது ஒட்டப்பட்டுள்ள ஐஸ்வர்யாராயின் படத்தின் முன் அமைதியாக அமர்ந்து இந்தியாவின் துணைப்பிரதமர் எல்.கே. அத்வானியின் பேச்சை ஆர்வத்துடன் செவிமடுக்கிறார் இந்த முதியவர்.

**மசாலா மிக்ஸ்**

# கூடைப் பந்தாட்டத்தில் ஆழ்ந்துபோன யானை



கூடைப்பந்தாட்டம் உலக மக்களைப் பெரிதும் கவர்ந்துவிட்ட விளையாட்டாக இருக்கிறது. ஆயினும் பாங்கொங் நகரிலுள்ள சிராச்சா மிருகக்காட்சிச் சாலையில் யானைகளுக்கும் கூடைப் பந்தாட்டம் விளையாடப்பழக்கியிருக்கின்றார்கள். ஒரு யானை மிகவும் உற்சாகத்துடன் தனது தும்பிக்கையினால் கூடைக்குள் பந்தை வீசுவதைப் படத்தில் காணலாம்.

# வர்ணமே ஆடையாக அழகி எழிற்கோலம்!



பிரஸ்ஸலஸ் நகரில் அண்மையில் அழகிகள் தமது உடலுக்கு வர்ணம் பூசும் போட்டி நடைபெற்றது. உடல் முழுவதும் வர்ணம் பூசி வர்ணமே ஆடையாக எழில் கோலம் பூணுவதுதான்இந்தப்போட்டி. விசித்திரமான தலை அலங்காரத்துடன் ஒரு வர்ண உடை அழகி எழிற்கோலம் பூண்டு பார்வையாளர்களை மெய் மறக்கச் செய்த காட்சி.

# 1939 இல் மூழ்கிப் போன யுத்தக்கப்பலின் கோலம்!



இரண்டாவது உலக யுத்தம் நடந்த காலத்தில் 1939 ஆம் ஆண்டு அட்மிரல் கிராப்ஸ்பீ என்னும் ஜெர்மன் யுத்தக் கப்பல் பிரிட்டிஷ் படைகளால் மூழ்கடிக்கப்பட்டது. அந்தக் கப்பல் கடலுக்கடியில் இன்று இருக்கும் கோலத்தை இந்தப்படத்தில் காணலாம். இடது புறம் காணப்படுவது மேற்படி போர்க்கப்பலைத் தேடிக்கண்டுபிடித்த ராடர் கோபுரம் ஆகும். கப்பலை அக்குவேறு ஆணி வேறாகப் பரிசோதிக்கப்போகிறது இந்த ராடர் கோபுரம்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



மார்ச் 15, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் மறைந்த நடிகர் எம்.ஜி.ஆர் உடையது. சரியான விடையைக்கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு:

1. ச.சுசிலாதேவி, யாழ்ப்பாணம். 2. த.கலாதேவி, கிளிநொச்சி. 3. நி.ரூபன், திருகோணமலை. 4. அ.முருகன், மட்டக்களப்பு. 5. கோ.போல், கொழும்பு.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?

சித்திரைப் புத்தாண்டுக்கு இவரது விளையாட்டுப் பெயர்கொண்ட படம் ஒன்று வெளிவர உள்ளது. இவரது தந்தையார் ஒரு டைரக்டர் ஆவார்.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# யார் இந்த தேவதை

படிப்பைமுடித்து. உத்தியோகம் கிடைத்த பின் இப்போது சில நாட்களாகத்தான் கொஞ்சம் ஆறுதலாக இருக்க முடிந்தது. கொஞ்சம் நாட்களுக்கு நண்பர்களோடு சேர்ந்து ஜாலியாகக் கும்மாளம் அடிக்கலாம் என்றால் அதற்கிடையில் வீட்டில் கலியாணப் பேச்சை ஆரம்பித்துவிட்டார்கள்.

கரும்பு தின்னக் கைகூலியா என்று நீங்கள் கேட்பது என் காதிலும் கேட்கிறது. அவலை நினைத்து அவளைக் கைப்பிடித்து, உரலை இடித்துக்கொண்டிருக்கும் பலரைக் கண்ட அனுபவம். ஏண்டா கலியாணம் பண்ணிக் கொண்டோம் என்று சலித்துக் கொள்பவர்கள் தான் அதிகம். மேலும் கலியாண விடயத்தில் எனக்குப் பத்தாம் பசலித்தனங்களில் நம்பிக்கையில்லை. மச்சான், மச்சாள் இப்படி குண்டுச் சட்டிக்குள் சுற்றிக் கொண்டிருப்பதிலும் எனக்கு விருப்பமில்லை.

எனக்கு ஊரிலே மச்சாள்களுக்கு குறைவில்லை. அவர்களிடமும் படிப்பு, பணம் அழகு, குணம் எதற்கும் குறைவில்லை. குறை, நான் தேடும் அபார அழகு ஒன்றுதான். அழகு ராணியைத் தேடுகிறாயே, நீ மட்டும் என்ன மன்மதனா? நீங்கள் கேட்கலாம்.

சாண் பிள்ளையானாலும் நான் ஆண் பிள்ளை. படிப்பு இருக்கிறது. பதவி இருகிறது. நல்ல குணமான பையன் என்ற பெயர் இருக்கிறது. இதற்கு மேலாக ஓர் ஆண் பிள்ளைக்கு வேறென்ன வேண்டும்? நான் மன்மதனில்லாவிட்டாலும் ரதியைத் தேடலாம். இது ஆணாதிக்க சமூகம் அல்லவா?

சின்ன மாமாவின் இரண்டு பெண்கள், பெரிய மாமாவின் மூன்று பெண்கள், ஆசைமாமாவின் ஒரே பெண். இன்னும் தூரத்து உறவு மச்சாள்கள் என எல்லோரையும் எனக்கு கலியாணம் பேசிக்களைத்துப் போய் விட்டார்கள். உறவு விட்டுப்போகக் கூடாது என்பது அம்மாவின் விருப்பம். தனது வழி உறவினரில் செய்ய வேண்டும் என்பது அப்பாவின் விருப்பம். மாப்பிளையான என் மனவிருப்பத்தைப் பற்றி யாருக்கும் அக்கறை இல்லை.

எல்லோரையும் பேசிக் களைத்த அம்மா இப்போது கண்டியிலுள்ள மாமாவின் மகள் தேவியைச் வற்புறுத்திக் கொண்டிருக்கிறாள். தேவியைச் சின்னவயதில் கண்ட ஞாபகம். யுத்த பூமிக்கு நீண்ட வருடங்களாக அவர்கள் வரவில்லை. இப்போது பல்வைத்தியத்துறைக்கு படித்து முடித்து பரீட்சைஎழுதிவிட்டு இருக்கிறாளாம். சின்ன வயதில் பார்த்த நினைவை வைத்துப் பார்க்கையில் அப்படியொன்றும் எனது அபிலாசையை நிறைவு செய்யக்கூடிய ரதியாகத் தேவி இருக்கமாட்டாள் என்றே தோன்றுகிறது. எனினும் தங்கை சகுந்தலா அண்மையில் கண்டி சென்று வந்தவள். தேவியைப்பற்றி சிலாசித்துக் கூறினாள். 'அவளுடைய வடிவம், சுறுசுறுப்பும் நீ மயங்கியே போவாய் அண்ணா' என்று சான்றிதழ் தந்தாள். படம் கேட்டேன் சகுந்தலாவிடம் இருக்கவில்லை. தேவிக்கும் என்னைப்பற்றி நிறையக் கூறியிருப்பதாகச் சொன்னாள்.

போனவாரம் தேவியிடமிருந்து சகுந்தலாவுக்கு கடிதம் வந்திருந்தது. 'பரீட்சை முடிவு வரும்வரை வீட்டிலிருக்கப் போர் அடிக்கிறது. நீ கேட்டுக்கொண்டபடி அடுத்த திங்கள் அல்லது செவ்வாய் ஊர் வருகிறேன்.' என்று எழுதியிருந்தாள்.

இன்று திங்கட் கிழமை.


பஸ்ஸில் வந்து ரவுனில் நிற்பதாகவும் யாராவது வந்து கூட்டி வரும்படியும் எழுதியிருந்தமையினால், வீட்டில் என்னைப் போகும்படி கூறினார்கள். எனக்கு விருப்பமில்லாவிட்டாலும் மறுக்க முடியாமல் மோபைக்கை எடுத்துக்கொண்டு ரவுனுக்குச் சென்றேன்

வரும்போது அவளை ஏற்றிக்கொண்டு வரவேண்டும். இதுவே வேறு பெண்ணாக, நான் கற்பனை பண்ணும் தேவதையாக இருக்குமானால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

நான் படிக்கும் காலத்தில் ஒரே படிப்பு, படிப்பு என்று இருந்து விட்டேன். அதனால் தான் கல்லூரி வாழ்விலும், பல்கலைக் கழகத்திலும் ரதிகளைக் கோட்டை விட்டு விட்டேன். படிப்பு முடிந்தபின், கம்பஸ்ஸில் சந்தித்த காந்தா, தர்மா, இந்து, சந்திரா முதலான என்ட மனசுக்கு நிறைவைத் தந்த ரதிகளில் ஒருத்திக்கு என் விண்ணப்பத்தைக் கொடுக்கலாம் என்ற என் நினைப்பெல்லாம் கலைந்துபோன கனவுகளாகின. ஐயர் வரும்வரை பௌர்ணமி காத்திருக்கமா? சில மிகச் சாதாரண மன்மதர்களே முந்திக் கொண்டு விட்டார்கள்.

இனித்தான் நான் புதிதாக ஒரு ரதியைத் தேடிக்கொள்ள வேண்டும். வேலை கிடைத்த பின் இன்றுவரை எனது மனம் கவர்ந்த ரதி எவருமே தட்டுப்படவில்லை. கனவில் வந்து போகும் முகம் தெரியாத அவள் நனவில் வர மாட்டாளா என்று தினமும் வழியிலும், தெருவிலும் என் கண்கள் அலையும். ஓ... எல்லா ரதிகளையும் கோட்டை விட்டுவிட்டேனோ? கண்ணில் படவேயில்லை.

கண்டி மச்சாளுக்காகக் காத்து நின்றபோது பஸ் நிலையத்திலும் என் ரதிக்காக இதயம் அலைந்தது. கண்களை நாலாபுறமும் அலைய



விட்டேன்.

தேகத்தில் மின்சாரம் பாய்ந்தது போன்ற சிலிர்ப்பு! என் அலையும் கண்களைக்கட்டி நிறுத்தினாள் ஒரு ரதி!

யார் இந்த தேவதை?

நினைத்ததைச் சொல்லவில்லை.

ஓ எவ்வளவு அழகான கண்கள். புருவ மயிர்கள் இருபுறமும் வில்லாகி, மூக்கின் மேல் சற்று இணைந்து ... ஓ அந்த மூக்கு மட்டும் என்னவாம்? அழகிய செம்மஞ்சள் நிறத்தில், கடித்துத்தின்ன வேண்டும் போல் அந்த அப்பிள் கன்னங்கள்.

ஆயிரம் வாற் மின்சாரத்தைக் கண்களில் வீசியபடி அவளும் என்னை நோக்கினாள். முத்துப்போன்ற அவள் பற்கள் மின்னலடித்தன. அணிலேறவிட்ட நாய் போல அவளைப் பார்த்துக்கொண்டு இருப்பதை அவளும் கவனித்து விட்டாள்.

''உங்கட பெயர் ....?'' அவள் அக்கறையோடு கேட்கையில் என் மனது பூரித்தது. ஆனந்தன்... சிவில் இஞ்சினியராக வேக் பண்ணுறன்...'' அவள் கேட்காத விபரங்களையும் கூறினேன். தொடர்ந்து. ''நீங்கள் கலா தானே?. உங்க தோழி கூப்பிட்டபோது தெரிந்து கொண்டேன்'' என்றேன். அவள் சிரித்தாள்.

என் மனது குதூகலித்தது. புதியதோர் உலகத்தில் சஞ்சரிப்பது போன்றநிலை. இதற்கு முன் நான் எப்பொழுதுமே இந்தமாதிரி உணர்ந்ததில்லை. எந்தப் பெண்ணோடு பேசிய போதும் உணர்ந்ததில்லை! இப்போது மட்டும் ஏன் உள்ளம் குதூகலிக்க வேண்டும்? இதற்கு என்ன அர்த்தம் இருக்க முடியும்? என் கண்களால் நுழைந்த கலா என் இதயத்தில் புகுந்து அதை நிறைத்து விட்டாளா?

ஒரு பெண்மீது அக்கறைகாட்டிக் கதைக்கிறேன். அதுவும் மனதுக்குப் பிடித்துப் போய் விட்ட பெண் என்றதும் எனது வாலிப உள்ளம் துள்ளலாய்க் குதூகலிக்கிறது.

கண்டதும் காதல் என்றால் எந்தப் பெண் தான் ஏற்றக் கொள்ளப் போகிறாள்? பருத்தித்துறை பஸ் என்று கேட்டாளே, இடம் சரி விலாசத்தை எப்படி அறிவது? மனது தவித்துத்தாளமிடுகிறது.

''நீங்கள் போகவில்லையா?... '' அவள் தான் கேட்டாள்.

''மோபைக் நிற்கிறது... என்றபடி அடுத்து எப்படி அணுகுவது என்று தெரியாமல் தடுமாறினேன் 'நெல்லியடிக்குப் போகிறேன்...'

''மோபைக்கா?... அப்படியானால் நானும் வரலாம்... பஸ் வரக் காணோம்'' என்றாள். துணிச்சலான பெண்தான் என எண்ணிக் கொண்டேன். ஓ... எனது தேவதையா கேட்டாள்? என்னிடமா கேட்டாள்?... கற்பனையில் அவள் பின்னே அமர்ந்திருக்க எனது மோபைக் பயணம் தொடர்கிறது.

''என்ன யோசிக்கிறீர்கள்?... பயமா?

''இல்லை நான் நெல்லியடி வரையிலதான்...''

''பரவாயில்லை... அதுவரை வருகிறேன்...'' அவள் மீண்டும் சொன்னதும் என் மனதில் ஆயிரம் பூக்கள் மலர்ந்தன. பயணம் தொடர்ந்தபோது பாதையிலுள்ள பள்ளங்களை விலக்கி வெகு நேர்த்தியாக செலுத்தினேன். அவளது மனதிலே மதிப்பான ஒரு இடத்தைப் பிடிக்கவேண்டும். பின் காதல் வானில் மிதக்க வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்போது எதிர்பாராமல் ஒரு பள்ளத்தில் மோபைக் விழுந்து எழும்பவே அவள் என்னில் மோதி எனது தோள்களைப் பற்றிக் கொண்டாள். என்னைச் சுதாகரித்துக் கொண்டு 'சொறி' என்று சொல்ல நினைத்து 'தாங்ஸ்' என்று உளறிவைத்தேன். அவள் கலகலவென்று சிரித்தாள் நான் கலா கலா என்று மகிழ்ந்தேன். வராமல் விட்ட தேவிக்கும் நன்றி சொன்னேன்.

பள்ளத்தில் விழுந்த மோபைக் சில்லு காற்றுப் போய்விட்டது. சிறிது தூரம் உருட்டிச் சென்று ஒட்டக் கொடுத்தேன். ஒட்டும்வரை அவளோடு உரையாடி மனதை ஒட்டவைக்கும் வாய்ப்பினைத் தேடினேன். நான் எப்பொழுதும் இந்தப் பாடத்தில் கொஞ்சம் வீக்தான். 'நீ சரியான ரியூப் லைற்' என்று நண்பன் சிவம் அடிக்கடி கூறுவான். எங்கே தொடங்குவது. எப்படி தொடர்வது என்ற கலைஞானம் கிடையாது.

ஆனால், கலா கொஞ்சம் கெட்டிக்காரியாக இருந்தாள். இதுவரையில் பல சந்தர்ப்பங்களில் தன் மன உணர்வைக்காட்டி விட்டாள். அதனால்தான் எனக்கும் கொஞ்சம் தைரியம் ஏற்பட்டிருக்கிறது. 'நீங்க என்ன செய்யுறீங்க...?' அவள் எங்கே வேலை செய்கிறாள் என்பதை நோக்குடன் கேட்டேன்.

''யோசித்துக் கொண்டிருக்கிறேன்...'' என்றாள்.

''ஜோக் அடிக்கிறீங்களா?''

''இல்லை இல்லை நேரம் போகிறதே... பொழுதும் சாய்ந்து கொண்டு வருகிறது மழையும் வரும் போலிருக்கிறது...'' கலா வானத்தை நோக்கினாள்.

''பரவாயில்லை... பஸ் வந்தால் ஏற்றி விடுகிறேன்...''

''நம்பி வந்தவளை நட்டாற்றில் விடுவேன் என்கிறீர்களா?... பஸ் வராவிட்டால்...?'' நான் திகைப்போடு அவளை நோக்கினேன். மனதில் குழப்பம். இதற்கிடையில் மோபைக் ரெடியாகிவிட்டது. பயணம் தொடர்ந்தது.

''இனி பஸ் வராது...'' என்றாள் கலா. இப்போது என் தோள்களில் அவளது கை. – சில்லென்று குளிர்காற்று வீசியது. அவள் சற்று நெருங்கி பட்டும் படாமலும் அமர்ந்திருந்தாள்.

நெல்லியடி வந்த விட்டது. வீடும் நெருங்கி விட்டது. இனி என்ன செய்யலாம்? என்று யோசித்தேன். நான் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவள் சொன்னாள்'' இனி போகேலாது மழையும் தொடங்கி விட்டது. நான் உங்கள் வீட்டில் தங்கிவிட்டு காலையில்...'' அவள் முடிக்கவில்லை. 'ஐயையோ வேண்டாம்' என்று குறுக்கிட்டேன்.

''ஏன் உங்கள் வீட்டில் அம்மா, சகோதரிகள் எவரும் இல்லையா?'' என்றாள். நான் தடுமாறிக்கொண்டிருந்தேன்.

பிரியும் நேரம் வந்துவிட்டது. ''ஐ லவ் யூ சொல்ல வேண்டும்'' தொண்டை வரை வந்தது, வெளியே வரவில்லை. அவள் முந்தி விட்டாள். ''ஆனந்த்... ஐ லவ் யூ...'' என்றாள். என் இதயத்திலும்புது வெள்ளம் பெருக்கெடுத்தது. ''ஐ லவ் யூ, கலா...'' என்றேன். வானத்திலிருந்து ஆயிரம் மலர்கள் அபிசேகம் செய்தன.

கலா... இப்ப வீட்டிற்குப் போவது நல்லதல்ல... நான் மழைக்கோட் எடுத்து வருகிறேன்... வாசலில் நின்று கொள்ளுங்க'' வீட்டு வாசலில் கலாவை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தேன்.

''ஒரு ரீகூடக் கிடையாது?...குளிருது ஆனந்த்''

''ஐயோ... எங்க அம்மாவைப் பற்றிஉங்களுக்குத்தெரியாது நில்லுங்க...'' என்று வலியுறுத்திக் கூறி விட்டு வீட்டிற்குள் சென்றேன்.

''நல்லவேளை... மழை தொடங்கிறதுக்கிடையில் வந்துவிட்டாய்... ஏன், தேவி எங்கே...? வரவில்லையா?'' ஆர்வமாக கேட்டாள் அம்மா.

''தேவி வரவில்லை... நாளைக்குதான் வருவாள் போல...' என்றதும் அம்மாவுக்கும் சகுந்தலாவுக்கும் ஏமாற்றமாகிப் போய்விட்டது. இப்போது இவர்களை வெட்டிவிட்டு, மழைகோட் எடுத்துக் கொண்டு போகவேண்டும். எப்படி சமாளிக்கலாம்? மனது குழம்பித் தவித்தது. வெளியில் மழைபொழிய ஆரம்பித்தது.

இதற்கிடையில் ''கோலிங் பெல் அடித்தது. சகுந்தலா கதவைத் திறந்தாள். வாசலை நோக்கினேன். தெப்பமாக நனைந்தபடி என் தேவதை கலா; 'ஐயோ இவள் ஏன் உள்ளே வந்தாள்?''

''வாதேவி...'' என்று அவளது கைகளைப் பற்றிபடி சகுந்தலா உள்ளே வந்தாள்.

''இவ .. நீங்க?'' தடுமாறினேன்.

''தேவி... கலாதேவி... எங்கட கண்டி மச்சாள்...'' என சகுந்தலா அறிமுகப்படுத்தினாள்.

கலா அன்பாக என்னை நோக்கி கொடுப்புக்கள் சிரித்தபடி கண்களால் மன்னிப்புக்கோரினாள்.

''தலையைத்துவட்டு பிள்ளை... எப்படி வந்தனி...? இவன் உன்னை ஏற்றப்போய், இப்பதான் தனியே திரும்பினவன்'' என்று அம்மா மருமகளை வாஞ்சையுடன் நோக்கினாள்.

''அண்ணா உனக்குக் கண்டி மச்சாளைப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டாள் சகுந்தலா.

''அவருக்கு எந்த மச்சாளையும் பிடிக்காதாம். வெளியில 'லவ்' பண்ணித்தான் முடிப்பாராம்... இன்னைக்கு பஸ் நிலையத்தில் ஒரு பெண்ணைக் கண்டாராம்... அவளைத்தான் கலியாணம செய்வாராம்... செய்து வையுங்க. '' என்றாள் கலாதேவி.

''ஆரடா அது '' அம்மா ஆவேசமாகக் குறுக்கிட்டாள். 'கலா... கலாதேவி... என்னுடைய கண்டி மசசாள்'' என்றேன்.

எல்லோர் முகங்களும் மலர்ந்தன.


ச. முருகானந்தன்

## ஒளிந்திருக்கும் ஓவியம்



மேலே உள்ள படம் சாதாரண ஓர் இயற்கைக் காட்சி. காட்டினுள் - பாய்ந்தோடும் ஆற்றின் கரையால் குதிரைவீரர்கள் சிலர் வந்து கொண்டிருக்கிறார்கள். இதுதான் அந்தப்படம். ஆனால், படத்தின் உள்ளேஉட்டு நரிகள் ஒளிந்திருக்கின்றனவாம். கண்டு பிடியுங்கள்.....

## நெட் குறும்பு



ஐயையோ.... ஊரிலே எவ்வளவு லைட் போஸ்ட், மேசைக்கால், கதிரைக்கால் எல்லாம் இருக்கும் போது இந்த லப்டப் தான்.... இவருக்கு இதற்குக் கிடைத்ததோ....?

## ஜோக்

அலுவலகத்திலிருந்து திரும்பிய கணவன் கையில் பார்சல் ஒன்று வைத்திருந்தான். அதனை மனைவியிடம் கொடுத்துச் சொன்னான் "கண்ணே! உனக்கு தருவதற்கென்று ஒரு பரிசு கொண்டு வந்திருக்கின்றேன்.. இந்தா பிடித்துக் கொள்..."

மனைவி பார்சலை வாங்கி பிரித்துப் பார்த்தாள்... சமையல் செய்வது எப்படி என்ற புத்தகம் அது... ஆச்சரியமாக கணவனைப் பார்த்தாள். "கண்ணே உனக்கு சமையல் செய்வது எப்படி என்றே தெரியவில்லை. உனது சமையலை சாப்பிடுவது என்றால் எனக்கு ஏதோ நரகத்துக்குப் போய் வருவது போல் இருக்கிறது. எனவே இந்தப் புத்தகத்தை படித்துவிட்டு இனிமேலாவது ஒழுங்காக சமைத்துப் போடு..." என்றான்.

இதனைக் கேட்ட மனைவிக்கு அவமானம் தாங்க முடியவில்லை. கணவனுக்கு தகுந்த பாடம் படிப்பிக்க வேண்டுமென்று நினைத்தாள். அடுத்தநாள் கணவன் அலுவலகத்திலிருந்து திரும்பும்போது கையில் பார்சல் ஒன்றுடன் காத்திருந்தாள்.




மனைவியின் கையில் இருந்த பார்சலை ஆச்சரியமாக பார்த்தபடி..." என்ன?" என்று கேட்டான் கணவன். அன்பே உங்களுக்கு தருவதற்கென்று பரிசு ஒன்று வாங்கி வைத்திருக்கிறேன். இந்தாருங்கள் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று பார்சலை கணவனின் கையில் கொடுத்தாள் மனைவி.


ஆச்சரியத்துடன் பார்சலை வாங்கி பிரித்துப் பார்த்தான் கணவன். "காம சூத்திரா" என்ற புத்தகம் அதில் இருந்தது.

## கண்ணாமூச்சி

இந்தப் படத்தைப் பாருங்கள். சில கோடுகள் ஒன்றன் பின் ஒன்றாக வளைத்து, வளைத்து கீறப்பட்டிருக்கின்றன. பார்த்தால் ஏதோ வளைவான பாதைபோல் தெரிகிறது.

ஆனால் உண்மை அதுவல்ல. வளைவாக உள்ள கோடுகள் கீறப்பட்ட படத்தை நன்றாகப் பாருங்கள். இப்போது படத்தை கூர்மையாகப் பார்த்தபடி உங்கள் தலையை முன்பக்கமாகவும் - பின்பக்கமாகவும் அசையுங்கள் என்ன தெரிகிறது? சிறிய சிறிய கோடுகள்.

வளைந்து செல்வதைப் பார்க்கும் போது இந்தக் கோடுகள் முன்னோக்கிச் செல்வது போல் இருக்கின்றனவே... எப்படி.....?




## மறைந்திருக்கும் ஓவியம்




அருகே உள்ள படத்தைப் பாருங்கள் - பொத்தாம் பொதுவாகப் பார்த்தால் எலும்புக்கூடுபோல் தெரிகிறது. ஆனால், இந்த எலும்புக்கூடு ஓவியம் - உண்மையான எலும்புக் கூட்டில் உள்ளது போல் ஒட்டையான கண் பகுதி, வாய்ப்பகுதி என்று கோரமாக வரையப்படவில்லை. மாறாக ஓர் அப்பா, ஓர் அம்மா, ஒரு குழந்தை என்று உருவங்களைக் கொண்டு வரையப்பட்டுள்ளது. எலும்புக்கூட்டை கூர்ந்து பாருங்கள். அப்பா, அம்மா குழந்தை எல்லாம் தெரியும்.

## நெட் குழப்பம்



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். குத்தாகவும் -கிடையாகவும் உள்ள கோடுகள் எல்லாம் வளைந்து-வளைந்து இருக்கின்றன. அந்த வளைவுகளுடன் கூடிய இந்த வடிவத்தைப் பார்க்கும் போது இந்த வடிவம் உருண்டையான வடிவத்தைப் போல் இருக்கிறது.

ஆனால், இது உண்மையில் வளைவான வடிவமல்ல. இதன் குத்துக் கோடுகள் - வளைவு கோடுகள் எல்லாம் வளைவுபோல் தெரிந்தாலும் உண்மையில் அவை வளைவாக இல்லாமல் மாறாக குத்தான, கிடையான நேர்கோடுகளாக இருக்கின்றன. இதனை நீங்கள் நம்பவில்லை என்றால் அடிமட்டம் ஒன்றை எடுத்து ஓவியத்தின் கோடுகளில் வைத்துப் பாருங்கள்.



- விஜய், த்ரிஷா-

# விஜய்யின் மதுர

தனுஷ், சிம்புவுடன் ஜோடி சேர்ந்த சோனியா அகர்வால் இப்போது விஜய்யுடன் ஜோடி சேரவுள்ளார்.
காதல் கொண்டேனில் தனுஷுடன் அமர்க்களமாக நடித்து தமிழ் ரசிகர்கள் மனதைக் கொள்
ளை கொண்ட பின் , சக்சஸ் ஜூனியர் சிவாஜியுடன் நடித்து தனது பெயரைக் கெடுத்துக் கொண்
டார் .பின்னர் சிம்புவுடன் கோவில் படத்தில் நடித்தார் சோனியா. படம் சரியாக ஓடாவிட்டாலும்
கூட சோனியாவின் அழகும் நடிப்பும் அனைவராலும் பேசப்பட்டது.
இப்போது தனுஷின் அண்ணன் செல்வராகவனின் டைரக்ஷனில் 7 ஜி, ரெயின்போ காலனி
என்ற படத்தில் நடித்து வருகிறார். குட்டிப் பசங்களுடன் நடித்து வரும் சோனியா முதல் முறை
யாக கொஞ்சம் வயசான ஹீரோக்களுடன் அடுத்த ரவுண்ட் வர தொடங்கியுள்ளார். முதல் கட்டமாக
விஜய்யுடன் ஜோடி சேருகிறார்.
கொமெடி ,ஆக்ஷன் , சென்டிமென்ட் என கலவையாக கலக்க வருகிறார்கள் விஜய்யும்,சோனி
யாவும். மதுர என்று பெயரிட்டுள்ள அந்தப் படத்தில் விஜய்யுடன் சோனியா தவிர ரக்ஷிதாவும் ஜோடி
யாக நடிக்கவுள்ளார். இவர் சிலம்பரசனுடன் நடித்தவர். இப்போது கன்னடம் , தெலுங்கில் படு
பிஸி. சாக்லேட் படதயாரிப்பாளர் மாதேஷின் டைரக்ஷனில் இப்படம் உருவாகவுள்ளது. மாதேஷ்
இயக்குநர் ஷங்கரிடம் இணை இயக்குநராக பணி புரிந்தவர்.
கவர்ச்சிக்கு சின்னவீடா வரட்டுமா, பெரிய வீடா வரட்டுமா புகழ் தேஜா ஸ்ரீ, கொமெடிக்கு வடி
வேலு என பக்கா டீமுடன் களம் இறங்கும் மாதேஷ் இப்படத்தை பெரும் பொருட் செலவில் தயாரிக்
கிறார்.
திருமலையில் , புதுப் பேட்டை போல செட் போட்டு பரபரப்பு ஏற்படுத்தியது மாதிரி இந்தப்
படத்திலும் பெரும் செலவில் சென்னை சாலி கிராமம் பகுதியில் 5 ஏக்கர் பரப்பளவில் ரூ 2
கோடி செலவில் மார்க்கெட் நகரம் போல் செட் போட்டுள்ளார்களாம்.
பரபரப்பாகப் பேசப்படும் அளவிற்கு படத்தில் கிராபிக்ஸ் காட்சிகளையும் , அதி நவீன தொழில்
நுட்பங்களையும் பயன்படுத்தி இந்தியாவையே மிரட்டத் திட்டமிட்டுள்ளாராம் மாதேஷ்.

# நியாயம் கேட்கிறார் டைரக்டர்!

அகர்வால் நடிகை சென்னையில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் தனியாக தங்கியிருந்
தார்.
அவருடைய அறைக்கு செல்வமான டைரக்டர் அடிக்கடி வந்து போனதைஹோட்டல் நிர்வா
கம் கண்டித்ததாம். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டு அறையில் இருந்த
கண்ணாடி ஜன்னல்கள் உடைந்தன. டைரக்டரிடம்ஹோட்டல் நிர்வாகம் நஷ்ட ஈடு கேட்டு வருகி
றது.
ஒரு டைரக்டரும், நடிகையும் சந்தித்துப் பேசக்கூடாதோ... பேசினால் தப்பா? பூ! என்று அந்த
டைரக்டர் நிறையப்பேரிடம் நியாயம் கேட்கிறார்!



- சிம்பு, திவ்யா

# அடிதடி

நல்ல பட வாய்ப்புக்களை பொறுத்துப்பொறுத்
மனதை தேற்றிக்கொண்டு பிற நடிகைகள் பாணியில்
'சொல்ல மறந்த கதை' யில் நல்ல நடிகைஎன்ற
தொடர்ந்து வாய்ப்புக்கள் வந்தன. இடையில் ஆஞ்ச
அதைத் தொடர்ந்து 'சிங்காரச் சென்னை' என்ற பட
படப்பிடிப்பு ஜவ்வாக இழுத்துக்கொண்டு போனது.
இந்த நிலையில் 'அடிதடி' படத்தில் ஒப்பந்தமானா
வேளையாக அவருக்கு ஜோடியாக ரதியைப்போடவில்லை
ஆனால் அதில் அளவுக்கு அதிகமான எக்ஸ்போஸ
ருடன் சண்டை போட்டுவிட்டு விலகினார் ரதி.
வீட்டில் மீண்டும் நல்ல கதாபாத்திரங்களுக்காக
வில்லை. இதனால் கன்னட உலகில் போய் முயற்சி
பெங்களூரில் பிறந்து வளர்ந்தவர் என்றாலும் இ
கன்னட சினிமா உலகம் இவரை ஆதரிக்கவில்லை. '
டுமே கிடைத்தது. அதிலும் இவருக்கு முக்கிய வேடம்
இதனால் மனமொடிந்து போய் சென்னை வந்த ர
டமே போய் சமாதானம் பேச மீண்டும் படத்தில் சேர்த்த
ஆனால் 'எவ்வளவு சொன்னாலும் அவ்வளவு கவ
முக்கியமான நிபந்தனையுடன். அதற்கு தலையாட்டிய
ரதியின் ஒத்துழைப்பைப் பார்த்து சம்பளத்தைக்
தடி'யில் கவர்ச்சி காட்டியதால் 'சிங்காரச்சென்
போடச்சொல்லிவிட்டார்கள். தலைக்கு மேல் வெள்ளம்
லென்ன முழம் போனாலென்ன என்ற நிலைக்குமா
யாக நடித்திருக்கிறார்.
இனியாவது ரதிக்கு நிறைய சந்தர்ப்பம்வருகிறத



# சினி

சென்னையில் ஒரு மழைக்காலம் என்று கவிதையா
ராஜ். மணிரத்னம்— ஏ. ஆர். ரஹ்மான் கூட்டணி எப்படியே
யில் வெளிவந்த மின்னலே, காக்க காக்க படப் பாடல்க

கறுப்பு தான் எனக்கு பிடிச்ச கலரு மாளவிகா மீ
அவரது சொந்த ஊரான கன்னட தேசத்தைச்
உருவாக்கப்பட்டுள்ளது.
தமிழில் மாளவிகாவுக்கு சான்ஸ் ஓய்ந்த நிலையி

விருமாண்டி படத்தில் காதலில் கோபிகா தான் ந
விட, கோபிகா சோர்ந்து போனார். இப்போது ஆட்டே
தற்சமயம் சென்னை கோர்டூர் புரத்தில் உள்ள
வாங்கி நிரந்தரமாக செட்டில் ஆகிவிடும் மூடில் இரு

தமிழகத்தின் கனவுக்கன்னியாக திகழ்ந்து வந்த சி
சிமரனின் ரசிகர்கள் மன்னித்திருப்பார்கள். சோக
அதன் பிறகு ஆல்தோட்ட பூபதி பாடலுக்கு ஆடிய ஆட்
இப்போது, மணிரத்தினம் தனது அடுத்த படைப்பா
ஜோடியாக இவர் வருகிறார். பட ஆரம்பத்தில் இருந்

சேரன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி கதாந
தான் சேரனின் மிகப்பெரிய வெற்றியாக அமைந்த
சொத்துக்களை எல்லாம் அடமானம் வைத்து சேர
கிடைத்துள்ளதால் போட்ட பணத்தைப் போல பல ம
இதில் கனிகா, மல்லிகா ஆகிய மலையாளக்குட்டிகள

# டி ரதி

பொறுத்துப் பார்த்து ஏமாந்து போன ரதி
ணியில் கவர்ச்சிக்குத் தாவி விட்டார்.

ஏன்ற பெயர் கிடைத்தாலும்டப்பிங் பேசவே
ஆஞ்சநேயா'வில் ஒரு பாட்டுக்கு ஆடினார்.
ன்ற படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது.
னது:

தமானார். இதில் சத்யராஜ் நடித்தாலும் நல்ல
டவில்லை. அப்பாசுக்கு ஜோடியாக்கினார்கள்.
போஸ் செய்யச் சொன்னதால் தயாரிப்பாள
).

ளுக்காக காத்திருந்தும் ஒருவரும் சீண்ட
யற்சி செய்தார்.

ாலும் இவர் ஒரு தமிழ் பெண் என்பதனால்
ல்லை. 'போய்பிரண்ட்' என்ற ஒரு படம் மட்
வேடம் ஏதுமில்லை.

வந்த ரதி மீண்டும் 'அடிதடி' தயாரிப்பாளரி
ல் சேர்த்துக்கொண்டார்கள்.

ளவு கவர்ச்சியாக நடிக்க வேண்டும்' என்ற
யாட்டிய ரதி புகுந்து விளையாடியிருக்கிறார்
ளத்தைக்கூட்டித் தந்துவிட்டார்களாம். 'அடி
சென்னை' படத்திலும் கவர்ச்சியாட்டம்
வெள்ளம் போய்விட்டது. இனி சாண் போனா
க்குமாறிய ரதி அதிலும் ஏகத்துக்கு கவர்ச்சி

ருகிறதா பார்ப்போம்.



# கன்னிராசி அர்ஜுன்

அர்ஜுனின் குறும்பு வர வர ரொம்பவே அதிகமாகி வருகிறதாம். இதனால் அவருடன் நடிக்கும் ஹீரோயின்கள் கடுப்பாகி ஷூட்டிங்கிற்கு வராமல் பின்வாங்க ஆரம்பித்துள்ளார்கள்.

அர்ஜுனுக்கு கன்னிராசி என்பது கோலிவுட்டில் எல்லோரும் அறிந்த ஒன்று. படப்பிடிப்பு தளத்திலேயே ஹீரோயின்களை அங்கு இங்கு தொட்டு பாடாய்படுத்துவார். சமீப காலமாக இந்த ராசி மிகவும் முற்றிப் போய் எல்லை தாண்ட ஆரம்பித்து விட்டாராம் ஆக்ஷன் கிங்.

அவரது சமீபத்து வாலாட்டலால் மிகவும் டென்சனாகிவிட்டாராம் ஜோதிகா. இருவரும் ஜோடியாக நடித்து வரும் 'மணிகண்டா' படப்பிடிப்புத் தளத்தில் அர்ஜுன் ஓவராக எல்லை மீறவே, கடும் அப்செட் ஆன ஜோதிகா பாதியிலேயே படப்பிடிப்பிலிருந்து கிளம்பி விட்டாராம். போனதோடு நில்லாமல், நடிகர் சங்கத்திலும் புகார் கொடுத்துள்ளாராம்.

பிரச்சினை பெரிதாகிப் போய் அந்தப் படம் தற்போது பாதியில் நிற்கிறதாம். தீபாவளிக்கு வரும் என்று கூறப்பட்ட 'மணிகண்டா' அர்ஜுனின் சேட்டை காரணமாக அந்தரத்தில் தொங்குகிறதாம்.

வயசாகியும் அர்ஜுன் அட்டகாசம் குறையவில்லையே என்று கோலிவுட்காரர்கள் தலையில் அடித்துக் கொள்கிறார்கள்.

சமீபத்தில் தான் 'ஒற்றன்' சூட்டிங் தளத்தில் சிம்ரனிடம் வாங்கிக் கொண்டார் அர்ஜுன்.





# டிப்ஸ்

பிதையாக படத்துக்கு பெயரிட்டுள்ளார் சூரியாதான் படத்தின் ஹீரோ. இசை ஹாரீஸ் ஜெய
எப்படியோ அப்படித்தான் கௌதம் — ஹாரீஸ் ஜெயராஜ் கூட்டணியும். இவர்கள் கூட்டணி
பாடல்கள் ரசிகர்களிடம் பலத்த வரவேற்பைப் பெற்றன.

***

விகா மீண்டும் தமிழில் ஒரு ரவுண்ட் வரும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்.
த்தைச் சேர்ந்த அர்ஜுன் நடித்த 'மணிகண்டா'வில் அவருக்காகவே ஒரு பாத்திரம்

நிலையில் முயற்சித்துப்பார்த்துவிட்டு டி.வி விளம்பரங்களில் செட்டில் ஆனார் மாளவிகா.

***

தான் நடிப்பதாக இருந்ததாம். என்ன காரணத்தினாலோ கமல் அபிராமியைக் கதாநாயகியாக்கி
ஆட்டோகிராஃப் நன்றாக ஓடுவதால் மிகவும் மகிழ்ச்சியில் இருக்கிறார்.
உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருக்கும் அவர் நல்ல வாய்ப்புகள் வந்தால் சென்னையில் வீடு
ல் இருக்கிறார்.

***

வந்த சிம்ரனை கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக நடிக்க வைத்தார். அதைக்கூட
. சோகக் காட்சிகளில் கூட தொப்புள் தெரிய நடித்து வந்த சிம்ரனை அந்தப் படம் முழுக்க சேலையில் உலவ விட்டார்.
டிய ஆட்டம் மூலம் தனது ரசிகர்களின் மனக்குறையை போக்கினார் சிம்ரன்.
ண்டைப்பான ஆயுத எழுத்து படத்தில் மீரா ஜாஸ்மினை ஒரு குழந்தைக்குத் தாயாக நடிக்க வைக்க வைக்கிறார். படத்தில் மாதவனுக்கு
இருந்தே இருவரும் கணவன் — மனைவியாக வருகிறார்களாம்.

***

தி கதாநாயகனாகவும் நடித்த படம் 'ஆட்டோகிராப்'. இப்படத்தில் பார்ப்பவர்களையெல்லாம் தங்களது பழைய நினைவுகளில் மூழ்கச் செய்தது
மைந்தது. பார்ப்பவர்கள் எல்லாம் படத்தைப்பற்றி சிலாகித்துச்சொல்ல, படம் இப்போது பக்ஸ் ஆபிஸை நோக்கி வெற்றி நடை போடுகிறது. தனது
து சேரன் தயாரித்த படம் இது. படம் தோற்றிருந்தால் ஊருக்கே திரும்பிப்போயிருப்பேன். ஆனால் படத்துக்கு எல்லா சென்டர்களிலும் நல்ல ஓப்பனிங்
பல மடங்கு திரும்பி வரும் மகிழ்ச்சியில் இருக்கிறார் சேரன். இதனால் சேரனை விட அதிக குஷியில் இருப்பவர் கதாநாயகிகளில் ஒருவரான கோபிகா தான்.
குட்டிகளும், ஸ்னேகாவும் நடித்திருந்தாலும் கோபிகாவுக்குத் தான் இப்போது தமிழில் நிறைய வாய்ப்புக்கள் வர ஆரம்பித்துள்ளன.

# உறங்கும் உறுதிகள் உயர்வுறுமா?

''இதனை இதனால் இவன் முடிப்பான் என்றாலந்து அதனை அவன் அவன் கண் விடல்'' என்றான் வள்ளுவன்.

இந்த மறைமொழிக்கு ஏற்ப தமிழினம் இன்று ஓர் உயரிய உறுதியுடன் தனது தீர்மானங்களை முன்னெடுத்து வருகின்றது.

ஒற்றை ஆட்சி முறை ஊடாக தமிழர் உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டது பேரின வாதம். இந்த பெரும் போக்கு அகற்றப்பட வேண்டும். இதற்காக தமிழினம் எடுத்த நடவடிக்கைகள் உலக அரங்கில் துல்லிதமாக வெளிக்காட்டப்பட்டு வந்துள்ளன.

பெரும்பான்மையினரும் இணங்கி எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என எழுந்த நோக்கங்களும் அதனூடாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் கானல் நீராகி விட்டன.

இந்த நாட்டில் ஒருசமஷ்டி ஆட்சி முறையே தேவை என்ற பெரும் வாதம் 50 களில் முன்னெடுக்கப்பட்ட போது அதனையும் தகர்த்து, சிதைத்து குடியேற்றங்களின் ஊடாக தமது நோக்கை தக்க வைத்துக் கொண்டது பேரினம்.

ஜனநாயக ரீதியாக தனி நாட்டுப் பிரகடனத்தை முன் வைத்து இலக்கை எட்டி விடலாம் என்ற நோக்கில் தமிழினம் எடுத்த முயற்சிகள் எல்லாம் இராணுவ பலத்தால் ஒடுக்கப்பட்டன. இது வரலாறு.

இந்த ''நிலையிலேயே இதனை இதனால் முடிப்பதே மேல் என்று எழுந்த ஆயுத போராட்ட வடிவம் ஆல் போல் தளைத் தோங்கி பல விழுதுகள் விட்டது. எனினும் மண் மீட்புக்காக'' — அதனை அவன் கண் விடல்'' என்ற நிலையை ஏற்படுத்தியவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

இரண்டு தசாப்த காலப் போராட்டங்கள், வலுவான இராணுவப் பலம் என்ற நிலைப் பாட்டினை புலிகள் இயக்கம் எட்டி நிற்கின்றது. இந்த நிலையில் இருந்து கொண்டு பேச்சு வார்த்தை மூலமாக ஒரு தீர்வைக் கண்டு பிடிப்பதற்கு முன்வந்திருக்கிறது. தமிழினம்.

முன்னர் முன்வைக்கப்பட்ட சமஷ்டி இலக்கு நோக்கி மீண்டும் ஒரு தொடுகை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறான ஒரு வேளையில், காலாகாலமாக தொடரும் இனத்து வேஷத்தின் உச்சக்கட்ட நடிவடிக்கைகள் முன் எழுந்து நிற்கின்றன.

இதனை உடைத்தெறிந்து இடைக்கால நிர்வாகம் ஒன்றினூடாக தமிழர் வாழ்வியலை கட்டி எழுப்பி அதன் மூலம், சுயாட்சி தன்னதிகாரத்தை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கை மேலோங்கிய பொழுதிலேயே ஒரு தேர்தலைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இந்தத் தேர்தல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துக்கு வாய்ப்பாக இருப்பதையிட்டு பேரினவாதிகளுக்கு மகிழ்வு பிறக்கலாம்.

தமிழினத்தைப் பொறுத்தவரையில், 50 ஆண்டுகால சோதனைச் சூழலை சர்வதேச சமூகத்தின் முன் வைத்து அடிமை விலங்கிடப்பட்ட கொடுமையை உடைத்தெறிய துணை நாடும் நிலைக்கு முத்தாய்ப்பாக இந்த தேர்தல் முகம் காட்டும் என்பதே நிதர்சனம்.

யதார்த்தம் வெகுசன விரோதி என்பதுக்கு ஏற்றாற்போல், தமிழர்களின் யதார்த்த பூர்வமான வாழ்வியல் உரிமைகளை ஒடுக்க நினைக்கும் பேரினவாதம் தமிழர் ஒற்றுமையை உடைக்க நினைப்பது விந்தையல்ல.

இதற்காக வித்து விதைக்கப்பட்டு தேர்தல் பொழுதில் அது பிரதேசவாதத்தோடு முளைத்தெழுந்தது நாம் அறியாத ஒன்றல்ல.

இத்தகைய சூழலிலும், நாளை என்னவாகுமோ என்ற ஏக்கப் பெருமூச்சோடு ஒவ்வொரு தமிழ் மகனும் நிற்பது தெரிகிறது.

உரிமைப் போராட்டம் தேசிய வடிவமாகி சர்வதேசப் பரபரப்பை தொடுமா, கிழக்குத் தீமோர் போன்றதொரு நிலை எமக்கு வருமா என்பது கேள்வியாக தொங்குகிறது.

இந்தக் கேள்விக்கான பதில்கள் தான் என்ன? அவை காலதேவன் கைகளிலே உள்ளன. பொறுத்திருந்தே பார்ப்போம்.

வள்ளுவன் வாக்கு நிலைக்குமா?

**நாச்சியூரான்**

# கவிதைப் பூங்கா

## சிரிக்கிறது தமிழன் தலை விதி

கரிகாலன் காப்பியத்தில்
கறையில் பல பக்கங்கள்.
கயவர்கள் துரோகத்தில்
கனமாய்க் கண்ணீர்த்துளிகள்.
காதோரமாய் கருணாவின் சேதி.
கவிதையாய் உள்ளக்குமுறல்.
துரோகியுனைக் கண்டு
துடிக்கும் இதயத்திலிருந்து!
கறை ஏந்திவிட்ட கருணாவே,
களங்கம் களைய
கருணை மனுக்கூட இல்லையே?
ஈர்பத்து வருடங்கள்
ஈழத்தாய் வளர்த்தெடுத்த
பிள்ளையே–நீ
ஈர்பத்து நிமிடத்தில்
சதிகாரன் தத்தெடுத்த பிள்ளையோ?
ஈனம் கற்பித்த கருணாவே,
இல்லையுனக்கு
ஈழவன்னை மன்னிப்பு.

பகல் நிலவாய் பவனி வந்த
சமாதானத் தூது ஏந்தியவனே,
ஈழமக்கள் உள்ளத்தில் உலா வந்து
உயர்ச்சி பெற்றவனே,
தன்மானத் தமிழன் தலை குனிய
தவறிழைத்து விட்டாயே!
கல்லறைக் கதவில் காவலர்கள்
கயவனுக்காய் தீர்ப்பெழுத ..
கானல் நீரில்
காணான் உன்னால்
கானல் நீராய் தெரிகிறது
சமாதானத்துப்புறா!
விடியலுக்கான சூரியன்
மேற்கில் உதிக்கிறது
மறைந்திடத் தானோ
எனைச் சிரிக்கிறதே
தமிழன் தலைவிதி!

*நிலவன்,*
*வவுனியா.*

## தலைகுனிவு

*கருணா!*
*போராளியாய் இயக்கத்தில்*
*இணைந்த போது–உன்*
*அர்ப்பணிப்புக்காய்*
*சிரம் தாழ்த்தினோம்.*
*தலைவன் கட்டளைக்கு*
*கட்டுப்பட்ட போது – உன்*
*பணிவுக்கு*
*சிரம் தாழ்த்தினோம்.*
*வியூகம் வகுத்து போரில்*
*வெற்றி பெற்ற போது–உன்*
*வீரத்துக்கு*
*சிரம் தாழ்த்தினோம்.*
*பேச்சு வார்த்தைக்கென*
*தெரிவான போது–உன்*
*விவேகத்துக்கு*
*சிரம் தாழ்த்தினோம்.*
*தலைமைத்துவத்துக்கு*
*ஆசைப்பட்டுப்பிரிந்தபோது–உன்*
*இழிசெயலுக்காய்*
*தலை குனிந்தோம்.*
*எதிரிகளின் வலையில் வீழ்ந்து*
*எட்டப்பனான போது நீ*
*தமிழனாய்ப்பிறந்ததுக்காய்*
*கூனிக்குறுகிப்போனோம்.*

*திருமதி ராமச்சந்திரன்,*
*சிலாபம்.*

## மண(ன)மேடையில்

மனமகிழ்ச்சியுடன்
மணமேடையில் நீ...
கண்களில் ஆயிரம்
கனவுகளைச்
சுமந்தபடி
யாரோ ஒருத்தி
உன்னருகில்...
நினைத்தபடி சீர்பெற்ற
நிறைவில்
உன் பெற்றோர்...
மகளுக்கு நல்வாழ்வு பூத்த
பூரிப்பில் உன் சம்பந்திமார்...
முதல் பந்தியிலே
உட்கார்ந்து விடவென
முண்டியடித்துக்கொண்டிக்கும்
உன் உறவினர்கள்...
இவர்களின் நடுவில்
அவள் மட்டும்
உன்னை வாழ்த்தவென வந்து
உணர்வற்றுப்போய்
நீ கொடுத்த நினைவுகளோடும்
கனவுகளோடும் வாழ்வதற்கு
ஒத்திகை
பார்த்துக்கொண்டிருக்கிறாள்
தன் மன மேடையில்...!

*பா.வனஜா,*
*இருபாலை.*

## மௌனம்

பொங்கிவரும் காதலை
புதைத்து வைக்கும்
மங்கையவள் பூட்டு.

## தேடல்

*அவனைக்காண அவளும்*
*அவளைக்காண அவனும்*
*போடும் விழி வீச்சுக்கள்.*

## சோகம்

மனிதன் தன்னை உணர
இறைவன் கொடுக்கும்
சிறு இடைவெளி!

## காதல்

*மனங்களின்*
*இடமாற்றத்தால் ஏற்படும்*
*மறைக்கமுடியாத பூகம்பம்.*

*விஜிதா,*
*கலட்டி.*

## உன் நினைவு

சிந்திக்கும் போதெல்லாம்
சிறகடிக்கும் உன் நினைவு
தட்டிக்க முடியாமல்
சிறைபட்டுக்கொள்கிறது
என் டயரியில்!
உன்னால்மட்டும்முடியும்–என்
விழித்திரையில்
விழுகின்ற யாவும்
உன்விம்பமாக
இருக்குமாயின்
இன்னும் பல வருடங்கள்
உன்நினைவில்
வாழ்ந்திடுவேன்
கண்மணியே!

*சி.குமரன்,*
*பரந்தன்.*

## ஏன் மௌனம்

உறைந்த பனி நதியில்– ஒரு
ஒற்றை மீன் குஞ்சாய்
இறந்த காலத்தில் –நான்
இறுகிக் கிடக்கிறேன்.
சந்திர சூரியர்கள்– தினம்
காட்டும் கரிசனையில்
எந்த அசைவுகளும்
எனக்கு இல்லையடி.
துவண்டு போன
என் மனதை–நீ
அடித்துத் துவைத்துவிட்டாய்.
இறப்பு வரும் முன்னே
என்னைப் புதைத்துவிட்டாய்.
பிரமிட் சிலைபோல்–நீ
பேசாதிருந்தாலும்
வருகிற தலைமுறைகள்
நிச்சயம் – உன்
வஞ்சனைகளைப் பேசுமடி.
பெண்ணே...
இனியும் நீ
மௌனமாகாதே!

*இரட்ணம் பூரணலிங்கம்,*
*கொட்டகலை.*

## உனக்காக ஏங்குகிறேன்

காதலே அணுகாமல்
காலத்தைக் கடத்தினேன்
உன்னைக்
காணும் வரை!
புயலாய் பவனி
வந்த நான்
புன்னகை பூக்கும்
தென்றலானேன்–உன்
புனிதக் காதலினால்!
இறுகிப் போயிருந்த
என் இதயம்
இன்று
பஞ்சுக்குவியலாய்
பறக்கிறது–உன்
இனிய பேச்சினால்!
ஏக்கம் என்பதை
அறியாத நான் இன்று
ஏங்கித்
தவிக்கிறேன்
பெண்ணே–உன்னை
எப்போது அடைவேன் என்று...!

*ப.கலைமாறன்,*
*பருத்தித்துறை.*

## அர்த்தமில்லாத அனர்த்தங்கள்

உள்ளிருந்து
உயிர் கொல்லும்
உன்னதமே
வாய் இருந்தும் ஊமையாய்
உறங்கிக் கிடந்த என்
உணர்வுகளுக்கு கைகை
பாஷை கற்றுத் தந்தவள் நீ!
ஈடேற்றும் தேடும் – என்
ஆன்ம வெளிகளில்
இங்கிதங்களை
விதைப்பித்தவளும நீ!
பகுத்த என்
பராக்கிரமங்களைமட்டும் ஏன்
உன் பார்வைகளுக்குள்
பலியாக்கிப் போகிறாய்?
என்னவளே!
என் எண்ணமேடைகளில்
அரங்கேற்றிய
அனைத்து நாடகங்களுக்கும்
விருதுகளாய் –உன்
விம்பங்களை மட்டுமே
விட்டுச் சென்றதுமேனோ?
அர்த்தமில்லா – உன்
அனர்த்தங்கள் என்னுள்
அவஸ்தைஅவதாரங்களை
அம்பலப்படுத்துகின்றன.
ஆசைத் தூண்டல்களின்
அற்புத துலங்கல்கள் கூட
அந்நியமாகிப் போனதால்
உளம்கிடந்து ஊளையிடுகின்றது.
புறத் தோற்றத்தில் நீ
பூர்வீகம் தேடியது போதும்!
ஓரங்கட்டப்பட்ட என்
உணர்வு ஓலங்களுக்கு
உபாயமாய் உன்
உயிரை உயிலெழுது.
கைது செய்யப்பட்ட என்
கதம்ப கனவுகளை
விடுவிக்கும்படி
விண்ணப்பிக்கிறேன்
மனமிருந்தால் என் மனவாசலில்
மாளிகையல்ல ஒரு
மணல் வீட்டையாவது கட்டுங்கள்
அவஸ்தைப் பரிவாரங்களுடன்
அரியாசனம் ஏறிஅவளுடன்
ஆனந்தித்திருக்க!

*எஸ்.மனோகரன்,*
*ஹட்டன்.*

## வழமையாய்...!

நான்
ஒதுங்கிப்போக
நினைக்கும்
ஒவ்வொரு மணித்துளியும்
தோற்றுப்போகின்றன
உன்னால்!
என்னை
எதித்துப் போயிட
நினைக்கும்
ஒவ்வொரு நினைவுகளும்
மரித்துப்போகின்றன
உன்னால்!
எது எப்படி இருப்பினும்
நீ ஜெயிப்பதும்
நான் தோற்பதும் மட்டும்
இங்கே இன்னும்
வழமையாய்...!

*பிரசன்னா*
*கொழும்பு.*

## இது தகுமா?

காக்கை வன்னியன் கூட்டம் -இன்னும்
கபல் பதித்தே உயிர் வாழுதடா; அதை
போக்கிட இன்றே யாவரும் எழுந்தால்- நாளை
புலர்ந்திடும் தமிழ் ஈழமடா!
ஊரில் இருக்கின்ற எதிரியை நினைத்து–நாளும்
உள்ளத்தில் மகிழ்கின்ற கூட்டமடா; இலப்போர்தனை
ஒழிக்க விரைகின்ற புலிகளை– மண்ணுள்
புதைக்க முயல்கின்ற புல்லுருவியடா.
எச்சில் துணிக்கைக்காய் இரந்து வாழுகின்ற– தமிழ்
ஈழ தேசத்தின் எதிரியடா; கெட்டகொள்கைத்
தமிழ்பேசும் கொலைஞர் அவரோடு–என்றும்
கூடி வாழுகின்ற தமிழரடா!
பட்டம் பதவிக்காய் தம் வெட்கம் துறந்தவர்கள்– எங்கள்
பகைவனின் கால்களில் செருப்பானார்- அந்த
துட்டகைமுனுக்கள் கழுவுகின்ற இழி பிறப்பானார்.

*அலெக்ஸ் பரந்தாமன்,*
*வன்னி.*

# பெண்ணின் புருவமும் அவள் குணமும்!

'கண்ணுக்கு மை அழகு' என்றான் ஒரு கவிஞன். ஆனால் அந்தக் கண்ணுக்குமேல் உள்ள புருவமும் பெண்களின் அவயவங்களில் அன்று தொட்டு இன்று வரை மிகவும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. ஒவ்வொரு பெண்ணின் கண் புருவமும் ஆயிரம் ஆயிரம் விடயங்களைத் தனக்குள் வைத்து அதன் மூலம் ஒவ்வொரு பெண்ணின் குண இயல்புகளையும், எதிர்காலத்தையும் கூறுகின்றது. எனவே இன்று நாம் ஒவ்வொரு வகையான புருவ அமைப்புள்ள பெண்ணின் குண இயல்புகளைப் பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்போமா?



கண் புருவங்கள் நீளம் குறைந்ததாகவும் அதே வேளை அடர்த்தியாகவும் காணப்படும் பெண்கள் முன்கோபம் கொண்டவர்களாகவும், அதி சீக்கிரம் முடிவெடுப்பவர்களாகவும், ஒரு சாராரை ஆளக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். எவருக்கும் பயப்படமாட்டார்கள். இவர்கள் புத்திசாலிகளாக இருப்பதனால் இவர்களின் கீழ் உள்ளவர்களை நல்ல முறையில் ஆளுவார்கள். ஆனாலும் இப்பெண்களின் திருமணம் காலம் கடந்தே நடைபெறும்.

கண் புருவங்கள் மென்மையான மயிர்களால் அமைந்திருந்தால் அப் பெண்கள் கணவன் மேல் அதிக அன்பும், பக்தியும் கொண்டிருப்பார்கள். பிறருக்குத் தன்னுடைய எந்த ஒரு பொருளையும் கொடுக்க விரும்ப மாட்டார்கள்.

கண் புருவங்கள் மெல்லிய கோடு போன்று நீளம் குறைந்ததாகக் காணப்படும் பெண்கள் புத்திசாலிகளாக இருப்பார்கள். விஞ்ஞானம் சம்பந்தமான விடயங்களில் விசேட கெட்டித்தனங்களைக் கொண்டிருப்பார்கள். சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பை இவர்கள் கொண்டிருப்பார்கள். இவர்களின் திருமணமும் காலம் கடந்தே நடைபெறும்.

கண் புருவங்கள் வானவில்லைப் போன்று வளைந்து நீண்டு மெல்லியதாகக் காணப்பட்டால் அப்பெண்கள் உண்மையில் அதிஷ்டசாலிகள் தான். திரைப்படம், நாட்டியம் போன்ற கலைகளில் இவர்கள் வெகு விரைவில் பிரபல்யமடைவார்கள். காதலையும், கருணையையும் நன்கு அறிந்திருப்பார்கள். இப் பெண்கள் பிற மொழிகளைக் கற்பதற்கு அதிக ஆர்வம் காட்டுவார்கள். ஆனாலும் தமது துணையைத் தேடிக்கொள்வதில் பலவேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.

கண் புருவங்கள் ஒன்றாக இணைந்து காணப்படும் பெண்கள் குரூரமான எண்ணம் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். அதிகமானோர் காதலில் தோல்வியுறுவார்கள். திருமணம் செய்து மிகவும் குறுகிய காலத்திலேயே இவர்கள் கணவனை இழக்க நேரிடலாம்.

இரு புருவங்களும் சேரும் இடத்தில் சுழி ஒன்று காணப்படுவது மிகவும் துரதிஷ்டமானதே! கண் புருவங்கள் விகாரமாகக் காணப்படும் பெண்கள் ஏழைகளாகக் காணப்படுவார்கள். கூலி வேலை செய்வதில் மிகவும் கெட்டிக்காரர்களாக இருக்கும் இவர்கள் வளர்ச்சி குறைந்தவர்களாக இருப்பார்கள்.

எது எவ்வாறிருந்தாலும் ஆண்களே, இன்றைய காலப் பெண்கள் அழகு நிலையங்களுக்குச் சென்று தமது புருவங்களை தமது விருப்பப்படி வெவ்வேறு வடிவங்களில் அழகுபடுத்திக் கொள்வதனால் இவற்றையெல்லாம் பார்த்து உங்களவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றெல்லாம் தப்புக்கணக்குப் போட்டுவிடாதீர்கள். வேண்டுமானால் அந்த உண்மையை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இது பெண்கள் தாம் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கான ஒரு டிப்ஸ். அவ்வளவே!

## இறால் மசாலா



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| இறால் | 250கிராம் |
| வெங்காயம் | 4 (சிறியதாக நறுக்கியது) |
| பச்சை மிளகாய் | 3 (சிறியதாக நறுக்கியது) |
| தக்காளி | 4 (சிறியதாக நறுக்கியது) |
| இஞ்சிப் பூண்டு | தேவையான அளவு |
| மஞ்சள் தூள் | 1/2 தேக்கரண்டி |
| மிளகாய்த் தூள் | 1 தேக்கரண்டி |
| மசாலாத் தூள் | 1/2 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | சிறிதளவு |
| கொத்தமல்லி இலை | சிறிதளவு நறுக்கியது |
| எண்ணெய் | 50 மில்லி லீற்றர் |
| சோம்பு | 1/2 தேக்கரண்டி |
| உப்பு | தேவையான அளவு |

### செய்முறை

அடுப்பில் வைத்த தாச்சியில் சிறிது எண்ணெயை ஊற்றுங்கள். எண்ணெய் சூடானதும் சோம்பு போட்டுத் தாளித்துக்கொள்ளுங்கள். பின்பு கறிவேப்பிலை, பச்சை மிளகாய், தக்காளி போன்றவற்றைப்போட்டு நன்றாக வதக்கி அதற்குள் தூளாக்கிய இஞ்சிப்பூண்டு, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள் போன்றவற்றைச் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளுங்கள். பின்பு இவற்றுள் இறாலைப் போட்டு 10 நிமிடம் நன்றாக வதக்கி மூடி வையுங்கள். சிறிது நேரம் கழித்து தேவையான உப்பு மற்றும் மசாலாத் தூள் போன்றவற்றைச் சேர்த்து நன்றாக வதக்குங்கள்.

10 நிமிடம் இறால் நன்றாக வெந்து எண்ணெய் மேலெழுந்து மசாலாவும் நன்றாக திரண்டு வரும்போது கொத்தமல்லி இலையை தூவி இறக்கவும்.

என்ன மங்கையரே, உங்கள் மனங்களில் இப்போதே இறால் மசாலா செய்ய வேண்டும் என்ற ஆவல் வந்துவிட்டதா? தள்ளிப்போடாதீர்கள் உங்கள் மகிழ்ச்சியை! சமைத்துக் கொடுங்கள் உங்கள் கணவர் பிள்ளைகளுக்கு. பெறுங்கள் பாராட்டு ஏனும் பரிசு மழையை!

# சிறந்த வாழ்க்கை உங்கள் வசமாக...

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் முக்கியமாக இடம்பெறும் நிகழ்வுகளில் ஒன்றுதான் திருமணம். இந்த நிகழ்வு எவ்வாறு ஒவ்வொருவரது நினைவுப் பெட்டகத்திலும் பசுமையாய்ப் பதிந்திருக்குமோ அவ்வாறே தான் ஒவ்வொருவரது வாழ்க்கையும் பசுமையாக அமைய வேண்டுமென்பது அவரவர் எதிர்பார்ப்பாக இருக்கும்.

திருமணமான அன்றே சாந்தி முகூர்த்தம் என்றாலும் கூட அன்றைய தினமே புதுத்தம்பதியர் தாம்பத்திய உறவை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் மணமக்கள் முதன்முதலாக தனிமையில் இணைந்திருக்கும்போது நடைபெற வேண்டியது இதயப்பரிமாற்றம் தான்.

ஏறக்குறைய 18 வருடங்களுக்கு மேலாக தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் என்ற ஒரு வட்டம் அமைத்து வாழ்ந்துவிட்ட பெண், முதன்முதலாகப் பிறிதொரு குடும்பத்தில் அடியெடுத்து வைக்கிறாள்.



அந்தப் பெண்ணுக்கு இப்போது வீடு, மனிதர்கள் என்று எல்லாமே புதியதாய் தோற்றமளிக்கும். கடவுளின் படைப்பில் பெண்களுக்கு பூவினும் மென்மையான உள்ளம் இருப்பதனால், குடும்ப வளர்ப்பில் ஓர் இதமான பாசத்தை மட்டுமே காட்டி அவள் வளர்க்கப்படுகிறாள். ஆனால் மாமியார் வீடு ஒரே நாளில் தாய்வீடு ஆகிவிடாது. அதற்காக தாய்வீடாக, மாமியார் வீட்டைப் பெண் எடுத்துக்கொள்ளாமலும் இருக்கக்கூடாது. எது எப்படி இருப்பினும் வீட்டுக்கு விளக்கேற்ற வந்த மருமகளை ஒவ்வொரு மாமியாரும் தன் மகள் என நினைத்து அக்கறை காட்டினால், எந்தக் குடும்பத்திலுமே மாமியார்– மருமகள் பிரச்சினை தோன்ற சந்தர்ப்பமே இருக்காது.

பொதுவாக மனைவியை விட கணவர் ஒரு வருடமாவது மூத்தவராக இருக்கின்ற காரணத்தால் மனைவிக்குப் புதிய சூழலை பக்குவமாய் எடுத்துச்சொல்லி உறவுகளை அறிமுகப்படுத்தி அவள் மனதில் இருக்கின்ற இனம்புரியாத அச்சத்தை அகலச் செய்ய வேண்டும். தனது குடும்பத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரைப் பற்றியும் எடுத்துச்சொல்ல வேண்டும். இவ்வாறு கூறுகையில் மனைவியும் தானாகவே தன் குடும்ப உறுப்பினர்களைப் பற்றிக் கூற முற்படுவாள். தனது அலுவலகம், உத்தியோகம், நட்பு வட்டம் பற்றி மனைவியுடன் பகிரலாம். இவ்வாறு மனைவியை ஒருவர் புரிந்து கொண்டுவிட்டால் பரஸ்பரம் பாசம், நேசம், மரியாதை எல்லாம் ஒருவர் மீது மற்றொருவருக்கு ஏற்பட, ஓர் ஆழமான நட்பு அங்கு தோன்றிவிடும். இப்படி நட்புப் பகிர்வு தொடரும்போது பெண்ணுக்கே உரிய கூச்சம் அகலத் தொடங்கும். இவள் நம்மவள் என்று கணவனுக்கும், கணவர் நம்மவர் என்று மனைவிக்கும் பாசம் பரவ அந்தப் பாசம் தாம்பத்திய உறவுக்கு அழைத்துச்செல்லும்.

அந்தக் கணத்தில் வெளிப்படும் நேசம், அவர்களின் ஆயுட்காலம் மட்டுமல்ல, இனி எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் இவளே என் மனைவி என்று கணவனும், இவனே எனது துணைவன் என்று மனைவியும் தீர்மானிக்க வழி செய்யும்.

தாம்பத்தியம் சங்கீதமாக – சுட ஸ்வரமாக ஜொலிக்க– விரிசல் என்ற பேச்சுக்கே அவர்கள் வாழ்வில் இடமில்லாமல் போய்விடும். மனங்கள் சங்கமித்த பின்பு சரீரங்களின் சங்கமிப்பு இடம்பெறும்போது அளப்பரிய இனிமை மலரும். ஒளிவு மறைவு என்ற வார்த்தைகளே அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் இருக்காது.

எல்லாச் சூழ்நிலையிலும் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செயற்படாமல், இருவரும் ஒருவர் தேவையை மற்றவர் புரிந்து, மனப்பரிமாற்றம் செய்துகொள்ளும்போது உடல் பரிமாற்றம் இதம் தரும்.

மனைவி என்பவள் தாயாக, தாதியாக, மந்திரியாக, ஆசிரியையாக தோழியாக எல்லாம் செயற்பட வேண்டும் என்று கவியரசர் கண்ணதாசனே கூறிச் சென்றிருக்கிறார்.

அதே போல் கணவனும் தனது மனைவிக்கு தந்தையாக, சகோதரனாக, ஆத்மார்த்த சினேகிதனாக நல்ல ஆலோசனைகளைக் கூறுகிற வழிகாட்டியாக திகழ வேண்டும்.

கணவன் பெரும்பாலும் தனது ஆசைகளை எளிதில் மனைவிக்கு வெளிப்படுத்துவான். ஆனால் எந்தப் பெண்ணுமே தன் விருப்பத்தை நேரடியாக கணவனிடம் வெளிப்படுத்துவது இல்லை. ஆனால் பெண் என்பவள் அவ்வாறு இருப்பதும் கூடாது. அவ்வாறு இருந்தாலும் கணவனானவன் தனது மனைவியின் ஆசைகளைப் புரிந்துகொண்டு, நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அது மனைவிக்கு கணவன் மீது மேலும் மேலும் மரியாதை– பாசம் தோன்றுவதற்கு பாலமாக அமையும்.

ஏற்ற நேரத்தில் ஏற்ற ராகத்தை இசைப்பது தான் இன்னிசை. ஏற்ற நேரத்தில் மனைவியெனும் வீணையை கணவன் மீட்டுவது நல்லிசை. வாழ்க்கையைத் தேனாக்கி– அதனை சுவைத்து மகிழ உங்களுக்கு ஆசையில்லையா? ஒருவரையொருவர் முதலில் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். மகிழ்ச்சி உங்கள் வாசலில் நிற்கும் போது ஏன் எட்ட நின்று ஏக்கம் கொள்கிறீர்கள்?

பெண்

சசி

# அழகாலும் ஆபத்துண்டு!

பொதுவாக அழகை ரசிக்காதவர்கள் எவருமே இருக்க மாட்டார்கள். ரசனையுள்ள இதயம், எதையும் அழகாக வைத்திருக்கவே விரும்பும். அந்த வகையில் எந்த ஒரு வீட்டிலும் அதன் அழகை மெருகூட்ட பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் கூட அதிக அக்கறை எடுத்துக்கொள்வதை இன்று நாம் காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் அந்த அழகு ஆபத்தாக மாறக் கூடாதல்லவா?

அந்த வகையில் வீடுகளில் என்னென்ன பூஞ்செடிகளை வளர்க்கலாம், என்னென்ன பூஞ்செடிகளை வளர்க்கக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியுமா?

வீட்டின் முன்பு அழகும்– அமைதியும் தரும் பவள மல்லிச் செடி வளர்க்கலாம். இது ஒரு வகை தெய்வீகத் தன்மை கொண்ட பூஞ்செடியாகும். வீட்டின் பின் பகுதியிலோ, ஓரப்பகுதியிலோ இது வளர்ந்தாலும் அவ்வளவு சிறப்பாகப் பூப்பதில்லை. பவள மல்லிப் பூவில் அனுமான் வாசம் செய்வதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பூ பூஜைக்கு உகந்தது என்பதால் தரையில் விழுந்து அசுத்தம் அடைய விடக்கூடாது. பூவைத் தொடுக்கும்போதும் சுத்தமான துணியை விரித்து அதில் தான் கொட்ட வேண்டும். வீட்டின் முன்பு வலது பக்கத்தில் பவள மல்லிச் செடி வையுங்கள். வீட்டுக்கு ஐஸ்வர்யமும், வீட்டிலுள்ளவர்களுக்கு ஆரோக்கியமும் கிடைக்கும்.

வீட்டின் முன்பு நீலசங்கு புஷ்பம் வைக்கலாம். இதனை வைத்தால் சனி தோஷம் நீங்குமாம். தேவையற்ற அலைச்சல் தரித்திரம் போன்றவைகளும் நீங்க வாய்ப்புண்டாகும்.

வீட்டின் முன்பு செம்பருத்திச் செடி வைக்கலாம். செம்பருத்தியில் தேவி வாசம் செய்வதாகக் கூறுகிறார்கள். பன்னீர்ப் பூக்கள், நந்தியாவட்டம் போன்றவைகளும் வைக்கலாம்.

வீட்டின் சற்றுத் தூரத்தில் வடமேற்குப் பாகத்தில் ஆல மரம் வைக்கலாம். தென் மேற்குப் பாகத்தில் வெற்றிலைச்செடி வைக்கலாம்.

வீட்டில் வளர்க்கக் கூடாதவையாக சர்ப்ப காந்தி, நிசாகாந்தி, பன்னீர் செண்பகம் போன்றன கூறப்படுகின்றன. அசோகமரம் வைத்தால் வீட்டில் சோகம் குடியேறும் என்று நம்புகிறார்கள்.

வீட்டின் பூஜை அறைக்கு உள்ளே பூஞ்செடிகள் எதுவும் வைக்கக் கூடாது. கள்ளி, முள்செடி, பூசணி போன்றவை வீட்டின் முன்னே இருக்கக் கூடாது. எந்த செடியையும் வீட்டை மறைக்கும் விதத்தில் வளர்க்கக் கூடாது. வீடு நன்றாக வெளியே தெரிய வேண்டும்.

எனவே அழகு ஆபத்தாக மாறிவிடாதிருக்குமாறு உங்கள் முயற்சி அமையட்டும். அப்போது தான் உங்கள் மனங்களிலும் மகிழ்ச்சிப் பூவை எதிர்பார்க்க முடியும்.

# விஞ்ஞான வினாக்கள்

1. உலோகங்களுள் மிக விரைவாக வெப்பத்தைக் கடத்தும் உலோகம் எது?
   செப்பு
2. ஆகாய விமானத்தின் புறாச்சட்ட இறகுகள் ஆக்கப்பட்ட கலப்புலோகம் எது?
   அலுமினிய கலப்புலோகம்
3. மின்னலினால் ஏற்படுத் தீயை அணைக்க. பயன்படுத்தப்படும் தீயணைபுக் கருவி எது?
   காபனீரொட்சைட்டத் தீயணை கருவி
4. பித்தளையினால் செய்யப்பட்ட குத்து விளக்கு பாத்திரம் ஒரு கலப்பு லோகமாகும். இது ஆக்கப்பட்ட பொருள்கள் எவை?
   செப்பு, நாகம்
5. அழுகிய கூழ் முட்டையில் மணத்தை ஏற்படுத்தும் வாயு எது?
   ஐதரசன் சல்பையிட்

*செ.கிருஷாந்தினி*
*கிளி.வேரவில். இ.ம.வி*

# அறிந்து கொள்ளுங்கள்


1. மனித உடலிலுள்ள தசைகள் எத்தனை? *639*
2. ரஷ்யாவின் தேசிய விளையாட்டு எது? *சதுரங்கம்*
3. பிறேஸிலின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் எது? *சோயா*
4. பன்றி அழகுப் போட்டி நடைபெறும் நாடு எது? *அவுஸ்ரேலியா*
5. புதன் கிரகத்தில் ஓர் ஆண்டில் எத்தனை நாட்கள் உண்டு?
   *88 நாட்கள்*

*நே.சுவேந்திரா*
*தரம் 9*
*மு/ஒட்.மகா.வித்தியாலயம்.*

# இருந்தும் கெடுத்தான் இறந்தும் கெடுத்தான்!

இருங்களூர் என்பது ஒரு கிராமம். அதில் ஒரு கணக்குப்பிள்ளை இருந்தார். அந்த ஊருக்கு அவர் ஒரு நன்மை கூட செய்ததே இல்லை. மாறாக பல கெடுதல்களையே செய்து வந்தார். அது அவரது பிறவிக் குணம். அவரால் அந்தக் கிராமம் அடைந்த துன்பம் சொல்லிமாளாது.

இருப்பினும் அவர் தன்னுடைய குணத்தை மாற்றிக்கொள்ளவே இல்லை.



அவருக்கு மிகவும் வயதானது. உடல் நலமும் கெட்டது. ஏறத்தாழ சாகும் நிலை. உயிர் ஊசலாடியது. அந்த சாகும் தருணத்தில், அவர் ஊரில் வாழும் முக்கிய பிரமுகர்களை அழைத்தார்.

ஐயா! நான் பாவி; கெட்டவன். என்னால் இந்த ஊருக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. சாகும்தறுவாயில் எனக்கு புத்தி வந்தது. எனது மனச்சாட்சி மிகவும் உறுத்துகிறது. எனவே, எனது கடைசி ஆசை ஒன்றை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் செய்வீர்களா என்று கண்ணீர் மல்கிட மனம் உருகி வேண்டிக் கொண்டார்.

அதுகண்ட ஊர் மக்களுக்கு இரக்கம் பிறந்தது. சாகக் கிடக்கிறவரிடம் பகைகூடாது. அவரது ஆசையை நிறைவேற்றுவது தான் கடமை என்று எண்ணி, செய்கிறோம்! சொல்லுங்கள் என்றனர்.

ஐயா! நான் இந்த ஊருக்கு செய்த தீமைகளை நினைத்தால் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. எப்படியும் இன்றோ நாளையோ இறந்துவிடுவேன். தயவு செய்து என் பாவ உடலை... இந்த ஊர் சுடுகாட்டில் தகனம் செய்ய வேண்டாம்.

அப்படிச் செய்தால் என் ஆத்மா சாந்தி அடையாது. எனவே, தயவு செய்து என் உடலைக் கொண்டு போய் அடுத்த ஊர் சுடுகாட்டில் தகனம் செய்துவிடுங்கள் என்று மனம் உருக வேண்டிக் கொண்டார் கணக்கர்.

மறுநாள் காலையே கணக்கர் இறந்துவிட்டார். அவரின் கடைசி ஆசையை நிறைவேற்றிட, அந்த ஊர் மக்கள் எல்லாம் சேர்ந்து ஊர்வலமாக அவர் உடலைச் சுமந்து கொண்டு பக்கத்து ஊர் சுடுகாட்டிற்குச் சென்றனர்.

இதற்குள் இந்தச் செய்தி பக்கத்து ஊரில் காட்டுத்தீயாய் பரவியது.

இரண்டு ஊர்களுக்கும் ஏற்கனவே தீராத பகை. அந்த ஊர்க்காரர்கள் எல்லாரும் கூடி, எப்படி அயலூர் பிணத்தை நம்மூர் சுடுகாட்டில் கொளுத்துவார்கள்? அதுவும் இந்தக் கணக்கன் மிகவும் பொல்லாதவனாயிற்றே... இவனது பிணம் வந்தால் எங்க ஊருக்கு பாவம் நேரிடும், என்று பேசி கோபம் கொண்டு, தடுக்க கத்தி, கம்பு, ஈட்டி போன்ற ஆயுதங்களுடன் வந்தனர்.

சண்டை, சச்சரவு, பெரும் கலவரமாக வெடித்தது. இருதரப்பிலும் ஏகப்பட்ட உயிர்ச்சேதங்கள்.

காலங்கடந்த பின்பே கணக்கனின் துஷ்ட எண்ணத்தை அறிந்தனர் மக்கள். அடப்பாவி இருந்தும் கெடுத்தான்; செத்தும் கெடுத்தான் இருங்களூர் கணக்கன்... இவனால் இறந்து போனோர் எத்தனைபேர் என்று சொல்லி அழுதனர்.

இவர்களால் மற்றவர்களுக்கு நன்மை செய்வது என்பது முடியாத காரியம்... கடைசி வரையில் தவறே செய்வர். இவர்களைப் போன்ற தீயவர்களாய் நீங்கள் யாரும் இருக்கக் கூடாது

# நூல்களும் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| சீறாப்புராணம் | — | உமறுப் புலவர் |
| கந்தபுராணம் | — | கச்சியப்பர் |
| திருவாசகம் | — | மாணிக்கவாசகர் |
| திருப்புகழ் | — | அருணகிரிநாதர் |
| சிலப்பதிகாரம் | — | இளங்கோ அடிகள் |

*ஹரிராம்*
*தரம் 6,*
*கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை.*

# தேசிய சின்னங்கள்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | - | தங்கத்தடி |
| ஈராக் | - | சிவப்பு றோஜா |
| இந்தியா | - | சிங்கத்தலை |
| ஜப்பான் | - | கூட்டுப்புழு |
| சீனா | - | திராட்சை மலர் |
| எகிப்து | - | தாமரைப்பூ |
| பாகிஸ்தான் | - | பிறை |
| கனடா | - | வெள்ளை மலர் |
| பிரான்ஸ் | - | அல்லி மலர் |
| பிரித்தானியா | - | றோஜா மலர் |

*ப.றேனு*
*ஒட்டங்குளம்*

# சிறார்களின் கைவண்ணம்





கி.ரகவன்
தரம் 10
கிளி/ பூநகரி ம.வித்



க.ஜெயந்தன்
தரம் 8
கிளி/ ஜெயபுரம் க.த.க.பாடசாலை.



அ. அபூரன்
மல்லாவி மத்திய கல்லூரி



செ.சிவகார்த்திகா
மு/மந்துவில் அரசரத்தினம் வித்.

# எதிர்ச் சொற்கள்

| | | |
|---|---|---|
| நண்பர்கள் | — | பகைவர்கள் |
| தீமை | — | நன்மை |
| உதவி | — | உபத்திரம் |
| மறதி | — | ஞாபகம் |
| பலர் | — | சிலர் |
| பொறுத்தார் | — | பொங்கினார் |
| வெறுப்பு | — | விருப்பு |
| தூய்மை | — | கபடம் |
| சாந்தம் | — | கர்வம் |
| வனவாசம் | — | அஞ்ஞாதவாசம் |
| நறுமணம் | — | துர்நாற்றம் |
| பலம் | — | பலவீனம் |
| சோம்பல் | — | உற்சாகம் |
| அறிவுள்ள | — | அறிவற்ற |
| வரவு | — | செலவு |
| ஒற்றுமை | — | வேற்றுமை |
| முதியவர் | — | இளையவர் |
| அச்சம் | — | துணிவு |

*ச. பிரியங்கா*
*தரம் 6*



# இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணமும் முஸ்லிம் தலைவர்களின் நிலைப்பாடும்

இலங்கையில் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் கண்டு நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் பல்வேறு மட்டங்களிலும் எடுக்கப்பட்டு வருகின்றன.


பேரியல்

இனப்பிரச்சினை விவகாரத்தில் பிரதான பாத்திரம் வகிக்கின்ற தமிழ் சமூகம் தமக்கான தீர்வின் அடிப்படையாக வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைந்த மாநிலமாக அமைதல் வேண்டும் என்ற முன்மொழிவை முன்வைத்திருக்கிறது. இணைந்த வடக்கு — கிழக்கு மாநிலத்துக்கான அதி உச்ச அதிகாரத்தைப் பெற்று அதனை ஒரு சுயாட்சிப் பிராந்தியமாக நிருவகிப்பது தொடர்பிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் கவனம் செலுத்தி வருகின்றன.

இவ்வாறான சுயாட்சி மாநிலம் ஒன்றை சமஷ்டித் தீர்வின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம் என அவர்கள் நம்புகின்றனர். நோர்வே அனுசரணையுடன் ஒஸ்லோவில் இறுதியாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது சமஷ்டி அடிப்படையிலேயே தீர்வு காண்பதற்கு அரசும், புலிகளும் இணங்கியிருக்கின்றனர்.

## இலங்கை - இந்திய ஒப்பந்தம்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதல் அத்திவாரம் 1987 ஆம் ஆண்டு இலங்கை— இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இடப்பட்டது. அந்த ஒப்பந்தம் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் தற்காலிகமாக இணைப்பதற்கு வழி செய்தது. அந்த ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சியாக பிரகடனம் செய்யப்பட்டு, தனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வந்தது.

அக்கட்சி முதலாவது எதிர்கொண்ட சவால் இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட விவகாரமாகும். அப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத முஸ்லிம் காங்கிரஸ் வெளியில் இருந்தவாறே முஸ்லிம் சமூகத்தின் குரலாக ஒலிக்க வேண்டியிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் வடக்கு — கிழக்கு இணைப்புக்கு தனது பலமான எதிர்ப்பைத் தெரிவித்தது. எழுச்சிக் கூட்டங்கள் பலவற்றை நடத்தி முஸ்லிம் மக்களுக்கு வடக்கு — கிழக்கு இணைப்பினால் ஏற்படப் போகும் பாதக விளைவுகள் குறித்து விளக்கமளித்தது. இலங்கை — இந்திய ஒப்பந்தம் முஸ்லிம் சமூகத்தின் முதுகில் எழுதப்படும் அடிமைச் சாசனம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் வர்ணித்தார்.

## முஸ்லிம் பிரதிநிதிகள் எதிர்ப்பு

அதேபோன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் எம்.பிக்களும் வடக்கு — கிழக்கு இணைப்பை எதிர்த்தனர். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன நடத்திய சர்வகட்சி மாநாடுகளிலும் முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் தமது ஒட்டு மொத்தமான ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

கலாநிதி பதியுத்தீன் மஹ்முத், மசூர் மௌலானா, எம்.எச்.எம். அஷ்ரப், எம்.எம். முஸ்தபா, எம்.ஐ.எம்.மொஹிதீன் உள்ளிட்ட முஸ்லிம் கவுன்ஸில் பிரதிநிதிகள் வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

எனினும், இலங்கை, இந்திய அரசுகள் முஸ்லிம் சமூகத்தின் ஒட்டு மொத்தமான எதிர்ப்பையும் கணக்கில் எடுக்காது, அவர்களின் அபிலாஷைகளை முற்றாகப் புறந்தள்ளிவிட்டு, வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் ஒன்றாக இணைத்து விட்டன. அதனால் இணைக்கப்பட்ட மாகாண சபைக்கான முதலாவது தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ற முஸ்லிம் காங்கிரஸின் முன்மொழிவை முஸ்லிம் அமைப்புகளும், மக்களும் ஏற்றுக்கொண்டனர்.

## மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ்

ஆனால், இறுதி நேரத்தில் முஸ்லிம் காங்கிரஸே இரவோடிரவாக இந்திய அரசுடன் பேச்சு நடத்தி, வேட்பு மனுத்தாக்கலுக்கான இறுதித் தினத்தன்று வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தது. இத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் 17 ஆசனங்களைப் பெற்று, மாகாண சபையில் எதிர்க் கட்சி அந்தஸ்துக்கு வந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் இறுதி நேரத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டமைக்கு பின்வரும் காரணங்களை அதன் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் முன்வைத்திருந்தார்.

* வடக்கு — கிழக்குத் தமிழர்களின் ஒட்டு மொத்தமான அபிலாஷைகளுக்குக் குறுக்கே முஸ்லிம் சமூகம் நின்று தமிழ் சமூகத்துக்கான தீர்வைத் தடுத்துவிட்டது என்ற பழியைத் தவிர்த்துக் கொள்வது.

* முஸ்லிம் சமூகத்தின் ஒட்டுமொத்தமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டு விட்டதால் இணைந்த வடக்கு — கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படுவதோடு, அவர்களின் அபிலாஷைகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது.

முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதன் பின்னர் இடம்பெறும் முதலாவது தேர்தலாக வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அமைந்திருப்பதால், அதில் பங்குபற்றி முஸ்லிம்களின் அங்கீகாரத்தையும், ஆணையையும் பெற்று ஒரு பேரம் பேசும் சக்தியாக உருவெடுப்பதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகவுமே இத் தேர்தலில் போட்டியிட வேண்டி ஏற்பட்டது என அஷ்ரப் அப்பொழுது தெரிவித்தார்.

## வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு

அதன் பின்னர் வடக்கு — கிழக்குப் பிரிப்பு என்ற பேச்சுக்கே முஸ்லிம் காங்கிரஸும், அதன் தலைவர் மர்ஹூம் அஷ்ரபும் இடமளிக்கவில்லை. நிப்ந்தனையுடனான இணைப்பு என்ற முன்மொழிவுடனேயே அஷ்ரப் செயற்பட்டு வந்தார். இணைந்த வடக்கு — கிழக்கில் அங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள் தம்மைத் தாமே நிருவகிப்பதற்காக தனியான அதிகார அலகு ஒன்று ஏற்படுத்தித்தரப்பட வேண்டும் என்பதே அஷ்ரப் முன்வைத்த நிபந்தனையாகும்.

அவர் தனது கோரிக்கையை வென்றெடுப்பதற்காகத் தமிழ் தலைவர்கள் பலருடன் சுமுகமான பேச்சுக்களை நடத்தினார். அதில் வெற்றியும் கண்டார். இனப்பிரச்சினைத் தீர்வின் போது வடக்கு — கிழக்கு மாநிலத்தில் முஸ்லிம்களுக்கான தனி அதிகார அலகு ஒன்றைத் தருவதற்கு தமிழர்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணக்கத்தையும் அவர் பெற்றிருந்தார். அது தொடர்பில் மறைந்த தலைவர் மு.சிவசிதம்பரத்துடன் உடன்படிக்கை ஒன்றும் செய்து கொள்ளப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் அதி உச்ச பீடம் மற்றும் அரசியல் பீட உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், பேராளர்கள், கட்சி அங்கத்தவர்கள் அனைவருமே அதனை ஏற்று செயற்பட்டு வந்தனர். வடக்கு — கிழக்கு பிரிப்பு என்ற பேச்சுக்கே முஸ்லிம் சமூகத்தில் இடமிருக்கவில்லை.

## அதாவுல்லாவின் கோஷம்

முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற பின்னர் முன்னாள் பிரதி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா மாத்திரம் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இரண்டும் பிரிக்கப்பட்டு தனித்தனியாக நிருவகிக்கப்பட வேண்டும் என உரத்துக் குரல் எழுப்பி வருகின்றார். இக் கோரிக்கையின் பின்னணி என்ன?

அதாவுல்லா இணைந்த வடக்கு — கிழக்கு மாகாண சபையில் உறுப்பினராகப் பதவி வகித்தவர். மறைந்த தலைவர் அஷ்ரப் உயிருடன் இருக்கும் வரை வாய் திறந்து பேசாதவர். ரவூப் ஹக்கீமின் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸில் அங்கம் வகித்தபோது வடக்கு — கிழக்கு பிரிப்பு பற்றி ஒரு வார்த்தைதானும் பிரஸ்தாபிக்காதவர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் வன்னி சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது மௌனியாக இருந்தவர். இப்போது மட்டும் திடீரென ஞானம் வந்து பேசுவதன் மர்மம் என்ன?

முஸ்லிம்காங்கிரஸிலிருந்து வெளியேறிய பின்னர் மக்களைக் கவருவதற்காக ஒரு பிரசார யுக்தியாகவே அதாவுல்லா வடக்கு — கிழக்கு பிரிப்புக்கான கோஷத்தை முன்வைத்திருக்கிறார். ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிரான வீராவேஷப் பேச்சுடன் இக் கோஷத்தையும் முழங்குவதன் மூலம் மக்களின் கவனத்தையும், நல்லபிமானத்தையும் தன் பக்கம் ஈர்க்கலாம் என அவர் நம்புகிறார்.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து சேகு இஸ்ஸதீன், மயோன் முஸ்தபா தொடக்கம் ஹிஸ்புல்லா, பேரியல் அஷ்ரப் வரை எத்தனையோ பேர் விலகிச் சென்றிருக்கின்றனர். ஆனால், எவருமே வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும் எனக் கூறவில்லை. இணைந்த வடக்கு — கிழக்கில் முஸ்லிம்களின் உரிமைகள், அபிலாஷைகள் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், அதற்காக தனியான அதிகார அலகு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் எனவுமே அனைவரும் கோரி வருகின்றனர்.

## தமிழ் - முஸ்லிம் உறவு

வடக்கு — கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கக்கோரும் அதாவுல்லாவின் கோஷம் அங்கு வாழ்கின்ற தமிழ் — முஸ்லிம் மக்களிடையான உறவை சீர்குலைக்கவும், முஸ்லிம் சமூகத்தினை பெரும் ஆபத்தில் மாட்டி விடவுமே வழிவகுக்கும். கடந்த காலங்களில் தமிழ் — முஸ்லிம் உறவில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்ற போதிலும் அவை பின்னர் சீராகி விடுவதே வழக்கமாக இருந்தது. கடந்த இரு தசாப்த காலத்தில் வடக்கு— கிழக்கு முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளினால் மட்டுமல்லாது, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ஈ.என்.டி.எல்.எப். போன்ற ஆயுதக் குழுக்களினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை எவரும் மறுக்கவில்லை. தற்போதும் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

அதற்காக வடக்கையும், கிழக்கையும் பிரித்துவிட்டால் முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு விடுமா? முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகள் அதன் மூலம் நிறைவேறி விடுமா? தமிழர்களும், முஸ்லிம்களும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் இணைந்து தீர்வைத் தேடுவதன் மூலமே நிரந்தர சமாதானத்தையும், சிங்களப் பேரினவாதத்திடமிருந்து விடுதலையையும் பெற முடியும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் சமூகத்தின் அடிப்படையான அபிலாஷைக்கு குறுக்கே நின்று கொண்டு முஸ்லிம் சமூகம் தனது அபிலாஷைகளை அடைந்துகொள்ள முடியாது. தமிழர்களுக்கு தீர்வு இல்லை என்றால் முஸ்லிம்களுக்கும் தீர்வு கிடையாது என்பதை உணர்தல் வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், ஐ. தே.க. மயோன் முஸ்தபா, 'நுஆ' — சேகு இஸ்ஸதீன், ஹிஸ்புல்லா போன்றோர் இவ்விடயத்தில் மிகவும் தெளிவான நிலைப்பாட்டில இருந்து கொண்டே முஸ்லிம் சமூகத்திற்கான தீர்வு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். அதில் பேரியல் தலைமையிலான நுஆ தரப்பினர் தற்போது ஜே.வி.பி.பேரினவாதிகளுடன் சங்கமித்திருப்பதால் அவர்களது போக்கு திருப்தியற்றதாகவே அமைந்திருக்கிறது.


ஹக்கீம்

## வடக்கு - கிழக்கு பிரிப்பு சாத்தியமில்லை

அதாவுல்லாவைப் பொறுத்தமட்டில் தான் ஜனாதிபதியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வடக்கு — கிழக்குப் பிரிப்பு பற்றிய அம்சமும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். ஆனால், ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அவ்விடயத்தை நிறைவேற்றிக் கொடுப்பாரா? நிச்சயமாக செய்யமாட்டார். ஆனால், ஜே.வி.பி.யினர் வடக்கு — கிழக்கைப் பிரித்து விடுமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க முற்படலாம்.

அதாவுல்லா, ஜே.வி.பியினருடன் கைகோத்துக் கொண்டு வடக்கு — கிழக்கு பிரிப்பு பற்றிப் பேசுவதால் அவ்விடயம் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு வகையியான அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. காலத்துக்குக் காலம் தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்தாள்வதற்கு சிங்களத் தலைவர்கள் மேற்கொண்டு வந்த நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

வடக்கு — கிழக்கு மாகாணசபை நிருவாகத்தில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பது உண்மைதான். அதற்காக அதாவுல்லா ஜனாதிபதி சந்திரிகாவினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் அரசாங்கங்களில் அமைச்சராகப் பதவி வகித்தபோது மேற்கொண்ட நடவடிக்கைதான் என்ன? முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி, ஓரளவு வெற்றி கண்டார். வடக்கு — கிழக்கு மாகாண சபையில் கல்வி, கலாசாரத் துறைகளில் முஸ்லிம்களுக்கென தனியான பிரிவுகளை ஏற்படுத்தி முஸ்லிம் பணிப்பாளர்களையும், அமைச்சுகளில் உதவிச் செயலாளர்களையும் நியமிக்க வழி செய்தார்.

வடக்கு — கிழக்கு பிரிப்பு என்பது சாத்தியமற்ற — நடக்கமுடியாத ஒரு காரியம் என்பதை நன்கு உணர்ந்திருந்தும் வெறுமனே ஒரு கவன ஈர்ப்புக்காக விதண்டாவாதம் புரிந்துகொண்டு கூப்பாடு போடுவதில் அர்த்தமில்லை. இனப்பிரச்சினைத் தீர்வின்போது முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில், நியாயமான தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டங்களில் பங்கேற்பதே சமூகத்தின் மீதான உண்மையான அக்கறையை வெளிப்படுத்தும்!

- அஸ்லம் எஸ். மௌலானா-

# அச்சம் கொள்ளும் பருவ காலம்

பாரிஸ் இருபது மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றை ஆரோன் டிஸ் ஸமென்ட் என்றே அழைப்பர்.

பெரும்பாலான பிரதானமான மாவட்டங்களில் உள்ள நகர்கள், சந்தைப் பகுதிகள் வசதி படைத்தோர் வசித்து வரும் இடங்களாக இருந்து வந்தன. மற்றைய பகுதிகளில் தொழில்புரியும் வர்க்கத்தினர் வாழ்ந்து வந்தனர்.

பதினெட்டாவது ஆரோன்டிஸ்ஸமென்டில் இருக்கிறது செயின் நகரம். சமூகவியல் ரீதியாக வேறுபட்டு நிற்கும் நகர் அது. நீலப்படங்கள் காட்டும் சினிமாக் கொட்டகைகள், விபசாரிகள், போதைப்பொருள் விற்பனையாளர்கள், சிறிது நாட்கள் வாழ்க்கை நடத்துவோர் என்று பல தரப்பட்டோர் அங்கு ஜீவிதம் நடத்தி வந்தனர். அவர்களுக்கு அந்த நகர் நல்ல சுவாத்தியம்.

அவர்கள் எல்லோரும் புலம் பெயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். நன்கு பாடவும், ஆடவும், நடிக்கவும் கூடத் தெரிந்தவர்கள். அந்த சுவாத்தியம் அப்படி அவர்களை மாற்றி இருந்தது. பண்பும், குணமும் இடத்துக்கும் சுவாத்தியத்துக்கும் ஏற்றால் போன்று ஆட்களையும் மாற்றும். அவர்களின் குணங்களிலும் பேச்சு, நடை பாவனைகளிலும் அந்தந்த மண்ணுக்குரிய பழக்கவழக்கங்கள் ஒட்டிக் கொள்ளும். இதனை செயின் நகருக்குள் நுழையும் ஒருவர் காண்பார். அம்மண் வாசனை வீசும் கிராமியமும் அதற்கு விசேஷமாக உண்டு.

ஒக்டோபர் 5, 1984 இல் 91 வயதான மூதாட்டியை அவளது வீட்டில் வைத்து ஒருவர் அடித்து அவளுக்கு பாலியல் சேட்டை செய்து, அவளின் எல்லாப் பணத்தையும் எடுத்துக்கொண்டு போயிருந்தார்.

ஜேர்மைன் பெரிரோட் எனும் அந்த மூதாட்டி மயங்கிய நிலையில் காணப்பட்டாள். பொலிஸாரிடம் எதனையும் முறையிடக்கூட இயலாதவளாகக் கிடந்தாள்.

பொலிஸார் சும்மாவா விடுவார்கள். அதிலும் பாரிஸில்? உண்மையைத் தேடித் தேடி ஒரு தொங்கலைப் பிடித்தனர். ஓய்வூதியம் பெறுவோரை அந்தப்பகுதியில் தாக்கியவர்களின் பட்டியல் பொலிஸாரின் கண்ணுக்குத் துரும்பானது.

### வன் செயலான தாக்குதல்

அதே நாள் அயலில் உள்ள ஒன்பதாவது ஆரோன்டின்ஸ்ஸ மென்டில் அன்னா பார்பியா பொனிபஸ் என்பவள் அவளின் வீட்டில் வைத்துத் தாக்கப்பட்டாள். பொனிபஸ் போன்று அதிஷ்டம் மிக்கவளாக ஜேர்மைன் இருக்கவில்லை.

பொனிபஸ் 83 வயதுடையவள். றூசோல்னியர் எனும் பகுதியில் உள்ள தொடர்மடியில் தனியாக வசித்து வந்தாள். உடன் துணைக்கு எவரும் இருக்கவில்லை. மதிய நேரம் இருக்கும். கடைக்குப் போய் சாமான்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினாள். வீட்டுக்குள் வந்து காலணிகளைக் கழற்ற முன் கதவினை மூடுவதற்காக அதனைச் சாத்தி திறப்பையும் போட அடி விழுந்தது.


அடி. கண்ட கிண்ட இடமெல்லாம் அடி. தலையணியை முகத்தில் திணித்து மூச்சு வெளிவராது தடுக்கப்பட்டாள். அவளினதும் கதைமுடிந்தது. கதவில் திறப்பு தொங்கிக் கொண்டிருந்தது.

தாமதமாகி அவளது உடல் கண்டு பிடிக்கப்பட்டது. அதில் வல்லுறவுக்குள்ளானதற்கான அடையாளமும் இருந்தது.

200 – 300 பிரான்ஸ் நாணயம் அவளின் பையில் இருந்து திருடப்பட்டிருந்தது.

ஒக்டோபர் 9 ஆம் திகதி பதினெட்டாம் ஆரோன்டிஸ்ஸமென்டில் தீப் பற்றிக் கொண்டது. தீயணைக்கும் படையினர் விரைந்தனர். நெருப்பு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. கொலை நடந்து நான்கு தினங்களுக்குப் பிறகு தீ பிடித்த சம்பவம் நிகழ்ந்தது.

தீப் பிடித்த தொடர்மாடியில் இருந்து 89 வயது மதிக்கத்தக்க சுசானா போகோல் என்பவளின் சடலம் மீட்கப்பட்டது. வாயில் பிளாஸ்ரிக் பைகளை திணித்து அவள் உயிர் பறிக்கப்பட்டிருந்தது. 300 பிராங் பெறுமதியான அவளது கைக்கடிகாரமும் 500 பிராங் றொக்கமும் காணாமற் போய் இருந்தன.



கா.திகிலன்

இப்போது கிட்டத்தட்ட ஒரு மாதமாகி விட்டது. வயதான எந்த மூதாட்டியோ, வயதான பெண்ணோ கொலைக்கு உள்ளாகவில்லை. ஒரு மாதமாகியும் ஒன்றும் நடக்கவில்லை.

நவம்பர் 5 ஆம் திகதி திங்கட்கிழமை. இன்னுமொரு சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. 71 வயதான ஓய்வு பெற்ற பள்ளிக்கூட ஆசிரியை சீகோரெஸ்கோதான் அவள். கட்டிப் போட்டு பாலியல் சேட்டைகள் எல்லாம் புரிந்த பிறகு சாகும்வரை அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தாள்.

அவளது தொடர்மாடி வீட்டில் இரண்டு நாட்களாக சடலமாகவே கிடந்தாள். அதன் பிறகுதான் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

கொலை புரியும் வன்முறையானது புதினமான கலைதான். அவளது மூக்கும் தாடையும் உடைந்து சிதைந்து போயிருந்தன. அவள் தோளில் போடும் ஸ்காபை எடுத்து குரல் வளையை சுற்றி நெரித்திருந்தனர். அவளது வலது விலா எலும்பு முறிந்திருந்ததாகவே பிரேத பரிசோதனையின் முடிவுகள் தெரிவித்தன.

இந்த முறை கொலை செய்தவர்கள் 10,000 பிரான்ஸ் நாணயத்தை அபகரித்துக் கொண்டு போயிருந்தனர். அந்தப் பணம் பத்திரப்படுத்திக் காக்கும் மறைவான இடத்தில் இருந்தது. கள்வர்களுக்கும் கொலைகாரர்களுக்கும் மறைவிடங்கள் நன்கு பரிட்சயமானவை. ஒளிவு மறைவு என்பவை எல்லாம் மற்றவர்களுக்குத்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு நவம்பர் 7 ஆம் திகதி றூ மாக் சீகுயின் பகுதியில் நான்காவது சடலமும் கண்டு பிடிக்கப்பட்டது. 84வயதான அலைஸ்பெனைனம். சலடத்தைக் கண்டெடுத்தவர் மகன் அன்றோ.

அவள் செத்து இரு மணித்தியாலங்களின் பிறகே தெரிய வந்தது.

அதுவும், அன்றோ வழமைபோல் பகற் சாப்பாடு உண்ணவரும் வேளையில் தான் இந்தச் துக்கத்தை, துயரைக் கண்டான்.

அவள் முகத்தில் காயமுற்றிருந்தாள். பலத்த அடிக்கும் சித்திரவதைக்கும் உள்ளாகி இருந்தாள். அவள் சேர்த்து வைத்திருக்கும் பணம் எங்கு என்று கேட்டுக் கேட்டு சித்திரவதை செய்யப்பட்டிருந்தாள். அசிட்டும் அடிக்கப்பட்டிருந்தாள். வாயும் தொண்டையும் எரிந்திருந்தன. வாயில் துணி அடைக்கப்பட்டிருந்தது. கைகள் இரண்டும் பின்னே வைத்து கட்டப்பட்டு கட்டிலில் வீசப்பட்டுக் கிடந்தாள். குரல்வளை நெரிக்கப்பட்டே கொலை செய்யப்பட்டிருந்தாள்.

அலைஸ் பெனைனின் மகனின் மதிப்பீட்டின் படி வீட்டில் இருந்த 400 – 500 பிரான்ஸ் றொக்கம் எடுத்துச் செல்லப் பட்டிருந்தது. இந்தச் சிறு தொகைக்காக கொலை செய்யப்பட்டிருந்தாள். சிறு தொகையும் கூட கொலை செய்யத் தூண்டும்.

மறுநாள், அலைஸ் பெனைனின் வீட்டில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் மற்றுமொரு கொலை வீழ்ந்தது. 80 வயதான மேரி சோய்தான் கொலையுண்டவள்.

மேரி வதைக்குள்ளாகி இருந்தாள். வயரால் கட்டப்பட்டு வாய்குள் துணி திணிக்கப்பட்டிருந்தது. இதனால் உள் தாடை உடைந்திருந்தது. கொலைகாரன் அல்லது கொலைக்காரர்கள் இருநூறு அல்லது முன்நூறுக்கும் அதிகமான பிரான்ஸ் பணத்தை அவளிடமிருந்து பெறமுடியவே இல்லை.

### நிறையக் கொலைகள்

பொலிஸார் சிரமமெடுத்து ஒரு பிணத்தை கண்டுபிடித்து இனம் கண்டனர். இன்னும் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அடுத்த நாள் மேரியா மைக்கோ டாஸ் என்பவரும் இதே முறையில் கொலை செய்யப்பட்டிருந்தாள். அவளின் வயது 75. கொலைகாரன் 300 பிராங் பணத்தோடு பறந்திருந்தான்.

ஒரு வாரத்திற்குள் மேலும் இரு சடலங்கள் மீட்கப்பட்டன. ஒன்று 18 ஆவது ஆரோன் டிஸ்ஸமென்டிலும், அடுத்தது 17 ஆவது ஆரேன்டிஸ்ஸமென்டிலும் கிடந்தன.



இந்த கொலைகள் எல்லாம் 6 அல்லது 8 தினங்களுக்கு முன்னர் நடந்திருக்க வேண்டும்.

82 வயதான ஜீன் லோரன்ஸின் சடலம் மேல்மாடியில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கொலை ஏதாவது ஒரு பகையால் நடந்திருக்க வேண்டும். மிகவும் சிறிய தொகைப் பணம் இல்லாமல் போய் இருந்தது.

நான்கு மணித்தியாலங்களின் பின் 800 மீற்றர்களுக்கு அப்பால் மற்றும் ஒரு சடலம் மீட்கப்பட்டது. மேடம் போல் விக்ரரே கொலை செய்யப்பட்டவள். வயது 77.

அவள் சுமார் 8 தினங்களாக செத்தே கிடந்தாள். அதன்பிறகு தான் கண்டு பிடித்திருந்தனர்.

### ஒரே இடத்தில் எட்டுக் கொலைகள் நிகழ்ந்திருந்தன

இக் கொலைகள் பற்றி தனிமையில் வசிக்கும் பெண்கள் எச்சரிக்கப்பட்டனர். பெரும்பாலான கொலைகள் சாமான் வாங்கிக் கொண்டு வீடு திரும்பும் வழியில் இடம் பெற்றிருந்தன.

பெண்கள் தாக்கப்பட்டிருந்தனர். கட்டப்பட்டும், வாயில் துணி திணிக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டு இருந்தனர்.

அவர்களுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்ட வன்செயல்கள் படு மோசமானவை. பணத்தை கொள்ளை இடுவது தான் கொலையாளியின் ஒரே நோக்கமாக இருந்துள்ளது. இருந்தாலும் களவாடப்பட்ட தொகை மிகவும் சொற்பம். அதனால் இவர்களின் நோக்கம் பணம்கொள்ளையிடல் தான் என்று உறுதி செய்ய முடியாதிருந்தது.

### பொலிஸ்மோப்பம் பிடிக்கும் பணியை முடுக்கிவிட்டது

கொலை செய்பவர்களைக் கண்டு கொள்ள விஞ்ஞான முறையினைக் கைக் கொண்டது பொலிஸ். இதோடு சேர்த்து பொலிஸாரின் அனுபவம், ஊகிப்பு என்பவனவற்றினையும் வைத்து கொலைகாரர்களை தேடலாயினர். ஏன் அவர்கள் கிழவி என்று சொல்லத் தகுந்த வயதானவர்களை கொலை செய்யத் தெரிவு செய்கிறார்கள். பெரும்பாலான கொலைஞர்கள் இளம் வயதான பெண்களைத் தான் பாலியல் தாக்கத்துக்குப்பிறகு கொலை செய்வதுண்டு. அப்படி இருக்க இது எப்படி?

கொலைகாரர்களுக்கு குறித்த ஒரு தொழிலும் இருக்கவில்லை. ஏனென்னில் பகல் பொழுதிலும் கொலை நடந்துள்ளது. கொலைகாரர்கள் இளம் வயதினராக இருக்க வேண்டும். அவர்கள் இந்த வயதானவர்களை வதைத்துள்ளதைப் பார்த்தால் அத்தகைய முடிவு சரி தான். என்றாலும் அவர்களைக் கண்டுபிடிக்க இவை உதவப்போதாதவை. ஒருவரல்ல பலர் இக் கொலைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதனால் மேலும் குழப்பம் அதிகரித்தது. யாரும் பிடிபடவே இல்லை. செய்பவற்றையெல்லாம் செய்துவிட்டு தப்பிக்கொள்பவர்களும் உண்டு தான்.

## எரிபொருளாகும் கடற்பாசி

உலகில் பெரும் பகுதியை கடல் சூழ்ந்துள்ளது. கடலின் மிகப்பெரும் பகுதி கடற்பாசிகளால் நிரம்பியுள்ளது. கடற்பாசிகள் இதுவரை உணவாகவும், உரமாகவும் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

தற்போது கனடாவில் கடற்பாசிகளில் இருந்து மீத்தேன் தயாரிக்கும் புதிய முறை கண்டறியப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடல்பாசிகளை உலர வைத்து எரிபொருளாக பயன்படுத்தும் முறை மூன்றாம் உலக நாடுகளில் இருந்து வந்தது.

ஆலேரியா, நோடோஸம், லேமினேரியா, டிஜிட்டேட்டாலே, கனஸ்டோனி ஆகிய கடற்பாசிகளின் வகைகள் எரிபொருளாக பயன்படுத்தப்பட்டன.

கடற்பாசிகளை உலர வைத்து அப்படியே எரிப்பதால் அதனது முழுமையான ஆற்றல் கிடைக்காத குறையை விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்

கடல்வாழ் தாவரங்களில் பெரும்பகுதி ஆல்கே எனப்படும் பாசிகளாக இருப்பதால், கடல் பாசிகளில் இருந்து முழுமையான ஆற்றல் பெறப்பட்டால் உலகை அச்சுறுத்தும் எரிசக்தி பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும் என விஞ்ஞானிகள் நினைக்கின்றனர்.

கடற்பாசிகளில் இருந்து கரிப்பொருளை உற்பத்தி செய்து எரிபொருளாக பயன்படுத்தும் முறையும் முழுமையான தீர்வாக இருக்கவில்லை.

தற்போது, கடல்பாசி உற்பத்தியில் கனடா, கொரியா, ஜப்பான், மெக்சிக்கோ ஆகிய நாடுகள் முன்னணியில் இருக்கின்றன.

இந்தியாவின் பரந்த கடற்பரப்பும் அதன் தீவுத் தொகுதிகளும் பல்வேறுபட்ட கடல் பாசி இனங்களின் புகலிடமாக விளங்குகின்றன.

கடற்பாசிகளில் இருந்து மீத்தேன் உற்பத்தி செய்து எரிபொருளாக பயன்படுத்தும் முறையைப் பரவலாக்க வேண்டும் என மெக்சிகோ விஞ்ஞானிகள் கூட்டறிக்கையில் கூறியுள்ளனர்.



# டேஸ்ட்கடை தணிகாசலம்

அந்த தோட்டத்துக் கோயில் களைகட்டிக் காணப்பட்டது. தோட்டத்துச் சனங்களும் கூடி இருந்தனர். பூஜைக்கு வந்த தணிகாசலம் அண்ணனை பெரியவர்களும், இளம் வயதினரும் சூழ்ந்துகொண்டனர்.

மழைவிட்ட போதும், தூறல் நிற்கவில்லை என்பதுபோல், தேர்தல் முடிந்துவிட்டாலும் அதைப் பற்றிய விமர்சனம் மட்டும் ஓயவில்லை.

ஆலமரத்தடியில் கூட்டம் கூட்டமாக அமர்ந்து சொந்தக் கதைகளையும், ஊர்க் கதைகளையும் கதைத்துக் கொண்டனர்.

இளைஞர் பட்டாளம் தணி அண்ணனுடன் அமர்ந்து கொண்டது. இனி என்ன, அங்கும் அரசியல் அலசப்பட்டே தீரும். அதுதான் தணி அண்ணன் ஒரு நாயகமாக அமர்ந்து விட்டாரே. மெதுவாக அப்பாவு தலைவர் ஆரம்பித்தார்.

''ஆமாங்க தணி அண்ணே! போன வாரம் அந்த தொங்கு தோட்டத்தில நடந்த சங்கதியைக் கேள்விப் பட்டீங்களா?'' என்றார்.

''எதைப்பத்தி கேட்கிறீங்க? ஆளுக்கு ஆள் வெட்டிக்கிட்டு ஆஸ்பத்திரியில கெடந்தாங்களே! அதைப் பத்தி கேட்டீங்களா?'' என்றார் தணிகாசலம்.

''வேற எதைப்பத்திக் கேட்கப் போரேன்? நாய்வாலை நிமித்தினாலும் நம்ம ஆளுங்கள திருத்த முடியாதுங்கிற மாதிரி இல்ல ஆயிப் போச்சி'' என்றான் நடராசன்.

''அதுவும் சரி தான். அப்ப சண்டை புடிச்சவங்க ஆஸ்பத்திரியில அடுத்த அடுத்த கட்டில்ல ஒன்னா படுத்துக்கெடக்கானுங்க. பொலிசுக்கு போனவுங்களும் ஒன்னாவே கூட்டுக்குள்ள இருக்கானுங்க'' என்றார் அப்பாவு தலைவர்.

''சரி எல்லோரும் ஆளு ஆளுக்கு எதை எதையோ பேசிகிட்டு இருக்கீங்க. நடந்த சங்கதி என்னான்னு அண்ணன் கிட்ட கேட்போமே'' என்றார் கூட இருந்த மாரி முத்து.

''அதுவும் சரிதான். தணி அண்ணன்தான் யாரு பக்கமும் பேசாம உள்ளதை உள்ளபடி சொல்லுவாரு'' என்று ஆமோதித்தார் அப்பாவு தலைவரும்.

''நான் என்னப்பா பெரிய பஞ்சாயத்துத் தலைவரா இதைப்பத்தி தீர்ப்பு சொல்ல'' என்று விலகப் பார்த்தார் தணி அண்ணன்.

''அண்ணன் அப்படி சொல்லக்கூடாது. நடந்ததை சொன்னாத்தானே நம்ப பசங்களும் வம்பு தும்புல மாட்டாம, ஒழுங்கா நடந்துக்குவாங்க. சொல்லுங்க அண்ணே'' என்றார் அப்பாவு தலைவர்.

அந்தத் தோட்டத்தில ரெண்டு கட்சிகள். ஒன்று, ஆறுமுகம் தொண்டமான் ஐயா வோடது. மற்றது, சந்திரசேகரன் ஐயாவோடது.'' என்று ஆரம்பித்தார் தணி அண்ணன்.

''இது என்னங்க அண்ணே ஆச்சரியம். ஏதாவது ஒரு தோட்டத்தில எல்லோருமே ஒரு கட்சியில இருந்தா அது தான் புதுமை. இப்பதான் ஒரு தோட்டத்தில் லயத்துக்கு ஒரு கட்சின்னு நாலு, ஐந்து கட்சிகள் இருக்கே'' என்றான் திலகா.

''திலகா சொல்லுறதும் சரிதான். அங்க அங்க நம்ப தலைவர்மாரோட வாசிக்கு ஆளுங்களையும் பிரிச்சு வச்சி இருக்காங்க.

அங்க நடந்தது என்னடான்னா, இந்த தொண்டமான் ஐயாவோட கட்சியில் பரம் பரையா இருந்தவுங்க சந்திரசேகரன் ஐயாவுக்கு சப்போட்டா மாறிப்புட்டாங்களாம்'' என்றார் தணி அண்ணன்.

''இது அப்ப அப்ப நடக்கிற சங்கதி தானே! நம்ப மந்திரி ரொனி டி மெல் ஐயாவைப் பாருங்க. எத்தனை கட்சிகளுக்கு மாறி மாறி பல்ட்டி அடிச்சி இருக்காரே. நம்ம சனங்க மாறிப்போனா என்ன, அது அவுங்க அவுங்க விருப்பம் இல்லியா?'' என்றான் நடராசன்.

''நீ சொல்லிட்டுட்ட. அங்க நடந்த சங்கதி என்ன தெரியுமா? ஆளுங்கள போகவுடாம காப்பாத்திக்க வக்கு இல்ல. வெறுத்துப் போய் போரவன் அடிடா, வெட்டுடா, குத்துடான்னு ஏவிவிட்டுப்புட்டாங்க. கடைசியில ஒரே லயித்துல ஒன்னா இருந்தவுங்க வெட்டிக்கிட்டாங்க, மோதிக்கிட்டாங்க.'' என்றார் தணி அண்ணன்.

''உண்மை தாங்க அண்ணே! இப்ப ஓட்டு போடுறதுக்கு மோதிக்கிட்டாங்க. இதே மாதிரித்தானே போன வருஷம் டிக்கோயாப் பக்கம் ஒரு சாவு கூட நடந்திச்சி'' என்றார் அப்பாவு தலைவர்.

''அப்ப என்னடான்னா சங்கத்துக்கு ஆள் சேர்க்கிறப்ப தொண்டமான் ஐயாவோட ஆளுங்க யூ.என்.பி சங்கத்துக்கு மாறிப்புட்டாங்க. அதுல வந்த சண்டையில முன்னுக்கு நின்னு வேலை செய்த ஒருத்தரையே பெரட்டுக்களத்தில வைச்சே வெட்டிக்கொன்னுட்டாங்க. மறு பக்கம் வீட்டைக்கூட நெருப்பு வைச்சுப்புட்டாங்களாம். அன்னைக்கு சங்கச்சண்டை, இன்னைக்கு ஓட்டுச்சண்டை.'' என்று கவலையுடன் கூறினார் தணி அண்ணன்.



''அது தாங்க அண்ணே! அப்பவே நான் சொன்னேன். நாய் வாலைக்கூட நிமிர்த்திவிடலாம், நம்ம ஆளுங்கள திருத்த முடியாதுன்னு'' என்று சட்டைக்கொலரை நிமிர்த்திவிட்டான் நடராசன்.

''இது எல்லாம் ஏன் இங்க சொல்கிறோம் என்றால் இங்கேயும் அப்படியான முட்டாள்தனமான காரியம் நடக்கக் கூடாது'' என்றார் அப்பாவு தலைவர்.

''என்னங்க தலைவரே அப்படி சொல்லிப்புட்டீங்க. நம்ம அண்ணன் இருக்கும்போது அப்படி ஏதும் வம்பு தும்பு நடக்க விடமாட்டார்'' என்றான் நடராசன்.

நடராசன் சொல்றதும் சரி தான். ஆனால், இந்த அப்பாவித் தொழிலாளர்கள் இப்படி முட்டி மோதிக்கிட்டு வம்புல மாட்கிட்டாங்க. ஆனால், இவுங்கள தூண்டிவிட தலைவர்மாரும், தண்ணி வாங்கி ஊத்திய அடியாட்களும் இப்ப வாராங்களா? அவுங்க வேலை முடிஞ்சிச்சி. கம்பி நீட்டிப்புட்டாங்க. அவுங்கள புடிக்க இனிமேல் கொழும்புக்குத்தான் காவடி எடுக்கணும். இங்க புள்ளகுட்டிங்க தான் பசியும் பட்டினியுமா கஷ்ரப்படணும். இனிமேலாவது புத்தியா நடந்துக்கிட்டாப்போதும்''

இப்படி கூறியபடி தணிகாசலம் அண்ணன் எழும்பவே மற்றவர்களும் தொடர்ந்து எழுந்து அவரவர் வீட்டுக்கு அமைதியாகச் சென்றனர்.

# ஏதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகலாமா?




தேர்தல் திருவிழா ஓய்ந்துவிட்டது. இந்தத் தலைவர்கள் அளித்த உறுதிமொழிகள் என்ன? வாக்குறுதிகள் எத்தனை? நம் மனதும் வயிறும் திருப்தியடையும் வகையில் மேடைகளில் பேசினார்கள். வாய் கிழியக்கத்தினார்கள்.

இவர்களுடைய பசப்பு வார்த்தைகளையும், பாசாங்குப்பேச்சுக்களையும் நம்பி எங்களுடைய வாக்குகளை நம் தலைவர்களுக்கு வாரி வழங்கிவிட்டோம்.

இப்பொழுது அவர்கள் நாடாளுமன்றம் சென்றுவிட்டனர். சிலர் அமைச்சர்களாகவும் வந்துவிடலாம். அவர்களுடைய பதவிகளும் பட்டங்களும் உறுதியாகிவிட்டன. ஆனால், இந்த தலைவர்களுக்கு இப்பொழுது நம்மை அடையாளம் தெரியுமா?

வீடு வீடாகவந்து ஓட்டுக்கேட்டார்கள். உடன் பிறப்புகள் என்றார்கள். அம்மா என்றார்கள். அக்கா என்றார்கள். அன்பொழுகப் பேசினார்கள்.

"நான் உங்கள்வீட்டுப்பிள்ளை. நான் உங்கள் தோழன். நான் ஆணையிட்டால் அது நடந்துவிடும்" என்று நாடகவசனம் பேசினார்கள்.

''பழையதை மறப்போம் புதியதை சிந்திப்போம்'' என்றார்கள். இது ஏன்?

கடந்த காலங்களில் இந்தத் தலைவர்கள் போட்ட வேஷங்களும், பம்மாத்துவாத்தைகளும், மோசடிப் பேச்சுக்களும் இன்றும் எம் கண்முன் நிற்கின்றன. பாசமுள்ள சகோதரி என்றார்கள். ஆகா எவ்வளவு பண்பாகப் பேசுகின்றார் என்று நட்புடன் சென்ற சகோதரிகளை பாய் விரிக்கச் சொன்னார்கள். பாசமுடன் அழைத்து மோசம் செய்தார்கள்.

வெளிநாட்டு விஸ்கியும், இந்தியத்துணை நடிகைகளின் அரவணைப்பும் இவர்களை தர்மவான்களாக்கிவிட்டன.

இவர்களால் அதை இப்போதுவிட்டுவிட முடியுமா?

உல்லாசம் புரியச்சென்றவர்களைப் பொலிஸார் உதைத்து இழுத்துச் சென்றனர்.

ஏதோ பதவியும், பட்டமும் இவர்களை அன்று காப்பாற்றிவிட்டன.

இதை எல்லாம் மறக்கச் சொல்கின்றார்களா? இல்லை மறந்து மன்னிக்கச் சொல்கின்றார்களா?

எதை மறப்பது? எதை மன்னிப்பது?

மலையக மக்கள் என்றால் மண்பொம்மைகள், இழித்தவாயர்கள் என்று நினைத்து விட்டீர்களா? அப்படி நினைத்தால் அது தவறு.

எப்படியோ ஏமாற்றி சாலம்காட்டி பதவிக்கு வந்துவிட்டோம் என்று இறுமாப்பு வேண்டாம்.

நாங்கள் உங்களிடம் ஏமாந்து விட்டதாக எண்ணவேண்டாம். அப்படி நீங்கள் கருதினால் உங்களுடைய கணக்கு பிழையாகிவிட்டது.

உங்களை நம்பியோ, உங்களுடைய அதிகாரத்தைக் கண்டோ அல்லது உங்களுடைய பரம்பரைச் செல்வாக்கை நம்பியோ நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை.

நமது தலைவர்கள் நமது சமூகம் என்ற உயர்ந்த உணர்வுடனேயே உங்களுக்கு வாக்களித்தோம்.

உங்களுடைய தோற்றத்தையும் செல்வாக்கையும் கண்டு வாக்களிக்கவில்லை. எங்களுடைய மலையக சமுதாயம் உயர்வடைய வேண்டும். கல்வி அபிவிருத்தி அடைய வேண்டும். குடியிருப்பு வசதிகள் வேண்டும். அடிப்படை வசதிகள் வேண்டும். படித்த இளம் சமுதாயத்துக்கு வேலை வாய்ப்புகள் வேண்டும். அமைதியும் சமாதானமும் நிலை பெற வேண்டும். நாம் நிம்மதியாக வாழவழி வேண்டும்.

இந்த நம்பிக்கைகளுடன் தான் உங்களுக்கு வாக்களித்தோம். உங்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினோம்.

அன்று நீங்கள் சொன்னதை இப்பொழுது உங்களுக்கு நினைவு படுத்தினோம். அதை நீங்கள் மறந்து விடாதீர்கள். காரணம் ''தலைவர்களின் பேச்சு தேர்தல் மேடையுடன் போச்சு'' என்பது கடந்த காலங்களில் தாங்கள் கண்ட அனுபவ உண்மை. ஏன் என்றால் நீங்கள் பதவியும், பட்டமும் வந்தவுடன் இதை எல்லாம் மறந்து விடுவீர்களே!

உடனே உங்களால் செய்யமுடியாது. மந்திரியான சந்தோஷம். அமைச்சர்களான ஆரவாரம். தேர்தல் காலங்களில் உங்களுக்காக லட்சம் லட்சமாக வாரி வழங்கிய வர்த்தகர்கள். இவர்களை எல்லாம் திருப்திப்படுத்த உங்களுக்கு கால அவகாசம் தேவைதான்.

எனவே இவற்றை எல்லாம் முடித்துவிட்டு, வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பீர்களே. அப்போதாவது உங்களுக்கு ஓட்டுப் போட்ட தோட்டத் தொழிலாளர்களை சற்று நினைவு படுத்திப்பாருங்கள். உங்களை நம்பித்தானே வாக்களித்தோம். நீங்களும் உங்கள் ஏஜண்டுகளும் வீடு வீடாக வந்தீர்கள்.


உங்கள் வீட்டில் எத்தனை பேர்படித்து இருக்கின்றார்கள்? எத்தனை பேர் பரீட்சையில் பாஸ் செய்துள்ளார்கள்? எத்தனை பிள்ளைகளுக்கு படிக்க உதவ வேண்டும்? உடுப்பு வேண்டுமா? இல்லை போடிங் வேண்டுமா? கொழும்பில் போய் படிக்க ஆசையா? அதற்கு உதவி செய்கின்றோம்.

படிப்புக்கு ஏற்ற தொழில் பெற்றுத் தருவோம். சுயதொழில் செய்ய விரும்புவர்களுக்கு வங்கிக் கடன் பெற்றுத் தருவோம். அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்போம். காணிகளுக்கும், வீடுகளுக்கும் உறுதிகளைப் பெற்றுக் கொடுப்போம் என்றெல்லாம் உறுதிமொழிகளையும், வாக்குறுதிகளையும் வாரிவழங்கினீர்கள்.

உங்களுடைய இந்த பசப்புவார்த்தைகளை எல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்து உங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவிட்டோம். நீங்கள் அமைச்சர்களாகவும் ஆகிவிடலாம்.

ஆனால், பற்பல எதிர்பார்ப்புகளுடன் உங்களுக்கு வாக்களித்தோம். எங்களை ஏமாற்றிவிடாதீர்கள். இன்று நீங்கள் எங்களை ஏமாற்றிவிடலாம். ஆனால், இந்தத் தேர்தலை தொடர்ந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் வரப்போகின்றன. அப்போது எந்த முகத்துடன் வரப்போகின்றீர்கள்? காலம்பதில் சொல்லும். எனவே எங்களுடைய எதிர்பார்ப்புக்களை நாசமாக்கி விடாதீர்கள்.

****



# சொல்லாதே இது இரகசியம்!

மத்திய மலைநாட்டில் மதிப்பு வாய்ந்தவர் அந்த மந்திரி. அதே போன்று அகலமான மனதும் கொண்டவராம். தாய்க்குலங்கள் மீது தணியாத பாசமும் பற்றும் கொண்டவர்.

அண்மையில் பாரதம் சென்று வந்த ஒரு அம்மையார் ஒரு அன்பளிப்புப் பார்சலை அந்த தமிழ் மந்திரிக்கு வழங்கினாராம்.

மந்திரிக்கோ தலை, கால் புரியவில்லை. காரியாலய சிற்றூழியரை அழைத்து தம்பி இதைக்கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்துவிட்டு வா.. என்றாராம்.

விசுவாசமான ஊழியரும் ஐயா சொன்னபடியே கொண்டுபோய் கொடுத்துவிட்டு வந்தாராம்.

என்றும் இல்லாதவாறு மிகவும் தடல்புடலாக அலங்கரித்துக்கொண்டு ஆசை ஆசையுடன் வீட்டுக்குச் சென்றாராம். வந்ததும் வராததுமாக எப்படி டார்லிங் நான் அனுப்பிய பார்சல்? பிரித்துப்பார்த்தாயா? உனக்குப் பிடிச்சிருக்கா? என்றாராம்.

என்ன உளறுகிறீர்கள்? உடம்புக்கு ஏதும் சரியில்லையா என்றாராம் சின்ன வீடு. அப்போது தான் ஐயாவுக்குப்புரிந்ததாம் அந்த சிற்றூழியன் ''அம்மாவிடம்'' என்றதும் பெரிய வீட்டில் கொண்டு போய் கொடுத்து விட்டது.

ஐயோ பாவம். இப்போது ஐயாவுக்கு உண்மையாகவே உதறல் எடுத்துவிட்டதாம். ஏன் தெரியுமா? சின்னவீட்டுக்கு எழுதி வைத்த குறிப்பும் பெரிய வீட்டுக்குப் போய் விட்டதாம்.

# ஈழத் தாரகையின் பரதநாட்டியம் இந்தியாவில் அரங்கேற்றம்



மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. விவேகானந்தராஜா காலஞ்சென்ற திருமதி நவமலர் தம்பதியரின் புதல்வியான செல்வி மயூரதி விவேகானந்தராஜாவின் பரதநாட்டியத்தில் முதுகலைமானி பட்டம் (M.F.A) பெறுவதற்கான அரங்கேற்றம் மிகக் கோலாகலமான முறையில் திருச்சியில் அண்மையில் நடைபெற்றது.

திருச்சி கலைகாவிரி நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு புதுடில்லி யூனியன் திட்டக் கமிஷன் உறுப்பினர் கலாநிதி கே.வேங்கட்ட சுப்பிரமணியம் தலைமை வகித்து விருது வழங்கினார். திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி வி.அயோத்தி, கலைகாவிரி நிறுவுனரும் கல்லூரி கமிட்டி தலைவருமான வண. எஸ்.எம். ஜோர்ஜ் அகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

மாணவி மயூரதியின் இந்த அரங்கேற்ற நிகழ்வின் முக்கிய அம்சங்களை பாராட்டி, தமிழ்நாடு தமிழர் அபிவிருத்தி, கலாசார மன்ற செயலாளர் பி.ஏ.இராமையா சிறப்புரை நிகழ்த்தினார்.

செல்வி மயூரதி விவேகானந்தராஜா, சிறுவயது முதல் பரத நாட்டியத்துறையில் ஈடுபாடு கொண்டவர்.. இலங்கையிலுள்ள பிரபலம் மிக்க நர்தகிகளிடம் கல்வி பயின்றவர்.

இவர் இலங்கையில் அதியுயர் கலைத்துறை விருதான கலாபூஷணம் விருதைப் பெற்ற திருமதி லீலாம்பிகை செல்வராஜா மற்றும் உஷா கனகசுந்தரம் ஆகியோரின் மாணவி என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.



இலங்கையில் மட்டுமன்றி, திருச்சியிலும், திருமதி சண்முக நாதனிடமும் இவர் பரதக் கலையை பயின்றார்.

பரதக் கலையோடு மட்டுமல்லாது, சங்கீதம் (வாய்பாட்டு) வீணை போன்ற இசைத் துறைகல்வியையும் கற்று மிகச் சிறந்ததொரு இசை கலைஞராகவும் விளங்கி வருகின்றார்.

இசைத்துறையோடு மட்டுமன்றி அழகியற் கல்வி, கணனித்துறைகளிலும் தேர்ச்சி பெற்றுள்ள மயூரதி கிழக்கு பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றுகிறார்.



இவர் மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரி, கொழும்பு சென். ஆன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவி ஆவார்.

பிறந்த மண்ணுக்கு பெருமைசேர்க்கும் விதத்தில் முதுகலை மாணிப்பட்டம் பெற்று வரும் இவரது கலைச்சேவை ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் செழிக்க நாமும் வாழ்த்துகிறோம்.

# இயேசுவின் 'பலிக்களம்' கல்வாரி பயணக்காட்சி



இறை மகன் யேசுவின்வாழ்க்கை வரலாற்றில் கல்வாரி பயணக் காட்சி, படிப்போர், கேட்போர், பார்ப்போர் எல்லோரது உள்ளங்களில் துயரத்தின்விளிம்பை தொட்டு நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த உணர்வு பூர்வமான கதையம்சத்தை "பலிக்களம்" என்ற பெயரில் அப்புத்தளை காக்கொல்லை திருமறை கலா மன்றத்தினர் நாடகமாக மேடை ஏற்றினர்.

காக்கொல்லை புனித செபஸ்தியார் ஆலய முன்றலில் மிக விமர்சையாக நடைபெற்ற இந்த நாடகத்தில் கலா மன்றத்தை சார்ந்த அறுபதுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் சிறந்த பயிற்சி அமைப்புடன் நடித்துச சிறப்பித்தனர்.

இறைமகன் யேசுவின் இறுதி பயணக் காட்சியாக சிலுவையை சுமந்து செல்வதை தத்துருவமாக இக் கலைஞர்கள் வழங்கியிருந்தார்கள்.

அந்த காட்சிகள் கலையமுதம் வாசகர்களின் கண்களுக்கு விருந்தாக இங்கு பிரசுரமாகின்றன.


இதேபோன்று கிறிஸ்து நாதரை கசையால் அடித்து அவருக்கு முள்முடி சூட்டும் காட்சி நமக்கெல்லாம் உணர்வையூட்டும் விதமாக அமைந்தபோது எடுக்கப்பட்ட படத்தினையும் இங்கு நீங்கள் காண்கிறீர்கள்.



இந்த முயற்சியில் ஈடுபட்ட இந் நிகழ்வை சிறப்புற நடத்திய அப்புத்தளை காக்கொல்லை திருமறை கலா மன்றத்தினருக்கு பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

# 'அம்மா! நலமா?' கண்ணோட்டம்

1983ஆம் ஆண்டுக்குப்பின்னர், இலங்கை தமிழ்த்திரைப்பட முயற்சிகள் ஸ்தம்பிதம் கண்டிருந்த நிலையில், இத்துறையை வளப்படுத்த வேண்டும். என மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்விகளையே தழுவின.




தமிழ் திரையுலகம் இலங்கையில் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக யாழ். மண்ணில் பல முயற்சிகள் கடந்த காலத்தில் மேற்கொண்டிருக்கின்றன.

'கடமையின் எல்லை', 'நிர்மலா', 'குத்துவிளக்கு', 'சுமதி எங்கே','தெய்வம் தந்த வீடு', 'பொன்மணி' என பல திரைப்படங்கள் இங்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

வர்த்தக ரீதியாக உரிய இலக்கை அடையாவிட்டாலும் வரலாற்று ரீதியாக ஈழத்திலும் தமிழ் திரைபுலகம் உண்டு என்பதற்கு இவை அணி சேர்த்துள்ளன.

யுத்த கோரத்தின் மூலமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் இத்துறை சார் முயற்சிகளை முன்னெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பாராட்டுக்குரியது.

இவை எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போல் யுத்தத்தை பின்புலமாகக் கொண்டு விடுதலைப்புலிகளின் ஊடகத்துறையான நிதர்சனம் நிறுவனம் "அம்மா நலமா?" என்ற திரைப் படத்தை வெளியிட்டுள்ளது.

ந.கேசவராஜனின் கதைவசன நெறியாள்கையில் சார்ந்துள்ள இத் திரைப்படம் யாழ்.குடாவில் தற்போது திரையிடப்பட்டுள்ளது.

தமிழர்களின் போராட்டம், அது குவித்துள்ள சோகங்கள், மண் மீட்புக்காக, உயிரைக்கொடுக்கும் உணர்வுகளின் வெளியீடு, தமிழ்தாகம் என்பவற்றை சமகால சிந்தனைக்குள் நுழைக்கும் வகையில் இத் திரைப்படத்தை நிதர்சனம் நிறுவனம் உருவாக்கியுள்ளதாக அறிய முடிகிறது.

யுத்தத்தோடு கல்வியும், எமது பண்பாடு கலாசாரங்களும் கலைகளும் வாழவேண்டும் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டமைப்புக்களின் ஊடாக, இந்த சமாதான காலத்தில் பிரசவம் கண்டுள்ளது "அம்மா நலமா?"

ஈழத் தமிழர்களின் பிரதான நினைவுச்சின்னமாக எதிர்காலத்தை அலங்கரி செய்யும் என்பதில் ஐயமில்லை.

ராகவி









# 13 ஆவது பொதுத் தேர்தல் வாக்களிப்பு




















# பித்தன் பதில்கள்

*து.வாசீகன் – அல்வாய்*

கேள்வி:– பித்தா! பெண்கள் பருவமடைவதை இயற்கை காட்டுகிறது. ஆண்கள் பருவமடைந்து விட்டார்கள் என்பதை என்ன காட்டும்?



பதில்:– அவர்களது முழிகாட்டும். கண்ணிலே காணும் பெண்களை எல்லாம் அது 16 ஓ... அல்லது 61 ஓ... என்று கணக்கெடுக்காமல் விழுங்கி விடுவதுபோல் பார்ப்பார்கள். பாருங்கள் ஒரு பார்வை... அப்போதே தெரியும். பயல் வயசுக்கு வந்துட்டான் என்று.

*தெ.விக்னேஷ்வரன் – ஸ்கந்தபுரம்*

கேள்வி:– பித்தா! மது அருந்துவதால் ஆயுள் குறையுமா?

பதில்:– இப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். ஆனால், அண்மையில் ஒரு புத்தகத்தில் வாசித்த துணுக்கு அதனை பொய்யாக்கிவிட்டது. அதாவது உலகத்திலேயே அதிக வயதுடைய பெண்மணி லண்டனில் வசித்துவருகி றார். அவரது பெயர்ஈவாமொறிஸ், 18 – 11 – 1885 இல் பிறந்த இவர் 2001 ஆம் ஆண்டில் தனது 116 ஆவது



பிறந்தநாளை கொண்டாடினாராம். (இப்போது அவர் உயிருடன் இருக்கிறாரோ தெரியாது) இவரிடம் உங்களது நீண்ட ஆயுளின் ரகசியம் என்ன என்று கேட்டபோது இவர் சொன்னாராம், ''நான் பருவமடைந்த நாள் முதல் தினமும் தேநீர் அருந்தும்போதெல்லாம் அதில் விஸ்கியையும் கலந்து பருகுவேன்'' என்று.

*வி.அமலன் – மன்னார்*

கேள்வி:– ஆண்கள் எத்தனையோ விடயங்களைச் சாதித்து வெற்றி பெற்றாலும் பேசாமல் இருப்பார்கள். ஆனால், பெண்கள் ஒரு சின்னக்காரியத்தில் வெற்றி கிடைத்தால் ஆஹா – ஓகோ என்று பீற்றிக்கொள்கிறார்களே! ஏன் பித்தா?

பதில்:– இதற்கு ஒரு பழமொழி சொல்வார்களே! ஆமை ஆயிரம் முட்டை போட்டு விட்டு அமைதியாக இருக்குமாம். ஆனால், கோழியோ ஒரு முட்டை போட்டுவிட்டு கொக்கரிக்குமாம். அதாவது இதனைச் செய்வோம், வெல்வோம் என்று நம்பிக்கையுடன் எதனையும் செய்பவர்கள் ஆண்கள். அதனால் கிடைக்கும் வெற்றிகள் அவர்களுக்கு பெரிதாகத் தெரிவதில்லை. ஆனால் பெண்கள் இதனை எம்மால் செய்யமுடிமா வெல்வோமா என்ற சந்தேகத்துடனேயே செய்யத் தொடங்குகிறார்கள். அதனால் தான் சிறுவெற்றியும் அவர்களுக்கு பெரிய விடயமாக தெரிகிறது.

*செ.வதனலோஜினி – ஆரயம்பதி*

கேள்வி:– பித்தா! உங்கள் மனைவி உங்களுக்கு அடிக்க வந்தால் நீங்கள் ஓடிப் போய் உங்கள் வீட்டின் கதவுகள் – ஜன்னல்களையெல்லாம் இறுக்கி மூடி விடுகிறீர்களாமே? உண்மையா?

பதில்:– நீங்கள் கேள்விப்பட்டதாக குத்து




மதிப்பாக கேள்வி கேட்டாலும் அது உண்மைதான். ஏனென்றால் எனது அவவுக்கு கோபம் வந்தால் கண்டதையும் எடுத்து என்மீது எறிவா..! நான் அங்கேயும் – இங்கேயும் ஓடி கவர் எடுத்துக் கொள்வது வழக்கம். ஆனால், அவ்வாறான வேளையில் கதவு – ஜன்னல்களை மூடுவது வெட்கத்தினால் அல்ல அம்மணி..... ஒரு நாள் இப்படித்தான் மனைவி முத்தையா முரளிதரனாக மாறி செம்பு ஒன்றை என்மீது வீச நான் அருகே இந்த கதவுக்கு பின்னால் ஒளிந்து கொள்ள மனைவி வீசிய செம்பு... திறந்திருந்த கதவுக்குள்ளால் சென்று தெருவால் போய்க்கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரரின் தலையைப்பதம் பார்த்து விட்டது. நான் பாவம் எள்ளு. காய வேண்டியது எனது தலையெழுத்து. பாவம் பக்கத்து வீட்டுக்காரர். அவர் ஏன் காயவேண்டும்? அந்த நல்ல நோக்கில்தான் கதவு, ஜன்னல்களைச் சாத்திவிடுகிறேன்.

*து.மல்லிகா – வவுனியா*

கேள்வி:– பித்தா! இப்படியும் உலகத்தில் நடக்கிறதா என்று நீர் ஆச்சரியப்பட்ட சம்பவம் ஒன்று கூறுமையா?

பதில்:– இதுவும் புத்தகம் ஒன்றில் வாசித்த துணுக்குத்தான். ஈரானைச்சேர்ந்தவர் முகமது இஸ்மாயில் அல் பஹ்ராமி. இவர் தனது 105 ஆவது வயதில் தனது மனைவியான பாத்திமா ஜோவி என்பவரை



விவாகரத்துச் செய்தார். விவாகரத்தின் போது மனைவிக்கு வயது 100. நீதிமன்றத்தில் விவாகரத்துக்கான காரணத்தை நீதிபதி கேட்க, அந்த 105 வயதுக்கார கிழவர் சொன்ன காரணம் என்ன தெரியுமோ! ''எனது மனைவிக்கு வயதாகி விட்டது. அதனால் அவள் என்னுடன் அந்த மாதிரியான வேளைகளில் ஒத்துழைக்க மறுக்கிறாள்'' என்றாராம். நீதிபதி இது உண்மையா என்று மனைவியிடம் கேட்க அவரும் கண்ணீருடன் ஆம்... ஆம்... என்று ஒத்துக்கொண்டாராம். இதனை கேட்டு நீதிபதி உடனடியாக விவாகரத்து வழங்கி விட்டாராம். இது நடந்தது 1994இல். உலகம் கெட்டுப் போய் விட்டது என்றுதான் நாமெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தோம். ஆனால் இப்போதான் விளங்குகிறது கெட்டு குட்டிச்சுவராகிப் போய்விட்டது.

*பிரசன்னா – சாவகச்சேரி*

கேள்வி:– பித்தா! பெண்கள் அடக்கமாக இருக்க வேண்டும் என்கிறார்களே ஏன்?

பதில்:– துள்ளிய மாடு பொதி சுமக்கும்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான –
குறும்பான –
யதார்த்தமான –
பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஏப்ரல் 11ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.





இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள்பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஐயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

*தே.ராசநாதன் – மட்டக்களப்பு*

கேள்வி:– பித்தா! மட்டக்களப்பிலே வேட்பாளரான ராஜன் சத்திமூர்த்தியை யார் சுட்டிருப்பார்கள் என்று நினைக்கிறீர்?

பதில்:– ராசநாதன் கொழும்பிலே மழை பெய்யாததால் சரியான வெக்கை தாங்க முடியவில்லை. மட்டக்களபிலே எப்படி? மழையா? வெக்கையா?

*கி.விஜயராணி – வத்தளை*

கேள்வி:– பித்தா! கடவுள்மார் கூட காதலித்து – கலியாணம் முடித்திருக்கிறார்கள். அதனையெல்லாம் ஏற்றுக்கொள்ளும் சமுதாயம் நாங்கள்காதலித்தால் மட்டும் ஏற்றுக் கொள்ளவே மாட்டேன் என்கிறதே ஏன்?

பதில்:– விஜயராணி... கடவுள்மார் எல்லாம் இரண்டு பெண்டாட்டி வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ளும் பெண்கள் ஏன் தங்களது கணவன்மார்.. இரண்டு பெண்டாட்டி வைத்துக்கொள்ள ஒத்துக்கொள்ளவே மாட்டேன்என்கிறார்களே...

*து.சாரங்கன் – பருத்தித்துறை*

கேள்வி:– கருணா பிரிந்தது விடுதலைப் புலிகளுக்கு பெரிய தலையிடிதானே.. உண்மையைச் சொல்லும்.

பதில்:– துரோகம், சதி, பிரிவு, தனித்து இயங்குதல் எல்லாம் புலிகளுக்கு புதிதான விடயமல்ல. இதற்கு முன்னரும் இவை போல பல நடந்திருக்கின்றன. அந்தக் கலைகள் எல்லாம் காதும் காதும் வைத்தது போல் பிடுங்கப்பட்டும் இருக்கின்றன. அதனால் இது ஒன்றும் அவர்களுக்குப் புதியதான விடயமல்ல. ஜுஜுபி என்றே நான் நினைக்கிறேன்.

*து.அருள் – கொடிகாமம்.*

கேள்வி:– பித்தா! பெண்கள் அப்பாவிகளா? அல்லது அகங்காரமானவர்களா?

பதில்:– வைரமுத்து குறிப்பிட்ட அழகான ராட்சசிகள் என்பது போல்– அகங்காரம் பிடித்த அப்பாவிகள்.

*து.கமலவேணி – வெள்ளவத்தை.*

கேள்வி:– பித்தா! தலைக்கு டை அடித்தால்– புற்று நோய் வந்து விரைவிலே இறக்க நேரிடுமாமே. உண்மையா?

பதில்:– டை அடிக்காவிட்டால்– ஐயோ வயது போய்விட்டதே – தலை எல்லாம் நரைத்து விட்டதே என்று கவலைப்பட்டு– கவலைப்பட்டு அதனால் வேறு வருத்தங்கள் வந்து இறப்பதை விட இது பரவாயில்லை.

*ச.வினோதினி – வல்வெட்டித்துறை*

கேள்வி:– பித்தா! ஜோக் பிளீஸ்?

பதில்:– தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தவனைப் பார்க்க நண்பர் ஒருவர் போனார். இவர் போய்ப் பார்த்துக்கொண்டிருந்த சமயம் பார்த்து திடீரென அந்த நோயாளி துடிக்கத் தொடங்கினார். தன்னால் இயலுமான அளவுக்கு கண்களால் – கைகளால் சைகை மூலம் ஏதோ சொல்ல முயன்றார். ஆனால் பார்க்கச் சென்ற நபருக்கோ எதுவும் விளங்கவில்லை. இறுதியாக நோயாளி ஒரு பேப்பரும்–பேனையும் தரும்படி சைகை காட்டினார். உடனடியாக பேப்பரும்– பேனாவும் கொடுக்கப்பட்டன. நோயாளி ஏதோ அவசரமாக அந்தப் பேப்பரில் எழுதி நண்பரிடம் கொடுத்தார். தனது இறுதி நேரத்தில் தனது ஆசைகள், சொத்து விபரங்கள் என்பவற்றை எழுதித் தருகிறார் போல இருக்கிறது என்று நினைத்த நண்பர், பேப்பரை வாங்கி கவனமாகச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். சொற்ப நேரத்தில் நோயாளி இறந்துவிட்டார். இறந்தவரின் சடலம் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டு –இறுதி நிகழ்வுகள் எல்லாம் முடிந்த பின்னர்... அவரது மனைவியை அழைத்த நண்பர் பேப்பரைக் கொடுத்து சொன்னார். ''அம்மணி... உங்கள் கணவர் தனது உயிர் பிரிவதற்கு முன்னால் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்தபடி என்னிடம் கடிதம் ஒன்றைத் தந்தார். அதில் தனது இறுதி ஆசைகளை எழுதி வைத்திருப்பார் என்று நினைக்கிறேன். கணவனின் இறப்பால் கவலைப்பட்டுப்போயிருக்கும் உங்களிடம் உடனேயே அந்த கடிதத்தை தந்து உங்கள் கவலையை அதிகப்படுத்த நான் விரும்பவில்லை. எனவே தான் தாமதித்து தருகிறேன். இந்தாருங்கள் அந்தக் கடிதம்'' என்று கடிதத்தை மனைவியிடம் கொடுத்தார். கடிதத்தை வாங்கி வாசித்த மனைவி மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். கடிதத்தில் எழுதியிருந்தது இது தான். ''அடே.... படுபாவி... எனது ஒட்சிசன் குழாயின் மேல் ஏறி நிற்கிறாயே... இறங்குடா...''

*இ.மதிவதனன் – திருகோணமலை.*

கேள்வி:– பித்தா! சுகமான சுமை என்று



எதனைக் கூறலாம்?

பதில்:– மோட்டார் சைக்கிள் ஒன்றில் காதலியை ஏற்றிக்கொண்டு நல்ல வேகமாகப்போய்– திடீரென பிரேக் பிடித்துப் பாருங்கள்... ஐயா...

## பித்தனின் கேள்வி

கேள்வி:– பித்தா! இம்முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எத்தனை ஆசனங்களைக் கைப்பற்றுமென நினைக்கின்றீர்?

## வாசகர் பதில்கள்

*க.வாசுகி – ரீமலை.*

அதைப்பற்றி நாம் ஏன் கவலைகொள்ள வேண்டும். கிடைக்க வேண்டியது தானாகக் கிடைக்கும்.

*சி.விமலன் – உடுவில்.*

ஆசனங்கள் எவ்வளவு கிடைத்தாலும் அத்தனையும் 'காசானங்களாக' இருக்க மாட்டாது என்பது உறுதி.

*சி.புஸ்பலதா – வவுனியா.*

ஆசனங்கள் எத்தனை கைப்பற்றப்பட்டாலும் ஆட்சி அமைப்பதற்கு அவர்கள் தானே ஒரு காலாக இருக்க வேண்டும்.

*க. கரிகாலன் – அம்பாறை.*

எத்தனை கர்ணன்கள், கும்பகர்ணன்கள் தோன்றினாலும் எமது மக்களின் மனங்களில் குடிகொண்டிருக்கும் நம் தலைவன் ஆணையை அழிக்க முடியாது.

*வி.விவேகானந்தன் – மட்டக்களப்பு.*

எம் மக்களிடையே உள்ள துரோகக் கும்பல்களை எம்மவர் மத்தியிலிருந்து களை எடுத்து விட்டால் அத்தனை தமிழ் ஆசனங்களும் எமக்கு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

*கே.கஜன் மல்லாவி*

கேள்வி:– இரவில் சேவல் கூவுவது ஏன் கோழி ஏன் கூவுவது இல்லை?

பதில்:– ஹலோ! கோழிக்கு பகலிலும் கூவ முடியாது. எப்பவுமே கொக்கரிக்கத்தான் முடியும்.

*பிரியா – வவுனியா*

கேள்வி:– மாணவிகள் காதலிப்பது சரியா?

பதில்:– நீர் எந்த உலகத்தில் இருக்கிறீர்? படிக்கின்ற மாணவிகள் குழந்தைகூட பெற்றுக்கொள்கிறார்கள்.

*ஆதவன் – மானிப்பாய்*

கேள்வி:– விலங்குகள் காதலிக்குமா?

பதில்:– ஒரு பாலைவனம். ஆணும் பெண்ணுமாக இரு மான்கள் தண்ணீர் தேடிப் போகின்றன. ஓரிடத்தில் ஒரு வாய் தண்ணீர் இருக்கிறது. இருவரும் பகிர்ந்து குடிக்கலாம் என்று இரண்டு மான்களும் ஒரே நேரத்தில் தண்ணீரில் வாய் வைக்கின்றன. ஆண்மானோ உறிஞ்சுவது போல வெறும் சத்தம் மட்டும் எழுப்புகிறது! இது காதலா இல்லையா?

*தஜீகரன் – நல்லூர்*

கேள்வி:– நகை, தொகை, அழகு, அறிவு இதில் எந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுப்பது?

பதில்:– நகை போட்டால் எந்தப் பெண்ணும் அழகுதான். தொகை இருந்தால் யாரும் அறிவாளிதான்.

*அழகு – கொழும்பு*

கேள்வி:– எல்லாக் கட்சிகளும் ஒரே கட்சியாக இணைந்தால்...?

பதில்:– சர்வாதிகாரம் ஏற்படும்!

# காங்கிரஸ் கட்சியின் காலை வாரும் தோழமைக் கட்சிகள்

## கூட்டணி அமைத்ததால் குறைந்த தொகுதிகளிலேயே போட்டி

இந்தியாவின் 14ஆவது லோக்சபா தேர்தலுக்கு இன்னும் மூன்று வாரங்களே இருக்கின்றன. பல கட்டங்களாக நடைபெறும் வாக்குப்பதிவு ஏப்ரல் 20 ஆம் திகதி ஆரம்பமாகிறது. தேர்தல் பிரசாரம் உச்சகட்டத்தில் நடந்தேறி வருகிறது. ஆளும் பி.ஜே.பி. கட்சி மீண்டும் ஆட்சிபீடம் ஏறும் என்ற பலத்த நம்பிக்கையுடன் இருக்கிறது. பிரதமர் வாஜ்பாயின் புகழ் என்ற அஸ்திரமும், பொருளாதார வளர்ச்சியும் கைகொடுக்கும் என்பதே அந்த நம்பிக்கை. பிரதமர் வாஜ்பாய்க்கு ஈடாக எதிர்க்கட்சியான காங்கிரஸிலும் சரி வேறு கட்சிகளிலும் சரி தேசியத்தலைவர் இல்லை என்பது உண்மையே.

1957 முதல் இன்றுவரை ஒருமுறை நீங்கலாக (1984 இல்) சகல லோக்சபாக்களிலும் உறுப்பினராக இருந்துள்ள வாஜ்பாய் தனது லக்னோ தொகுதியில் வழமைபோல் போட்டியிடுகிறார்.

### வாஜ்பாயை எதிர்த்து ராம் ஜேத் மலானி

அவரை எதிர்த்து முன்னர் அவரது நம்பிக்கைக்குரிய நண்பராக இருந்த வழக்கறிஞர் ராம்ஜேத்மலானி போட்டியிடுவார் எனத்தெரிகிறது. சுயேச்சையாகப் போட்டியிடும் ராம்ஜேத் மலானியை காங்கிரஸ் ஆதரிக்கிறது. ஆனால், மாநிலத்தின் ஆளும்கட்சியும் பி.ஜே.பியின் மற்றொரு எதிரியுமான முலாயம் சிங்கின் கட்சி அவரை ஆதரிக்க மறுத்துவிட்டது.

இவ்வாறே காங்கிரஸ் நம்பியிருந்த பல தோழமைக்கட்சிகளும் பி.ஜே.பியை கவிழ்த்துவிடும். அதேநேரம் காங்கிரஸையும் கழுத்தறுத்துவிட முயல்கின்றன.

இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலமான பீகாரின் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் பி.ஜே.பியின் பரமவைரி. இதனால் சோனியாவை கண்ணைமூடிக் கொண்டு ஆதரித்துவந்தவர்.

இதனால் பீகாரில் லல்லு – காங்கிரஸ் கூட்டணியில் காங்கிரஸுக்கு கணிசமான அறுவடையை காங்கிரஸ் தலைமை எதிர்பார்த்தது. ஆனால் மொத்தம் 40 தொகுதிகளில் நான்கு தொகுதிகள்தான் இம்முறை காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்தமுறை 3 தொகுதிகளில் தான் காங்கிரஸ் வென்றது என்பது வேறு கதை. இதில் அதிர்ச்சி என்னவெனில் கடந்தமுறை பி.ஜே.பியுடன் இணைந்திருந்து பின்னர் முரண்பட்டுக் கொண்ட தலித்தலைவர் ராம்விலாஸ்பாஸ்வானின் கட்சிக்கு 8 தொகுதிகள் தரப்பட்டுள்ளன. இவர் முன்னர் லல்லுவுடன் கடுமையாக மோதியவர்.


வாஜ்பாய்


சோனியா

இருந்தாலும் காங்கிரஸ் கட்சி லல்லுவின் பங்கீட்டை ஏற்றுக்கொண்டுள்ளது. ஏனெனில் பி.ஜே.பிக்கு எதிரான அணியில் காங்கிரஸுக்கு அடுத்து மிகப்பெரிய பாங்காளிக்கட்சி லல்லுவின் கட்சி ஆகும்.

அவரது கட்சி 14 ஆண்டுகள் தொடர்ந்து பீகாரை ஆண்டுவருவது ஒரு சாதனை. அவர் அதிக ஆசனங்களை காங்கிரஸுக்கு தராவிட்டாலும் கணிசமான ஆசனங்களை அவரது கட்சி வென்றால் காங்கிரஸுக்கு அரசமைக்க அது பெரிதும் உதவும். மேலும் லல்லு பி.ஜே.பியுடன் உறவுகொள்வது ஒருபோதும் இயலாத காரியம் என்பதால் அவரது ஆதரவை காங்கிரஸ் நம்பியிருக்கலாம். ஆனால், பீகாரில கட்சியின் தலைவர்களுக்கு இந்த பங்கீட்டில் அதிருப்தியே. இதனால் கட்சி உடையும் ஆபத்தும் அங்கு உண்டு.

### தமிழக காங்கிரஸ் மீண்டும் உடையும்

காங்கிரஸ் கூட்டணியில் மற்றொரு பெரிய பங்காளிக்கட்சியான தி.மு.க கூட்டணியிலும் காங்கிரஸுக்கு பெரிய அறுவடை கிடையாது. பத்தே தொகுதிகளை – அதுவும் வெல்லமுடியாத தொகுதிகளை – கருணாநிதி காங்கிரஸுக்கு ஒதுக்கியதால் வேட்பாளர் தெரிவில் கடும்போட்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாரம்தான் தமிழ்நாட்டில் காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளிவரும் என்று தெரிகிறது. தமிழக காங்கிரஸின் கோஷ்டிப்பூசலால் பிரச்சினை இன்னும் சிக்கலாகியுள்ளது. காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து 1996 இல் மூப்பனார் உண்டாக்கிய தமிழ் மாநில காங்கிரஸ் மீண்டும் தாய்க்கட்சியுடன் இணைந்து மூப்பனார் மகனே தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும் உள்ளார்.

எனினும் த.மா.காவினர் எவருக்கும் தலைமைப்பீடம் போட்டியிட தொகுதிதராது என தகவல்கள் கசிந்ததை அடுத்து தமிழக காங்கிரஸ் மீண்டும் உடையும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

த.மா.கா தொண்டர்கள் தலைமைப்பீடத் தமிழகப்பொறுப்பாளர் கமல்நாத்தின் கொடும்பாவியை எரித்துவருகின்றனர். எனினும் கடைசிப்பட்டியல் வரும்வரை பொறுமைகாக்க வாசன் கேட்டுள்ளார்.

மற்றைய கட்சிகளெல்லாம் வேட்பாளரை அறிவித்து மும்முரமாக பிரசாரம் செய்து வருகின்றன. குறிப்பாக காங்கிரஸின் அணியிலிருக்கும் வைகோவின் கூட்டங்களுக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது. அவரும் தனது ஈழ ஆதரவுப் போக்கை தொடர்வேன் என அம்மேடைகளில் பகிரங்கமாக அறிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. சோனியா வைத்தாக்கி தனிப்பட்ட முறையில் பேசும் ஜெயலலிதாவை வைகோ கடுமையாக குறைகூறியுள்ளார்.

இவ்வாறு காங்கிரஸ் கூட்டணிக்கட்சிகள் தமிழகத்திலும் சரி, பீகாரிலும் சரி காங்கிரஸ் தலைவரை கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்தாலும் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை இந்த உறவுகள் கட்சி போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்து விட்டன.

### குறைந்த தொகுதிகளில் காங்கிரஸ் போட்டி

வரலாற்றில் ஒருபோதும் இல்லாதளவு குறைந்தளவான லோக்சபா தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டியிடப் போகிறது. அதன் கருத்து எண்ணவெனில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கமுடிந்தால், அது லல்லு, தமிழக கட்சிகள் மற்றும் கம்யூனிஸ்ட்களின் இன்றியமையாத ஆதரவுடனேயே அமையப்போகிறது. வேறுவார்த்தைகளில் சொன்னால் தனித்த காங்கிரஸ் ஆட்சி இந்த ஜென்மத்தில் கிடையாது.

வரலாற்றில் வேறு கட்சிகளின் தயவில் ஒரு காங்கிரஸ் ஆட்சி இருந்ததே இல்லை என்பதால் இது சுவாரஸ்யமான ஆட்சியாகவும் இருக்கும்.

கரேந்திரஜித்

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | வணக்கம் தாயகம் | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலன்கள் ரசித்தவை | ரிலாக்ஸ்டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | பிளக் பூஸ்டர் மூவி |
| 2.00 | (ரொமேன்ஸ்) | (அக்ஷன்) | (கொமடி) | (கிளசிக்) | (மங்கையர் நிகழ்ச்சி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | (விவரண சித்திரம்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.3[illegible] | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீபூம்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி—மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஓ போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | நகைச்சுவை நேரம் | வேலன் |
| 5.15—5.30 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத்தென்றல் | 5.30 இப்படிக்கு நீங்கள் 6.00 | வேலன் |
| 6.00 | களம் | இளைய கானம் | ஓப்போடு | பாடல்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒவ் கிரிகெட் | மின்னல் | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | மின்னல் | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அக்ஷன் சீரியல் | அக்ஷன் சீரியல் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | (அலைஸ்) | (24) |
| 8.00 | சக்தி செ[illegible]கள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | இளைய கானம் |

# மீண்டும் குற்றச்சாட்டு

இலங்கையை உலகறியச் செய்த நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மீது மீண்டும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது விக்கெட்டுக்களை வீழ்த்தும் முரளியின் நாகஸ்திரமான "தூஷ்ரா" என அழைக்கப்படும் பந்து வீச்சுக் குறித்தே இப்போது சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது.

இம்முறை முரளியின் மீது குற்றம்கண்டிருப்பவர் இங்கிலாந்து அணியின் முன்னாள் முன்னணித்துடுப்பாட்டவீரர் கிறிஸ்போர்ட்

இலங்கை — அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடருக்கு கிறிஸ் போர்ட் தான் ஆட்ட மத்தியஸ்தராக இருந்தார். இந்த தொடரில் முரளிதரன் மொத்தமாக 28 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தொடரின் இறுதியும் மூன்றாவதுமான டெஸ்ட் ஆட்டம் நிறைவடைந்த பின்பு முரளியின் "தூஷ்ரா" பந்து வீச்சு சர்வதேச கிரிக்கெட் விதிகளுக்கு முரணாக உள்ளதாகவும் இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கப் போவதாகவும் ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் நிர்வாக முகாமையாளர் அஜித் ஜய சேகரவிடம் கிறிஸ்போர்ட் தெரிவித்தார்.

முரளிதரனின் பந்து வீச்சு முறை குறித்து ஏற்கனவே அவுஸ்திரேலிய நடுவர் டெரல் முறையர் உள்ளிட்ட அவுஸ்திரேலியாவின் பல நடுவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது தெரிந்ததே. பின்னர் ஐ.சி.சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் முரளி பரிசோதிக்கப்பட்டு முரளியின் பந்து வீச்சு முறையில் குறையில்லை என நிரூபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் டெஸ்ட் ஆட்டங்களில் அதிக பட்ச விக்கெட்டுக்களான கொட்னி வோல்ஷின் 519 விக்கெட்டுக்கள் சாதனையை நெருங்குகிறார் முரளிதரன்.

இந்த சாதனையை ஷேன் வோர்ன் முறியடிப்பார் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது முடியாமல் போக இந்த மாதம் இலங்கை அணி ஸிம்பாப்பேக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளதால் முரளிக்கு அந்த வாய்ப்பு மிகப் பிரகாசமாக இருக்கிறது.

முரளிதரன் இந்த 519 விக்கெட் சாதனையை முறியடித்து புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்துவார்.



குறைந்தது 650 டெஸ்ட் விக்கெட்டுக்களையாவது கைப்பற்ற முடியும் என்று முரளி நம்புகிறார். அவ்வாறு 650 விக்கெட்டுக்கள் சாதனையை நிலை நிறுத்தினால் இனிவரும் காலங்களில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டு முன்னேறப் போகும் ஒரு சிறுவனால் மட்டுமே அந்த சாதனைய முறியடிப்பது சாத்தியப்படும்.

காரணம் தற்போது விளையாடுபவர்களில் ஷேன் வோர்னைத் தவிர முரளியின் சாதனையை நெருங்கக் கூடியவர்களாக எவரையும் குறிப்பிட முடியாது. அணில் கும்ளே கூட 384 டெஸ்ட் விக்கெட்டுக்களை மாத்திரமே தற்போது பெற்றுள்ளார். இந்த நிலையில் ஷேன் வோர்ன், அணில் கும்ளே இருவரும் விரைவில் ஓய்வு பெற்றுவிடுவர். எனவே முரளியின் சாதனை, முறியடிக்க முடியாத சாதனையாகப் போய்விடுமோ என்ற அச்சத்தில்தான் இவ்வாறான தொடர் குற்றச்சாட்டுக்கள் முரளி மீது சுமத்தப்படுகின்றனவா என்று கேள்வி எழுகிறது.

எது எப்படியோ முதல் குற்றச்சாட்டில் இருந்து மீண்ட பின்பு முரளியின் விக்கெட் வீழ்த்தும் திறன் சராசரி ஒரு படி அதிகரித்துள்ளது. தற்போது இரண்டாவது முறையும் முரளியின் மீது குற்றச்சாட்டை சுமத்தி இருப்பதன் மூலம் அவரின் சாதனை வேகத்தை குறைக்கவோ நிறுத்தவோ முடியாது. அதிகரிக்கவே செய்ய முடியும்.

தனா







இந்த வருடம்
புத்தாண்டை
குதூகலமாக
கொண்டாடுங்கள்

புத்தாண்டு காலத்தில் வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர், நண்பர்களிடமிருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தை பெற்று பண்டிகையை குதூகலமாக கொண்டாடுங்கள்.

உலகின் எப்பகுதியிலிருந்தும் விரைவாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும் நம்பிக்கையாகவும் இலங்கையில் பணத்தைப்பெற வெஸ்டர்ன் யூனியனின் பணமாற்றல் சேவையை பயன்படுத்தும் ஏனையோருடன் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

உலகெங்கிலும் லட்சக் கணக்கானோர் வெஸ்டர்ன் யூனியனில் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

108 செலான் வங்கி கிளைகளிலும் 152 மக்கள் வங்கி கிளைகளிலும் இச்சேவையை பெறலாம்.

வெஸ்டர்ன் யூனியன்
உலகெங்கிலும் பணத்தை அனுப்பவும் பெறவும் அதிதுரித வழி.

WESTERN UNION | பணப் பரிமாற்றல்

மக்கள் வங்கி

ஹொட்லைன். : 2452666

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமையகம்: செலிங்கோ சிலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3.
தொ. பே: 011-4701000, பெக்ஸ்: 2456456, ஈ-மெயில்: info@seylan.lk
வெப்சைட்: www.eseylan.com


இப்பத்திரிகை கொழும்பு — 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள வாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஏப்ரல் 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.